4-13

# இலண்டன் சுடரொளி

**CHUDEROLI** SEP - OCT புரட்டாசி-ஐப்பசி **2006**

# உலகை உலுக்கிய செஞ்சோலைத் தளிர்கள் படுகொலை




£ 1.00

வொல்தம்ஸ்ரோஸ் அருள்மிகு கற்பக விநாயகர்
மகா உற்சவம் / தேர்த் திருவிழா சிறப்புடன் நடைபெற வாழ்த்துகிறோம்.

# Kumarans

பூவையரின் உள்ளத்தைப் பூரிக்க வைக்கும் புடவைத் தினுசுகள்
நவநாகரிக அலங்காரப் பொருட்கள் வீட்டுப் பாவனைப் பொருட்கள்



இவை அனைத்தையும் ஒரே இடத்தில்
பெற்றுக் கொள்ள லீலா தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

## குமரன்ஸ்

லீலா

**Official UK Distributors**
**For The Following**

SAKTHI MASALA
KRISHNA
LION LAGER

**Tel : 020 8521 3444**
**Fax : 020 8521 9444**

**136 Hoe Street, Walthamstow**
**London E17 4QR**

உங்கள் உறவுகளின் மனம் மகிழ
வங்கி மூலமாக உடனடிப்
பணமாற்றுச் சேவையும்
இங்கு உண்டு.

E mail : mages@kumarans.uk.com

E mail : textile@kumarans.uk.com

# சுடரொளி
# CHUDEROLI

*கலை இலக்கிய அரசியல் சமூக இதழ்*

*சுடர் 4 ஒளி 13 புரட்டாசி-ஐப்பசி 2006*



***கௌரவ ஆசிரியர் :***

*திரு. சி. சரவணபவன் (சிற்பி),* M.A.,

***ஆசிரியர்கள் :***

*திரு. பொன் பாலசுந்தரம்*

*திரு. ஐ.தி. சம்பந்தன்*

***ஆசிரியர் குழு ஆலோசகர்கள் :***

*திரு. மயில் மனோகரன்*

*திரு. எஸ். கருணானந்தராசா*

*திருமதி. திருச்செல்வஉமா ஜெயக்குமார்*

***நிர்வாகம் :***

*திருமதி. செல்வதி சம்பந்தன்,* B.A,(Hons)

***வடிவமைப்பு :***

*உலகத் தமிழர் பதிப்பகம்*

***கணினி :***

*திருமதி. சரோஜா இலட்சுமணன்*



***வெளியீடு :***

Chuderoli Publication Society,
15, Rutland Road, London E7 8PQ
United Kingdom
Tel : 0044 208 552 6992
Mob : 07957 666 598
Email : itsampanthan@hotmail.com

***தமிழகப் பிரதிநிதி :***

*திரு. இரா. மதிவாணன், எம்.எஸ்.ஸி.,*
4, Sourashtra Nagar, 7th Street,
Choolaimedu, Chennai - 600 094.
Tel : 0091 44 55180155/0 9444 111 951
E-mail : eramathi@rediffmail.com

***மலேசியப் பிரதிநிதி :***

*திரு. பியாரன் ஈழவேங்கை*
Tel : 006 03 350 9910
E-mail : rescue247tamilworld@yahoo.com

Annual Subscription (six issues)

| | | |
|---|---|---|
| UK | : | £ 12 |
| Europe | : | £ 15 |
| India | : | Rs. 150 |
| Sri Lanka | : | Rs. 300 |
| All other countries | : | £ 20 |

படைப்பின் கருத்துகளுக்குப் படைப்பாளரே பொறுப்பு


## இந்த இதழில்


| | | |
|---|---|---|
| 1. | எமது நோக்கு : தீர்வின் எல்லையில் ஈழத் தமிழர்கள் | 3 |
| 2. | மலையக மனிதர்கள் - தெளிவத்தை ஜோசப் | 5 |
| 3. | தமிழ்த்தந்த தாதாக்கள் | 6 |
| 4. | ஈழத்து நாடகமேதை வைரமுத்து | 9 |
| 5. | சத்திய தரிசனம் - சிற்பியின் சிறுகதை | 12 |
| 6. | உலகத் தமிழர் கற்க வேண்டிய படங்கள் | 15 |
| 7. | "புலிகள்.... எம்.ஜி.ஆர்... கலைஞர்..." - வை.கோ. | 20 |
| 8. | யோகேஸ்வரி சிவப்பிரகாசம் நூல் வெளியீடு | 22 |
| 9. | உலகத் தமிழர் பேரமைப்பின் சேலம் மாநாடு | 25 |
| 10. | சோனியா காந்திக்குக் கவிப்பேரரசு வைரமுத்து வேண்டுகோள் | 26 |
| 11. | யாழ் ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் | 29 |
| 12. | ஈழம் பிரபாகரனுடன் ஒருநாள் - பாரதிராஜா | 31 |
| 13. | கொழும்பு தமிழ்ச்சங்க பரீட்சை முடிவுகள் | 33 |
| 14. | புலவர் வே. அகிலேசப்பிள்ளை | 38 |
| 15. | திட்டமிடுவோம்! வெற்றி பெறுவோம்!! | 43 |




## திருக்கேதீச்சர சிவத்திரு நமச்சிவாயம் ஐயா

அகவை 94 எய்தியுள்ள சைவப் பெரியார் சிவத்திரு. இ. நமச்சிவாயம் ஐயா கடந்த 30 ஆண்டுகளாக வரலாற்றுப் பெருமை பெற்ற திருக்கேதீச்சரத் திருப்பணி களில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர். சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களின் பின்னர் திருக்கேதீச்சரத் திருப்பணிகளில் பெரும் சாதனை புரிந்தவர்.

இந்திய அரசின் நிதி உதவியைப் பெறுவதில் வெற்றி பெற்று ரூ. 20 கோடி வரை திருப்பணி நிருவாகத்திற்காகச் செலவிட்டுள்ளார். புலவர் திருநாவுக்கரசு போன்றோரின் துணையுடன் தற்போதைய போர்ச் சூழலிலும் மீள்கட்டமைப்புப் பணிகளை மேற்கொணருவதில் வல்லவர்.

தமது 94-ஆவது வயதிலும் பேரப்பிள்ளையின் திருமணத்திற்காக இலண்டன் வந்திருந்த அப்பெரியாரைச் சந்தித்து உரையாடியபோது அவரிடம் காணப்பட்ட உற்சாகத்தையும் அபரிமிதமான ஞாபக சக்தியை யும் கண்டு அதிசயித்தேன்.

தமிழர் தாயகத்திலுள்ள திருக்கேதீச்சரமே சொர்க்க பூமி எனக் கொண்டுள்ளார். தமிழ்த் தேசிய உணர்வு கொண்ட பெரியார். வாழ்விலும் சாவிலும் திருக்கேதீச்சரமே தஞ்சம் என்னும் உணர்வுடன் வாழ்பவர்.

1912 இல் தமிழீழம் மூளாயில் பிறந்த இவர் ஐந்தாவது வயதில் தந்தை இராசப்பிள்ளையை இழந்தார். தாயாரினதும் உறவினரதும் உதவி யுடன் கல்வி கற்றுச் சட்டத்தரணியானார். 1941இல் தமது சட்டத்தரணித் தொழிலைக் கொழும்பில் ஆரம்பித்தார். செட்டிநாட்டார் நிறுவனங்களின் சட்டத்தரணியானார். நிறைய உழைத்தார்.

1944ல் முன்னாள் வட்டுக்கோட்டை எம்.பி.யாகவிருந்த கனவான் கனகரத்தினத்தின் மகள் விஜயலட்சுமியை திருமணம் செய்த சிறப்பான இல்லற வாழ்க்கை நடத்தி வந்தார்.

இளமையிலேயே ஆலயப்பணிகளில் ஈடுபாடு கொண்ட இவர் 1951ல் திருக்கேதீஸ்வரம் புனருத்தாரண சபையின் தொடர்பு ஏற்பட்டது. அதனால் சேர் கந்தையா வைத்திய நாதன் அவர்களுடன் நெருக்கமானார். 1976லிருந்து திருக்கேதீச்சர திருப்பணிச் சபையின் பொறுப்பான பதவி களை வகுத்தார். அன்றிலிருந்து இன்று வரை இத்தெய்வீகப் பணியில் தீரமாக ஈடுபட்டுவரும் இவர் சென்றாண்டு திருப்பணிச் சபையின் ஆயுள் தலைவராக்கப்பட்டுள்ளார்.

2007 ஏப்பிரலில் அகவை 95 நிறைவு செய்யும் இப்பெரியாரின் பிறந்தநாள் விழாவை ஆன்மிகப்பெருவிழாவாகக் கொண்ட சைவ உலகம் காத்திருக்கிறது. சைவப் பெரியார் சிவத்திரு. நமச்சிவாயம் ஐயா அவர்கள் நீண்டகாலம் வாழ்ந்து சைவத் தமிழ் உலகிற்கு நற்பணியாற்ற சுடரொளி வெளியீட்டுக் கழகம் வாழ்த்திக் கௌரவிக்கிறது.

*(இப்பெரியார் பற்றிய கட்டுரை அடுத்த இதழில் வெளிவரும்.)*

ஐ.தி. சம்பந்தன்

சிந்தனைப் பகுதி

# கேட்டறியோம் உன்னைக் கண்டறிவாரை

சின்னையா மாசிலாமணி

ஆதி, அந்தம், போக்கு, வரவு இவை எதற்குமே அடங்காத பரம் பொருளின் அடி முடி தேடிய சம்பவம் பற்றி இந்து சமயத்தில் காலம் காலமாகச் சொல்லப் படுகிறது. பூமி தட்டையானது; அதன் அடியைத் தேட வேண்டுமென்றால் நிலத்தைத் துளைத்துக் கொண்டு போய்த்தானே ஆகவேண்டும். மேலுள்ள முடியைத் தேடவேண்டுமென்றால் மேலே மேலே பறந்துதானே ஆகவேண்டும். அதனாற்றான் அயன் அன்னத்தின் வடிவில் பறந்தார். மால் பன்றியின் வடிவில் நிலத்தைத் துளைத்தார்.

இன்று அறிவியல் உலகு இந்தக் கதையை நகைப்புடன் நோக்கலாம். ஆனால் அன்று கூறிய அடி முடி தேடிய சம்பவத்தின் கேள்விக்கு எப்படி விடை கிடைக்கவில்லையோ அதே நிலைதான் இன்றும். மூன்று பரிமாணங்கள் போதாதென்று காலத்தை நாலாவது பரிமாணமாகக் கொண்டு எத்தனையோ செய்தும் நிலை என்னவோ ஒன்றுதான். ஒளியின் வேகத்தில் கணக்குகள் போட்டும் எல்லையைக் காண முடியவில்லை. பிக்பாங் கோட்பாட்டின்படி ஆயிரத்தில் இருந்து ஆயிரத்து எண்ணூறு கோடி ஆண்டுகளாக மையத்திலிருந்து விலகி ஓடும் விண்மீன்கள் தொடர்ந்தும் ஓடிக்கொண்டே இருக்கின்றன. எல்லையை இன்னும் கண்டபாடில்லை.

அன்று மிகவும் எளிய முறையில் இதை உணர்த்த முற்பட்டார்கள். தங்களிடம் இருந்த தரவுகளை வைத்து மேலே பறந்து முடியையும் கீழே துளைத்து அடியையும் தேடுவதுபோல் சொல்லி உண்மையை உணர்த்த முற்பட்டார்கள். அன்றைய மனிதனின் அசைக்க முடியாத நம்பிக்கை அது. நாம் ஒப்பு உவமைக்குப் பலகாலம் பின் நோக்கிச் செல்லத் தேவையில்லை. 16ஆம் நூற்றாண்டில் மேற்கு நோக்கிப் புறப்பட்டுக் கிழக்கால் திரும்பிவந்து உலகை உருண்டை என்று நிரூபித்த சான்ரனோ அன்ரனியோ என்ற கப்பலிலும் அதனுடன் சென்ற மேலும் நாலு கப்பல்களிலும் சென்ற மாலுமிகள், அவர்களின் கப்பல் தட்டையான உலகின் எல்லையை நோக்கிச் செல்வதால் ஒரு நாளில் எல்லையை அடைந்ததும் அதள பாதாளத்தில் மறைந்து விடும் என்று பயந்து கப்பலைத் திருப்ப முற்பட்டு அவர்கள் தலைவன் மகெலனுக்கு எத்தனை தொல்லை கொடுத்தார்கள். ஆகையால் அன்றைய மால் அயன் கதையைவிடச் சிறந்த எதையுமே எளிய முறையில் இந்த விடயத்தில் சொல்லியிருக்க முடியாது.

எந்த விடை அன்று கிடைக்கவில்லையோ அது இன்றும் கிடைக்கவில்லை. இனியும் கிடைக்கும் என்பதற்கு எவ்வித ஆதாரமும், இன்னும் இல்லை. இதனால்தானோ நம் முன்னோர் இறைவனுக்கு எத்தனை அடைமொழிகள் உபயோகித்தார்கள். கங்குல் பகல் அற்றது, கற்பனையைக் கடந்தது. அங்கிங்கெனாதது என்று பட்டியல் நீண்டுகொண்டே போகும். இவை எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற்போல் அமைவது தான் மணிவாசகரின், சிந்தனைக்கும் அரியாய், போக்கிலன் வரவிலன் என்று உன்னைப் பாடுவதைக் கேட்டோம் அல்லால் உன்னைக் கண்டறிந்தோர் என்று ஒருவரையாவது நாங்கள் கேள்விப்பட்டதே இல்லையென்னும் அடைமொழி. ❋

## குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் குருபூசை விழா

நினைக்க முத்தியளிக்கும் திருவண்ணாமலைப் பதியிலே அவதரித்தவர்கள் குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதின முதல்வர் திருவருள் திரு தெய்வசிகாமணி தேசிய பரமாச்சாரிய சுவாமிகள், இவர்கள் சைவசமய சந்தான குரவர்களுள் ஒருவராகிய அருணந்திசிவத்திடம் ஞானோபதேசம் பெற்ற ஞானப் பெருங்குரவர். அருள் ஞான வள்ளலாகிய இப்பெருங்குரவர் ஆற்றிய அற்புதச் செயல்கள் பல. இவர்கள் தம் அருமைச் சீடர்களுக்குச் சிவஞானத்தை அருளிச்செய்து திருவண்ணாமலை பதியிலே சிவசமாதியாகி அருள்பாலித்து வருகிறார்கள்.

இத்தகைய ஞானப்பெருங்குரவராகிய ஆதினக்குரு முதல்வரின் குரு பூசை விழா 9-09-2006 அன்று நிகழவுள்ளது.

இந்நிகழ்வின்போது தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ''அருள்நெறி முழக்கம்'' நூல் வெளியிடப்படும்.

திரு. சு.கி. சிவம் ''அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி'' தமிழாகரர் திரு. தெ. முருகசாமி ''திருமூலர் திருநெறி'' என்னும் விடயங்கள் பற்றிச் சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

திருவருள்திரு. குருமகா சன்னிதானம் அவர்கள் திரு. சு.கி. சிவம் அவர்களுக்கு ''நற்றமிழ் நாவலர்'' என்னும் பட்டம் வழங்கிப் பாராட்டப்படுவர்.

அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு கே. ஆர். பெரியகருப்பன். திரு. முனைவர் பி. மருதமுத்து (துணைவேந்தர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்

தொடர்பு : திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி - 630 206, சிவகங்கை மாவட்டம்.

# எமது நோக்கு

## தீர்வின் எல்லையில் ஈழத் தமிழர்கள்

இந்தியா சுதந்திரம் அடைந்தபோது இலங்கைக்குப் போராட்டம் எதுவுமின்றி இலகுவாகச் சுதந்திரம் கிடைத்தது. இலங்கை சுதந்திரம் அடைந்த போது ஈழத் தமிழர்கள் 50க்கு 50 அதாவது சுதந்திரப் பாராளமன்றத்தில் சிங்களவர்களுக்கு 50 வீதமும் இலங்கையிலுள்ள சிறுபான்மை இனத்தவர்களுக்கு 50 வீதமும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர். ஐக்கிய இலங்கையில் வாழ்வதற்கு இந்தச் சமபலன் போது மானதெனத் தமிழ்த் தலைவர்கள் கருதினார்கள். சோல் பரி ஆணைக்குழு இந்தக் கோரிக்கையை நிராகரித்து விட்டது. மாற்றாக அறுபதும் நாற்பதும் என்ற கோரிக் கையை ஆணைக்குழு முன்வைத்தது. அதைத் தமிழ்த் தலைவர்கள் ஏற்கவில்லை என்று கூறப்படுகிறது.

பிரித்தானிய அரசு சிறுபான்மையோரின் உரிமை கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதற்காக அரசியல் சட்டத்தில் 29ஆவது சரத்தைப் புகுத்தியது. அவ்வாறு வழங்கப்பட்ட சிறுபான்மை இனத்திற்கான உரிமையையும் 1972இல் சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசு நீக்கிவிட்டது.

இந்த நாட்டு அரசியல் சட்டத்தில் தமிழ் பேசும் மக்களுக்குச் சட்டரீதியான உரிமை எதுவும் உறுதி செய்யப்படவில்லை. இனவாத சிங்கள அரசு தமிழர் களை அழித்தொழிப்பதற்கான சட்டங்களை ஆக்கக் கூடிய வலுவுள்ள அரசியல் சட்டமே இலங்கை அரசியல் சட்டமாகும். இச்சட்டத்தைப் பயன்படுத்தித் தமிழர்களுக் கெதிராகப் பல கொடூரச் சட்டங்களை நிறைவேற்றி ஜனநாயகம் என்ற போர்வையில் தமிழர்களை அடக்கி ஒடுக்கி அழித்தொழித்து வருகின்றனர்.

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தபோது சிங்களத் தலைவர்கள் "எங்களை நம்புங்கள் ஐக்கிய இலங்கை யில் சமஅந்தஸ்துடன் வாழ வழிசெய்வோம்" என்றார்கள். கூறியவர் தேசப்பிதா டி.எஸ். சேனநாயக்கா. தமிழருக்குச் செய்த நம்பிக்கைத் துரோகத்தால் குதிரையில் சவாரி செய்யும்போது குப்புற விழுந்து மடிந்தார்.

டி.எஸ். சேனநாயக்காவின் வார்த்தையைத் தமிழ்த் தலைவர்கள் நம்பினார்கள். நம்பி அரசுடன் ஒத்துழைத்தார்கள். இறுதியில் ஏமாற்றிவிட்டார். அதனால், இன்று நாடு இரண்டாகப் போனது. இதைச் சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டு ஒன்றிற் குள் தமிழர்களை இரண்டாம்தரப் பிரசைகளாக நடத்தும் படலத்தைச் சிங்கள அரசு தொடங்கியது. இதன் முதல் கட்டமே 10 இலட்சம் மலையகத் தமிழர்களின் வாக்கு உரிமை, குடியுரிமை பறிக்கும் சட்டம் பாராளு மன்றத்தில் அரங்கேற்றியது. தமிழ்த் தலைவர்கள் விழித்துக் கொண்டனர்...

ஈழத் தமிழர்கள் கௌரவத்துடன் வாழவேண்டு மென்றால் தமிழருக்கென ஒரு தமிழரசு அமைக்கப்பட வேண்டுமென்ற சிந்தனை தமிழ்த் தலைவர்களிடையே வலுப்பெற்றது. அதை அடைவதற்கு முப்பது ஆண்டு காலம் மேற்கொண்ட அகிம்சை வழி அறப்போராட்டம் வெற்றியளிக்கவில்லை.

அதன் வெளிப்பாடே தமிழீழமாக உருவெடுத் தது. 1976இல் வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தேசிய மகாநாட்டில் தமிழீழக் கோரிக்கைக்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. பின்னர் 1977இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழீழத்திற்கு வட கிழக்குத் தமிழ்பேசும் மக்களின் முழுமையான அங்கீ காரம் கிடைத்தது.

அந்த அங்கீகாரத்தை ஆயுதப் போராட்டம் மூலம் முன்னெடுத்து வருபவர்கள் விடுதலைப் புலிகளே. கடந்த 24 வருடங்களாக நடைபெற்று வரும் போராட்டத் தினால் 18,000 மேற்பட்ட போராளிகளையும் எண்பதா யிரத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்களையும் பலி கொடுத் துள்ளோம். அதன் பயனாகத் தமிழர் தாயகத்தின் 60 வீதமான நிலத்தை விடுதலைப் புலிகள் தமது கட்டுப் பாட்டில் கொண்டு வந்துள்ளனர். மேலும் யாழ்குடா நாட்டைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவிருந்த வேளையில் இந்தியாவின் தலையீட்டால் தடைப்பட்டது. இந்தியா அன்றுவிட்ட தவற்றை இன்று நிறைவு செய்ய வேண்டிய காலகட்டம் வந்திருக்கிறது. பாகிஸ்தான் இலங்கை அரசிற்கு முட்டு கொடுக்க வந்திருக்கும் இச் சந்தர்ப்பத்தில் இலங்கைத் தமிழர்களை அழிவிலிருந்து காப்பாற்றவேண்டிய கடமைப்பாடு இந்தியாவுக்கு உண்டு.

தமிழீழ இராணுவம் வலுவாக இருப்பதை உணர்ந்த சிங்கள அரசு 2001இல் விடுதலைப் புலிகளு டன் சமாதான ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. பேச்சு வார்த்தை மூலம் அரசியல் தீர்வைக் கொண்டுவரலாம் என இருதரப்பினரும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

பேச்சு வார்த்தை என்று நான்கு ஆண்டுகள் சிங்கள அரசு காலத்தைக் கடத்திவந்தது. விடுதலைப்

புலிகள் சர்வதேச சமூகத்தில் மதிப்பளித்து ஒஸ்லோ மகாநாட்டில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்கு இணங்கினார்கள். இதன் மூலம் விடுதலைப் புலிகள் காட்டிய நல்லெண்ணத்தை இலங்கை அரசு பயன்படுத்தத் தவறிவிட்டது. அதிகாரப் பரவலாக்கல் மூலமாக அரசியல் தீர்வைக் கொண்டுவர சிங்கள அரசு தயாரில்லை என்பது சர்வதேச சமூகத்திற்குத் தெரிய வந்துள்ளது.

இப்பொழுது பதவிக்கு வந்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸாவின் சிங்களப் பேரினவாத அரசுக்கும் சமஷ்டி அடிப்படையிலான தீர்வைக் கொண்டு வருவதற்குத் தேசியத் தலைவர் திரு. பிரபாகரன் அவர்கள் அவகாசம் வழங்கியிருந்தார். இந்தக் கால கட்டத்தில் சிங்கள அரசு பாகிஸ்தானுடன் இணைந்து சிங்கள இராணுவத்தைப் பலப்படுத்தித் தமிழர்களை இனக்கொலை செய்து வருகிறது. சமாதான ஒப்பந்தம் நடைமுறையிலிருக்கிறது என்று சொல்லிக் கொண்டு தமிழர்களுக்கெதிராகப் பெரும் போரைத் தொடங்கியுள்ளது. இதை விடுதலைப் புலிகள் எதிர்கொள்ளத் தயாராகவுள்ளனர்.

போர் நிறுத்த ஒப்பந்தம் இன்னமும் அமுலில் இருப்பதனால் முழுமையான இராணுவ நடவடிக்கையைப் புலிகள் மேற்கொள்ளமுடியாத நிலையில் உள்ளனர்.

இலங்கை இராணுவம் தமிழர்களுக்கு எதிராக நடத்திவரும் இனக் கொலைகளினால் உலகத் தமிழர்கள் கொதிப்படைந்துள்ளனர். விடுதலைப் புலிகள் தமிழீழத்தை நோக்கியே தமது போராட்டத்தை முன்னெடுக்க வேண்டுமென அறை கூவல் விடுத்த வண்ணமுள்ளனர். தமிழீழத்தை நோக்கிய இறுதிப் போராகவே விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கை அமையப் போகிறது என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். தேவையற்ற முறையில் சர்வதேச சமூகம் தலையிடாதிருப்பின் ஈழத் தமிழர்கள் தமது இலட்சியத்தை விரைவில் அடைவார்கள் என்ற நம்பிக்கை உலகத் தமிழர்களிடையே வலுவடைந்து வருகிறது.

எனவே ஈழத் தமிழர்கள் தீர்வின் எல்லைக்கு வந்துள்ளனர். யூதர்களுக்கு இணையானவர்கள் ஈழத் தமிழர்கள் என்பதை உலகம் அறிந்து கொள்ளளும் காலம் தூரத்திலில்லை. *

# சம்பந்தர் விழா

- தீவகம் வே. இராசலிங்கம்

*(இலண்டனில் இருக்கும் சம்பந்தர் ஆற்றுகின்ற நூல் வெளியீட்டுப் பணியைச் சிறப்பாக்கும் வகையில், செந்தமிழர் வளர்த்த செம்மல்கள் என்ற நூலின் வெளியீடு கனடாவில், ஸ்காபரோ சிவிக் மண்டபத்தில் நடைபெற்றபோது திரு. ஐ.தி. சம்பந்தரை வாழ்த்தி உரைத்த பாக்கள் இவை.)*

**ஆய்கின்ற அரசியலும் ஆடுகின்ற வெங்களமும் அலசிப் பார்த்துப்**
**பேய்நின்று ஆடுகின்ற பெருங்கொழும்பு நகரத்தின் பிணக்குச் சொல்லி**
**வாய்மைக்கும் வதைகளுக்கும் வகைநிற்கும் வரலாற்றை வரைந்து காட்டி**
**ஆய்வுதரும் நல்லாளர் அன்பர்திரு தலைமைக்கென் அன்பின் வணக்கம்.**

**பேனாவின் வழிநின்று பெருங்கதையாய் மண்கதையைப் பிழிந்து சாறாய்**
**ஊனின்றி ஓய்வின்றி உறக்கமின்றி எழுதிவைக்கும் உயர்வின் சான்றோர்**
**நானின்று பார்க்கின்றேன் நயக்குமிந்த அறிஞர்குழாம் நாடு எங்கும்**
**தானின்று ஆடுவதால் தாய்நிலத்தை எழுதிவைக்கும் தகைமை கண்டேன்!**

**எறும்பூர்ந்து செல்லுதல்போல் இயற்போதில் சுறுசுறுப்பு இலங்கும் செம்மல்**
**நறும்காலைப் பொழுதெழுந்து நல்லிறைவன் தாள்பணிந்து நாளின் பணிகள்**
**கரும்பெனவே மனதெண்மி கரங்களிலே எடுத்துவைத்துக் களம்போல் ஆடும்**
**அரும்புதல்வர் சம்பந்தன் ஆய்ந்தெழுதும் வரலாற்று அறிஞன் வாழ்க!**

**அன்றொருநாள் அமைச்சகத்தில் அவர்பணியின் அழகுதன்னை அருகில் நின்று**
**என்புருக வாய்மொழிந்து இயற்றியதோர் வேகத்தை எண்ணிப் பார்த்தேன்**
**பொன்தலைவர் செல்வாவின் பெருங்காலம் தொழிற்சங்கம் பேற்றை ஆக்கி**
**வென்றிருந்த சம்பந்தன் விளங்கிநின்ற காலத்தின் விளைவே இன்றாம்!**

**எந்நாவின் வேகத்தை இயலுகின்ற எழுத்தையவா் இசைவாய்க் கண்டு**
**நம்நாடு ஐரோப்பா நானிலத்தின் பக்கமெலாம் நடுவே சென்று**
**செம்மொழியாம் தமிழினிக்கச் செறிகனலாய் எடுத்துவைத்த சிறப்பைப் பார்த்தேன்.**
**எம்மொழியின் இயல்பெண்ணி ஏற்றங்கள் மனதெண்ணும் இதயன் சம்பத்!**

**சம்பந்தன் எடுத்துவைத்துச் சாற்றுகின்ற பணிகளெலாம் சரிதம் ஆக்கும்**
**வெம்களத்தில் ஆடுகின்ற வீரர்மனக் கோவிலிலே வேதம் காட்டும்**
**எம்நிலத்துத் தலைவனவன் எழிற்பிரபா உதித்தகதை இயக்கம் காட்டும்**
**செம்மொழியைச் செந்தமிழைத் தேசமிடும் சம்பந்தன் சேவை வாழ்க!**

சுதந்திரமானவனாக இரு. எவரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்காதே. நான் உறுதியாகச் சொல்வேன்-உனது கடந்த கால வாழ்க்கையை நீ பின்னோக்கித் திரும்பிப் பார்ப்பாயானால், நீ வீணாக எப்போதும் மற்றவர்களிடமிருந்து உதவியைப் பெற முயற்சி செய்ததையும், அப்படி எதுவும் வராமற் போனதையும் தான் காண்பாய். வந்த உதவிகள் எல்லாம் உனக்குள்ளிருந்து வந்தவையாகத் தான் இருக்கும். - *விவேகானந்தர்*

மலையக
மனிதர்கள்

# தெளிவத்தை ஜோசப்

**என். செல்வராஜா, நூலகவியலாளர், இலண்டன்**

மலையக மக்களின் வாழ்வியலை இலக்கிய மாக்கித் தமிழ் உலகில் மலையக இலக்கியம் என்றொரு ஈழத்து இலக்கியப் பரப்பினை உருவாக்கிய மண்ணின் மைந்தர்களுள் **தெளிவத்தை ஜோசப்** முக்கியமானவர். அறுபதுகளில் தொடங்கி, கடந்த 45 ஆண்டுகளுக்கும் மேலாக நாவல், சிறுகதை, நாடகம், கட்டுரைகள் என்று எழுதி வருபவர். இலங்கையின் சாகித்திய மண்டலப் பரிசு, கலாபூஷணம் விருது உள்ளிட்ட பல்வேறு பரிசு களையும் விருதுகளையும் பாராட்டுகளையும் வென்ற வர். இலங்கையில் மாத்திரமின்றித் தமிழகத்திலும் தனது எழுத்துகளால் பெயர் பெற்றவர்.

திருச்சி மாவட்டத்திலிருந்து இலங்கையின் தேயிலைத் தோட்டங்களில் இயங்கும் பள்ளிகளுக்கு ஆசிரியராகப் பணிபுரியவென மலையகத்துக்கு வந்து சேர்ந்து பதுளையில் கட்டவளை என்ற ஊரில் ஊவாக் கட்டவளைத் தோட்டத்தில் ஆசிரியராகப் பணியாற்றி யவர் சந்தனசாமிப்பிள்ளை. இவருக்கும் இவரது துணைவியார் பரிபூரணத்திற்கும் 16-02-1943 இல் மகனாகப் பிறந்த ஜோசப் பின்னாளில் மலையகத்தின் தெளிவத்தையில் ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் தன் பெயருடன் தெளிவத்தையையும் இணைத்துக் கொண்டார்.

சென்னையிலிருந்து வெளிவந்த சிற்றிலக்கிய ஏடான உமா என்ற சஞ்சிகை அறிமுகப்படுத்திய அட்டைப்படக்கதைப் போட்டியில் வாழைப்பழத்தோல் என்ற தனது முதலாவது கதையை எழுதியதன்மூலம் இலக்கிய உலகில் பாதம் பதித்தவர் இவர். பின்னர் வீர கேசரியின் தோட்ட மஞ்சரி என்ற பக்கத்தில் இவரது படைப்பிலக்கியங்கள் வெளிவர ஆரம்பித்தன.

தெளிவத்தை ஜோசப் அவர்களின் சிறுகதைகளைத் தொகுத்து மு. நித்தியானந்தன் அவர்கள் தனது வைகறை வெளியீட்டகத்தினால் நாமிருக்கும் நாடே என்ற தலைப் பில் ஒரு நூலை வெளியிட்டார். இந்நூல் 1979ஆம் ஆண்டுக்கான அரச சாகித்திய விருதினைப் பெற்றுக் கொண் டது. இவ்விருதினைப் பெற்ற முதலாவது மலையக எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் அவர்களாவார்.

1964 ஜூன் மாதத்தில் தெளிவத்தை ஜோசப் மலையகத்திலிருந்து கொழும்புக்கு வந்து வாழ்ந்த காலங் களில் மலையக எழுத்தாளர்களான சாரல்நாடன், என்.எஸ்.எம். ராமையா, செந்தூரன், சிவலிங்கம் போன் றோருடன் நெருங்கிய இலக்கியத் தொடர்பு ஏற்பட்டது. அதன்பின்னர், இலைமறைகாயாக இருந்த இவரது இலக்கியவளம் வெளியுல கின் கவனிப்புக்கு உள்ளாகி யது. 1968 இல் திருமணம் முடித்த தெளிவத்தை ஜோசப், பின்னர் கொழும்பின் புற நகரான வத்தளையில் வாழ்ந்து வருகின்ற போதிலும் இவரது இலக்கியத் தொடர்பு இலங் கையில் மாத்திரமின்றி இந்தியா ஐரோப்பா வரை நீண்டுள்ளது. கடந்த 2003 ஆம் ஆண்டில் இலண்டன் விஜயமொன்றினை மேற் கொண்டிருந்த தெளிவத்தை ஜோசப் அவர்கள் ஒக்டோபர் 18ஆம் திகதி, மலையகம்:-நூற்றாண்டுத் துயரம் என்ற கருத்தரங்கில் கலந்துகொண்டுச் சிறப்புரை யாற்றியிருந்தார். தமிழியல் மற்றும் இலண்டன் கலை இலக்கிய நண்பர்கள் அமைப்பினர் இந்நிகழ்வினை ஒழுங்கு செய்திருந்தனர்.



தினகரன் வாரமஞ்சரியில் தொடராக வெளிவந்த மலையகச் சிறுகதை வரலாறு என்ற இவரது ஆய்வு, இலக்கியவாதிகளிடையே விதந்து பேசப்பட்டது. இத் தொடர் அமரர் துரை விஸ்வநாதன் அவர்களது துரைவி பதிப்பகத்தினால் பெப்ரவரி 2000ஆம் ஆண்டில் நூலுருவாக்கப்பட்டு அவ்வாண்டுக்கான அரச சாகித்திய விருதையும், யாழ்ப்பாணத்திலிருந்து சம்பந்தன் விருதை யும் பெற்றுக் கொண்டது.

சென்னையிலிருந்து சுபமங்களாவும் இலங்கை தேசிய கலை இலக்கியப் பேரவையும் இணைந்து நடத்திய குறுநாவல் போட்டியில் தெளிவத்தை ஜோசப் பின் குடைநிழல் என்ற குறுநாவல் வெற்றி பெற்றது.

மலையக இலக்கியத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர், தமிழ்த் திரைப்படத்துறையையும் விட்டு வைக்கவில்லை. புதிய காற்று என்ற இலங்கைத் திரைப் படத்தின் கதை வசனகர்த்தாவாகவும் இவர் பங்களித்துள் ளார். ரூபவாகினியில் ஒளிபரப்பாகிய காணிக்கை என்ற தொலைக்காட்சி நாடகத்தையும் வெற்றிகரமாக உருவாக்கி யிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈழத்துத் தமிழிலக்கியத்துறையில் ஓர் இன்றியமை யாத மனிதராகத் திகழும் தெளிவத்தை ஜோசப் அவர்கள், எதிர்காலத்தில் மலையக இலக்கியம் பற்றிய ஆய்வுத் தேடலில் ஈடுபடவுள்ள ஆய்வாளர்களால் தவிர்க்கப்பட முடியாதவராக என்றென்றும் இருப்பார். ✱

பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினம் எழுதிய

# தமிழ் தந்த தாதாக்கள்

## ஈழத்துக்குப் புகழீட்டிய மறைசை அந்தாதி

மறைசை என்பது திருமறைக்காடு, அதை வேதாரணியம் எனவும் வழங்குவர். திருமறைக்காடர் என்பது மறைக்காட்டில் எழுந்தருளியுள்ள மணாளனாய இறைவனின் திருநாமம்.

யாழ்ப்பாணத்து மக்கள் திருமறைக் காட்டோடு மிகவும் நெருங்கிய தொடர்புள்ளவர்கள். திருமறைக் காட்டில் கணக்குப் பிள்ளையாய் இருந்த கேடிலியப் பிள்ளை என்பாருக்கு யாழ்ப்பாணத்துத் தொடர்பு இருந்தது என்று நடேசபிள்ளை ஒரு சமயம் ஆராய்ந்ததும் உண்டு. இன்றும் திருமறைக்காட்டுத் தேசிகர் பலர் எம்மிடையே வாழ்ந்து வித்தியாரம்பம், சிவதீட்சை முதலிய கருமாக்களை நல்ல முறையில் செய்கிறார்கள். ஒரு தலைமுறைக் காலத்துக்கு முன்னர் எம் மத்தியில் வாழ்ந்த வேதாரணியத்தார்கள் கந்தபுராணபடனஞ் செய்வதிலும், திருமுறையோதலிலும் தனிப்பெருஞ் சிறப்புப் பெற்றிருந்தார்கள். மறைக்காட்டுத் தேசிகர் ஆகமங்கள் வழி வந்த பத்ததிகள் பெரும் பாண்டித்தியம் பெற்றும் பூசாகாரியங்களில், நியம அனுட்டானங்களில் வல்லவராய் வழிகாட்டிகளாய் வாழ்ந்தார்கள். ஆகமாந்திகளாய அவர்களைச் சைவக்குருமார்கள் என நம்மவர் மதித்தார்கள், போற்றினார்கள், வணங்கினார்கள்.

இவ்வாறாக நம்மவர் ஆண்டுக்கொரு முறையேனும் திருமறைக்காடு சென்று, சுவாமி தரிசனஞ் செய்து வந்தார்கள். அங்கே யாழ்ப்பாணத்தாரின் வீடுகள் நிறைந்த வீதியும் உண்டு. யாழ்ப்பாணத்தார் திருக் கோயிற் காரியங்களில் செல்வாக்கு உள்ளவர்களாயும் இருந்தார்கள். வரணியூரினரான தில்லைநாத தம்பிரான் தஞ்சாவூர் மன்னனிடம் பெற்ற பெரிய வரிசைகளுள் வேதாரணியத்துச் செல்வாக்கும் ஒன்று.

ஆறுமுக நாவலரவர்கள் மருகரும் மாணாக்கருமாகிய வித்துவ சிரோமணி பொன்னம்பல பிள்ளை, ஒரு சமயம் திருமறைக்காட்டில் தங்கி வாழ்ந்தபோது, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் அங்கே சென்று அவரை அணுகி அங்கிருந்து நற்றிணைப் பதிப்புக்கான உதவிகள் பலவற்றைக் கேட்டுப் பழகிக்கொண்டார் என்பது ஈழத்துப் புலமைக்குப் புகழாயிருந்தது. இதை உ.வே. சாமிநாதையரும் ஒத்துக்கொண்டுள்ளார் என்பது எமக்கெல்லாம் பெருமிதம்.

சின்னத்தம்பிப்புலவர் சிதம்பரம், சீர்காழி முதலிய திருத்தலங்களை வணங்கிக் கொண்டு, திருமறைக் காட்டுக்குச் சென்றார். அங்கே சுவாமி பெயரால் ஓர் அந்தாதி பாடுமாறு அவருக்குத் திருவருள் பாலிக்கப் பெற்றது. ''நந்தாவனந்திகழ் தில்லைச்சின்னத் தம்பி நாவலன்சீர் அந்தாதி மாலையை வேதாட வீசற்கணிந் தனனே'' என்று வரதராச கவி சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார்.

சின்னத்தம்பிப்புலவர் தமது பதினைந்தாம் ஆண்டுப்பிராயத்தில் மறைசை யந்தாதியைப் பாடினார் என்ப, மறைசை யந்தாதி பயபக்தியோடு படித்தற்குரிய பாராயண நூல் போலவும் உள்ளது. இலக்கிய இலக்கண நயங்கள் சிறந்து விளங்கும் அளவில் இயற்கையழகு நயங்களும் உள்ளன.

மறைசை யந்தாதி பெற்ற பெருமதிப்புக் காரணமாக உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், சுன்னாகம் குமார சுவாமிப் புலவர், மதுரை மகாவித்துவான் சபாபதி முதலியார் தனித்தனி உரை எழுதியுள்ளார்கள், அடிக் குறிப்போடு வெளிவந்த பழைய பதிப்பும் இதன் பெருமையைக் குறிக்கும்.

திருமறைக்காட்டுத் தலப்பெருமையை எடுத்த எடுப்பிலே பாடும் புலவர், ''அந்தமும் ஆதியும் இல்லா அத்தர்தம்மேல் செந்தமிழ் நூற்பொருளந்தாதி பாட'' என்பர். மிக வடக்கேயுள்ள இமயமலைக் கொழுந்தாகிய இறைவி தந்த சுந்தர விநாயகனைத் துணை வருமாறு பாடுவர்.

மறைக்காடரின் திருவடிப் பெருமையைக் கூறி அது தமக்கு அருள் புரிவது எப்போதெனக் கேட்பர். இயமனை உதைத்தருளியது, மன்றிலாடியது. பரவையார் மனைக்குச் சென்றது எல்லாம் திருவடியற்புதம் என்பர். திருவடியை நன்கு துதிப்பர்.

திருமறைக்காடரை ஒருதரம் துதித்தால் வலிய இரும்பு போன்ற வல்வினையை அறுக்கும் அரம்போல் அது உதவும் என்பர். ஒருதரம் பேசுதி என மனத்துக்கு உபதேசிப்பர். சிவபெருமான் முத்தமிழ் வளர்த்த முதற்சங்கத் தலைவர் என்பதைக் ''கூடல் வளர்த்திடு மூவுரைச் சங்கர்'' என்பர்.

நாயகி பாவனையின் மறைக்காட்டு மணாளரிடம் கிளியைத் தூதுவிடுவர். வேதவனத்தையுடையவருக்குத் தூதுபோன கிளி சொல்ல வேண்டியது மன்மத பாணங்களால் வாடிய பெண்ணுக்கு ஓரிரவு பதினைந்து யுகம் போலிருக்கிறது என்பதாம். இது பேராசிரியர் ஐன்ஸ்ரீன் பிற்காலத்தில் கண்ட கண்டுபிடிப்பு.

தத்தலை வேலையனாகிய திருமால் முத்து வேலையனாகிய சிவனை அறியவில்லை என்பர். அந்தத் திருமாலின் தேவியாகிய இலக்குமியின் தாலியைக் காப்பாற்றுவதற்காகச் சிவபெருமான் ஆலகாலவிடத்தை உண்டருளியவர் என்பர். மூவர் தமிழுக்கு உருகும் அரன் சந்திரனையும், கங்கையையும் முடித்த சடையினன். மூர்த்தி, தில்லைப் பொன்னம்பலவன், பினாகி, கங்காளன், புராந்தகன், பசுபதிநாதன் என்றெல்லாம் போற்றி; அவரே எமது பெரிய துணை என்பர்.

ஈழத்தெழுந்த 27 அந்தாதிகள் 17 அந்தாதிகள் ஒருபுறமாக, 8 அந்தாதிகள் யமகவந்தாதி இனத்தவையாகும். இவற்றுள் சொண்டும் சொண்டும் ஒட்டாமலே படிக்கக்கூடிய பாடல்கள் உள்ளன. இன்னும் ஈழத்து அந்தாதிகளும் பத்து வகையான செய்யுள்கள் பயின்று வந்தவையும் உள்ளன. புராண காப்பியப் போக்குடைய மறைசை யந்தாதியில் திரிபு என்னும் அணி தலை தூக்கி எதுகைதோறும் பொருள் வேறு திரிதரும்.

# சின்னத்தம்பிப் புலவர் என்பதே பேச்சு

இன்றைக்கு ஐம்பதாண்டுகளுக்கு முன்பின்னாக யாழ்ப்பாணத்து ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், யாழ்ப்பாணம் கலாநிலையம், வாலிபர் மாநாடு முதலிய நிறுவனங்கள் தமிழ் வளர்த்த காலத்திலே, ஊர்கள் தோறும் பொது மேடை அமைத்துக் கொடுப்ப, ஆங்காங்கே ஆறடி உயரமும் அழகான பொன்மேனியும் கொண்ட ஆணைகன் பண்டிதமணி கணபதிப் பிள்ளை அவர்கள், குடுமியசைய, குதிகால்கள் உயர, கேட்போர் கருத்தூன்றிச் செவி கொடுப்பச் சின்னத்தம்பிப் புலவரின் பாடல்களை ஜனரஞ்சகமாக மணிக்கணக்காக அலசி ஆராய்ந்து நயந்து பேசி வந்தார்கள்.

ஆங்கிலப் புலவர்களின் அருமையான இயற்கை வளப்பாட்டுகளில் தம்மை மறந்த மேதைகள் பலர். தமிழ்ப் புலவர் ஒருவர், அவரும் யாழ்ப்பாணத்தவர், அதிலும் அண்மையில் வாழ்ந்தவர் பாடிய அருமையான பாடல்களைக் கேட்டு மகிழ்ந்து, மெய்மறந்து மறு ஒலிபரப்புச் செய்யுமாறு மீண்டும் மீண்டும் மேடைகள் அமைத்ததும் உண்டு.

பொன் பூச்சொரிந்த கொன்றை என்ற சின்னத்தம்பிப் புலவரின் வாய் சாதாரண வாயல்ல. சங்க காலத்தில் மீனெறி தூண்டில், தேய்புரி பழங்கயிறு முதலிய நூற்றுக் கணக்கான தொடர்களைப் புனைந்து பாடிய புலவர்கள்; இடைக்காலத்தில் மண்தின்ற பாணம் என்று பாடிய மரபில் வந்தமைந்த செந்தமிழ்வாய். அந்த வாயால் மக்கள் இலக்கியம் பாட விரும்பிய சின்னத்தம்பிப் புலவர் பறாளை விநாயகப் பெருமானை முன்னிட்டுப் பள்ளுப் பாடல் பாட விரும்பினார். பள்ளுப் பாடல் மக்களைத் துள்ள வைக்கும் இயல் பமைந்த பிரபந்தம்.

## ஈழத்தவரின் உள்ளத்தைத் தொட்ட பள்ளு

ஈழத்துப் புலவர் பெருமக்களை வெகுவாகத் தொட்ட பிற்காலப் பிரபந்தவகைகளுள் பள்ளு முக்கிய மானது, தமிழ்நாட்டில் முதலில் எழுந்த முக்கூடற் பள்ளுக்கு முன்னர், ஈழத்தில் கதிரமலைப் பள்ளு, ஞானப்பள்ளு என்னும் இரண்டும் எழுந்தன. இவற்றைத் தொடர்ந்து இங்கே எழுந்த பள்ளுகள் பல. பறாளை விநாயகர் பள்ளு, மாந்தைப் பள்ளு, குருவிப் பள்ளு, கனகராயன் பள்ளு எனப் பல பள்ளுகள் பிற தேசங்கள் தோறும் எழுந்துள்ளன.

பள்ளு உழவுத் தொழிலின் ஏற்றத்தையும், பயிர் செய்யும் பண்பாட்டையும், ஆண்டான் அடிமைத் திறத்தையும், விளையும் நெல்லினங்களின் வர்க்கத்தை யும், அவற்றின் அருந்தமிழ்ப் பெயர் வரிசையையும், வயற்காரனின் பாராமுக வாழ்வையும், பண்ணையாள் களின் பணிவான சேவையையும், அவனொருவனின் இரண்டு தாரத்து மனைவியர்களின் ஏற்ற இறக்கத்தையும், அவன் கண்ட இன்ப துன்பங்களையும், மனைவியர் இருவருங் கொண்ட நாட்டுப் பற்றையும், நாகரிக வாழ்வையும், நானிலங்களின் நல்லியல்புகளையும், வரப்பிரசாத மழையின் வரவையும், அதைக் காராளர் வரவேற்ற சிறப்பும், வயல்களின் வேலை விவரமும், புதுவெள்ளம் கடலை நோக்கிப் பாய்வதும், மீனினங்கள் வெள்ளத்தை வரவேற்கும் சிறப்பும் இன்ன பிறவும் பள்ளுப் பிரபந்தம் அள்ளித் தருகின்றது.

## ஈழமண்டல நாடெங்கள் நாடே

ஈழம் என்பது பொன் இலங்கையைப் பொன் கொண்டழைத்த நாடு என்றே கம்பர் பாடியுள்ளார். இலங்கை முழுவதும் ஈழம் இலங்கை நாடு எம் நாடு. இதுவே எங்கள் தாய்நாடு. இந்தியநாடெம் அயல் நாடு. இந்து சமுத்திரம் சூழ்நாடு. மலைவளம் உள்ளது எம் நாடு, மண் வளம் உள்ளது எம் நாடு. தீரர்கள் வாழ்ந்தது எம்நாடு, தியாகம் புரிந்தது எம் நாடு. வீரர்கள் வாழ்ந்தது எம்நாடு. விந்தை புரிந்தது எம்நாடு என்றெல்லாம் நாமியற்றிப் பாடும்போது காற்றினிலே மிதக்குமாப் போல் உணர்ச்சி உண்டாகிறது.

சின்னத்தம்பிப் புலவர் பண்ணைத் தொழிலாளன் மனைவியர் இருவரின் வாயில் நாட்டுப் பற்றை வெளிக் கொண்டு வரும் போது, ஈழமண்டலத்துப் பெண் எங்கள் நாட்டைப்பற்றி உருக்கமாகப் பாடுகிறாள். அவற்றைக் கேட்கும்போது நாட்டுப்பற்று நம்மை அசைக்கின்றது. நாம் அசைந்து ஆடுகிறோம். ஆனந்த அசைவே நமக்குப் பெரும் பரிசாகவும் அமைகின்றது.

ஈழமண்டலத்தில் இணையிலா இயற்கை வளத்தைச் சின்னத்தம்பிப் புலவர் வரிசையறிந்து பாடு கின்றார். நீர்வளம், நிலவளம், மலைவளம், வனவளம், கடல்வளம் எல்லாம் பாடுபவர். அப்பால் கல்விவளம், செல்வவளம், கொடைவளம், பக்திவளம் என்பனவற்றை யும் பாடுகின்றார்.

ஈழமண்டலத்துக்கு இயல்பாயமைந்த பக்திப் பாரம்பரியம் ஒன்றுண்டு. இராவணனும் மண்டோதரி யும் கொண்ட பக்தி வளம், திருமுறைகளிலும் போற்றப் பெற்றுள்ளன. ஈழநாட்டவரின் பக்தி வெள்ளம் சிங்கள மக்களையும் நன்றாக நனைத்திருந்தது.

புரத்தில் பறாளை பழையவூர் அங்கே கோயில் கொண்ட குளியுள்ள அற்புத மூர்த்தியாய் விநாயகப் பெருமானின் திருக்கோயிலைப் பறங்கியவர் இடிக்க வந்தபோது பெரிய காகம் பறந்து வந்து தலைவனின் மூக்கைப் பலமாகக் கொத்தியது. இடிப்பு வேலை தடைப் பட்டது.

சின்னத்தம்பிப் புலவரின் பள்ளுப் பிரபந்தம் அவர் காலத்திலேயே பெரும் சிறப்புப் பெற்றுப் பல ஏடுகளிற் பரந்தது. வடகோவைச் சபாபதி நாவலர் அவர் களின் சென்னை சித்தாந்த வித்தியானுபாலன யந்திர சாலையில் 1889 ஆம் ஆண்டில் முதலில் அச்சேறி வெளிவந்தது. நாற்பத்து மூன்று ஆண்டுகளின் பின் சபாபதி நாவலரவர்களின் உறவினரான சிவகுருநாதன் என்பவர் மலேசியாவில் வாழ்ந்த சுழிபுரவாசிகளின் பொருளுதவி கொண்டு 1932ஆம் ஆண்டில் சென்னை திரு. ஜம்புலிங்கன் அவர்களைக் கொண்டு பதிப்பித்தார்கள்.

இந்தப் பதிப்பு பண்டிதமணி அவர்களுக்குப் பெருவிருந்தாயிற்று. தமது சைவாசிரிய கலாசாலை மாணாக்கர்களுக்கும், காவிய வகுப்பு மாணாக்கர்களுக் கும், காலநிலைய மேடைகளுக்கும் அவர் விருந்தளித்த போது பயன் தந்தது. அது பாலின் சுவையில் பண்டிதர் அவர்கள் பலரை ஈடுபடுத்தியபோது பதிப்பில் வந்த நூல்கள் பற்றாக்குறை கண்டபோது சுழிபுரவாசிகள் 1956ஆம் ஆண்டில் மூன்றாம் பதிப்பைத் தமிழ்நாட்டுப் புலவர்களின் குறிப்புரையோடு வெளியிட்டார்கள்.

"கற்ற நூலுணர் பண்டிதன் மார்பஞ்ச
காவியஞ்சட் கலைக்கடல் தோய்ந்தும்
எற்றை நாளுங்கல் வித்திறம் பார்த்திடும்
ஈழமண்டல நாடெங்கள் நாடே"

✱

(தொடரும் அடுத்த இதழில்)

விண்ணப்ப முடிவு திகதி 15ம் திகதி செப்டம்பர் 2006

# ஐரோப்பிய கர்னாடக இசை நடனப் போட்டி - 2006

## யாழ்ப்பாணம் வீரமணி ஐயர் ஞாபகார்த்த "சுருதி" விருதுகள்

பாட்டு, பரதநாட்டியம், கடம், வயலின், புல்லாங்குழல்,

மிருதங்கம், கஞ்சரா, வீணை, மோர்சிங்

எட்டு வயது முதல் இருபத்து மூன்று வயது வரையிலான சிறுவர்கள் வாய்ப்பாட்டு, வயலின், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், கஞ்சிரா, கடம், மோர்சிங், பரதநாட்டியம் ஆகிய கலைகளின் போட்டியில் கலந்து முதலாவது இடத்தைப் பெறும் வெற்றியாளர்களுக்குத் தங்கப் பதக்கங்கள் பரிசாக அளிக்கப்படும். இசைக்கலையில் ஆர்வத்தை ஊட்டுவதுடன் இசையின் தரத்தை உயர்த்தும் நோக்குடன் இப்போட்டிகள் ஒக்டோபர் மாதம் 28ஆம், 29ஆம் திகதிகளில் **இலண்டன் சிவன் நிலையத்தில்** நடைபெறும். போட்டியில் முதலாவது இடங்களைப் பெறுபவர்களுக்கு விருதுகளும், தங்கப் பதக்கங்களும் வழங்கப்படும்.

குறிப்பு : இப்போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை 15-09-2006 திகதிக்கு முன்பாக எமக்குக் கிடைக்குமாறு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

# *London School of Carnatic Music*

**(Based at London Sivan Temple)**

*is organizing an*

# *European Carnatic Music &*

# *Bharatanatya Competition - 2006*

*on 28th & 29th October 2006*

*The First Prize winner of each Category of the Competition*

*will be presented with*

***Yalpanam Veeramani Iyer Award - 'SHRUTHI' - Gold Medal***

On the **European Carnatic Artists' Day**

*On Saturday 11th November 2006*

*at the Sivan Center, Lewisham*

Application Closing Date - 15th September, 2006

For enquires, Please contact :

**London School of Carnatic Music (LSCM),**

*49, Ravensbourne Park Crescent, Catford, London SE6 4YG*

*Tel : 0208 690 0401; e-mail : lscm@hotmail.com*

போட்டிகளின் மேலாளர்களாக

திருமதி. சிவசக்தி சிவநேசன், திருமதி. சிவதாரணி சகாதேவன், திருமதி. கீதா ஸ்ரீதர்,

திருமதி. (டாக்டர்) ஜொட்சனா ஸ்ரீகாந்த், திரு. பரமசாமி கிருபாகரன்,

திரு. சம்பத் குமார், திரு ஆர்.என். பிரகாஷ் ஆகியோர் கடமையாற்றுவார்கள்

# ஈழத்து நாடகமேதை வைரமுத்து

- கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை

## வாழ்க்கை வரலாறு (12)

"பட்டங்களாற் கலைஞன் வாழ்வதில்லை
பட்டங்களே அவனால் வாழவேண்டும்" - கவிஞர் வி. கந்தவனம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி)*

ஆசிரியர் முருகேசுவின் மகனாகவும், ஆ.ம. செல்லத்துரையின் மாணவனாகவும் இருந்த வைரமுத்துவும் இவர்களைப் பின்பற்றித் தமிழரசு கட்சியை ஆதரிக்கத் தொடங்கினார். பேராசிரியர் சு. வித்தியானந்தனின் நெருக்கமான நட்பும் இதற்குக் காரணமாகலாம். இயல்பாகவே, தமிழ் மக்கள் மீதும், தமிழ்மொழி மீதும் அன்பும் மதிப்பும் கொண்ட வைரமுத்து தனது நாடக மேடைகளில் தமிழ்மொழியின் விடுதலை பற்றிப் பாடத் தவறவில்லை.

வைரமுத்து மலையகத்துக்கு அடிக்கடி சென்று தன்னுடைய நாடகங்களை மேடை யேற்றியுள்ளார். அதனால் மலைநாட்டுத் தமிழ் மக்கள் இவரிடம் அன்பும் மதிப்பும் கொண்டவர்களாக இருந்துள்ளனர். மலையகத் தமிழர்களுடைய குடியுரிமை பறிக்கப் பட்டமை வைரமுத்துவை மிகவும் வாட்டியுள்ளது. அப்பொழுது அவர் மனம் வெதும்பிப் பாடிய பாடலடிகள் பின்வருமாறு :

**எங்கள் சகோதரர் தோட்டத் தொழிலாளர்
இருந்த உரிமை இழந்தனரே
சிங்கள ஆட்சியின் தீய செயலிதைத்
தேசம் இகழ்ந்திடும் தோழர்களே.**

**அட்டை கடித்திட அங்கம் துடித்திட,
அந்நியர் வாழ்ந்திட வாழ்ந்தனரே
பட்டகடன் இந்த நாட்டினர் தீர்க்கின்ற
பண்பு இதுதானோ? தோழர்களே.**

**காட்டை அழித்தவர் நாட்டை வளர்த்தவர்
கண்ணீர் சிந்தும் நிலை எய்துவதோ?
சாட்டை எடுபகை ஓட்ட அடி உந்தன்
சந்ததி வாழ்ந்திட சிந்துபடி.**

மதுரகவி. இ. நாகராஜன்

பிரித்தானிய அரசின் கட்டளைப்படி இலங்கைக்கு வந்த சோல்பரி ஆணைக்குழு முன் சாட்சியமளித்த ஜீ.ஜீ. பொன்னம்பலம் 'ஐம்பதுக்கு ஐம்பது' எனும் தனது கட்சிக் கொள்கையை முன்வைத்தார் என முன்னரே பார்த்தோம். பின்னர் இதனை உதறி எறிந்துவிட்டு டி.எஸ். சேனநாயக்காவின் அரசில் சேர்ந்து மந்திரிப் பதவி வகித்தபோது வைரமுத்து மேடைகளிற் பாடிய பாடல் அக்காலத்தில் மிகவும் பிரபல்யம் பெற்றது.

**ஐம்பதுக்கைம்பது கேட்டுமென்ன இன்றும்
சிங்கக் கொடிதான் பறக்குது - அங்கே
சிங்கள ஆட்சி நடக்குது
எங்களின் தங்கத் தமிழினம் காக்க
ஏனிந்தத் தாமதம் வாருங்கள் - நீங்கள்
எல்லோரும் ஓரணி சேருங்கள்.**

தமிழீழத் தேசியத்தின் ஊற்றுக் கால்களைத் தேடுகின்றவர்கள் நாடக மேடைப் பாடல்களை ஒதுக்கி விட்டுத் தேடுவார்களானால், அந்த ஆய்வு முழுமை பெற முடியாது.

பிரபல இசை நாடக நடிகராகிய வரகவி பொன்னாவைக் கிருஷ்ணபிள்ளை 1949 ஆம் ஆண்டு பாடிய,

**"விழித்தே யெழுந்துற்றுப் பாரடா தமிழா
விபரீதம் வரவரப் பெருகுவதை
பழித்தே தினம் பெரும்பான்மையோர் செய்யும்
பாதகமே பெரும் காதகமே"**

என்னும் பாடலும், சிங்களக் குடியேற்றத்தை எதிர்த்து இவர் பாடிய பின்வரும் பாடலும் மேற்படி கருத்துக்குத் தக்க சான்றுகளாகும்.

**ஒட்டகம்போல் தங்கள் மக்களை எங்கள்
ஊருக்குள் நாளுக்கு நாள் அனுப்பி
கட்டியே வீடுகள் கணக்கின்றிக் கொடுக்கிறார்
கபடமாகவே குடியேற்றுகிறார்.**

(மாதவி : 1992; 40, 41)

இன்னொரு ராஜபார்ட் நடிகராகிய சீ.ரீ. செல்வராஜன் 1950 பதுகளில் பாடிய,

**"கத்தியும் வாளும்தான்
காப்பாற்ற வேண்டும்
இந்நாட்டையே
எங்கள் நாட்டையே..."** எனும் பாடலும்,

மற்றொரு ராஜபார்ட் நடிகராகிய அண்ணாசாமி பாடிய

**''இன்றைக்குத் தோட்டத் தொழிலாளி போ என்பர்**
**இன்னொரு நாளைக்கு எங்களைப் போ என்பர்**
**சிங்கள வர்சதிக் காளாக லாகுமா?**
**சீறி எழு; தமிழா! வாளை ஏந்தடா''**

எனும் பாடலும் தமிழ்த் தேசியம் பற்றியதேயாகும்.

தென்மராட்சியில் வருடா வருடம் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியொன்று நடைபெறுவதுண்டு. இப்போட்டியில் வெற்றி பெறுபவருக்குப் பிரதம விருந்தினராக வருபவர் மாலையிட்டுக் கௌரவிப்பது வழக்கம். ஒரு சமயம் நடைபெற்ற மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியின்போது தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் முதலாவதாக வெற்றி பெற்றுவிட்டார். அந்த வருடம் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டவர் சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த குமார சாமி என்பவர்.

வெற்றி பெற்றவரைக் கௌரவிக்க வேண்டிய நேரம் வந்தபோது, மாலையை வெற்றி பெற்றவருக்கு அணியாது, வெற்றி பெற்ற மாட்டுக்குப் போட்டு அதற்கொரு சமாதானமும் குமாரசாமி சொன்னார். ''வெற்றி பெற்றுத் தந்தது மாடுதானே. ஆகவே அதனைக் கௌரவிப்பதுதான் பொருத்த முடையது'' என்பதுதான் அவருடைய சமாதானம். உண்மையில் அவருடைய சாதித் திமிர்தான் அவ்வாறு செய்ய வைத்தது என்பதை யாவரும் உணர்ந்து மனதுக்குள் சிரித்துக் கொண்டனர்.

அடுத்த கிழமை வைரமுத்து குழுவினரின் நாடகம் தென்மராட்சியில் நடைபெற்றது. ஒழுங்கு செய்யப்பட்ட தமது நாடகத்தை மேடையேற்றுவதற்கு முன் ''மாட்டுக்கு மாலையிட்ட மன்னன்'' என்னும் 'நக்கல்' நாடகம் ஒன்றை மேடையேற்றினர். சங்கரதாஸ் சுவாமிகள் காலத்திலும் வழமையான நாடகத்துக்கு முன் இரண்டொரு நகைச்சுவை நாடகங்களை மேடை யேற்றுவது வழக்கம். அந்நாடகங்களை 'நக்கல்' நாடகம் என்றே சொல்வதுண்டு. 'கோமாளி அப்பா' என்று அன்புடன் அழைக்கப்பட்டுவந்த பபூன் சின்னத்துரையே ''மாட்டுக்கு மாலையிட்ட மன்னனாக'' நடித்தார். பார்ப் போரை மிகவும் கவர்ந்த இந்நாடகம் பல தடவை மேடையேறியது. இதனை எழுதித் தயாரித்தவர் வைர முத்துவேயாவார்.

இதில் வைரமுத்து நடித்துப் பாடிய பின்வரும் பாடல் மிகவும் முக்கியமானது.

**மாட்டுக்கு மாலையிட்ட மன்னவனார் நாளைக்கு**
**வோட்டுக்கு (Vote) வருவார் நாம் பார்ப்போம்-அவரை**
**றோட்டிலே (Road) நிறுத்தி வைத்துக் கேட்போம்**
**சாட்டுக்கேனும் நீ தமிழர் நலன் குறித்துச்**
**சாற்றிய வார்த்தைகள் உண்டா? - உங்கள்**
**தலைவருக்கும் கொள்கைகள் உண்டா?**

வைரமுத்து எல்லோராலும் மதிக்கப் படுகின்ற பெரிய கலைஞனாகத் திகழத் தொடங்கிய பின் வெளிப் படையாகத் தனது அரசியல் ஈடுபாட்டைக் குறைத்துக் கொண்டார். ஏனைய கட்சிக்காரர்களிடமும் அன்பும் மரியாதையும் வைத்திருந்தார். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பொன். கந்தையா, வி. பொன்னம்பலம், வி. கார்த்திகேசன், பேராசிரியர் கா. சிவத்தம்பி, எம்.சி. சுப்பிரமணியம், தமிழ் காங்கிரஸ் கட்சியில் இருந்த சி. சிவசிதம்பரம், தீண்டாமை ஒழிப்பு இயக்கத் தலைவர் நாகரத்தினம், எழுத்தாளர்களாகிய கே. டானியல், டொமினிக் ஜீவா, என்.கே. ரகுநாதன், கவிஞர் பசுபதி என்பவர்கள் இவர்களுள் முக்கியமானவர்கள்.

தந்தை செல்வாவிடம் இவருக்குத் தனிமதிப்பு உண்டு. தந்தை செல்வாவும் இவரை மிகவும் மதித்து வந்தார். இருவருக்கும் நெருக்கமான பிணைப்பு ஏற்பட முக்கியமான காரணமாக அமைந்தது கலைதான். தந்தை செல்வா நன்றாக மிருதங்கம் வாசிக்கக் கூடியவர். கருநாடக இசையை ஓரளவு அறிந்தவர். வைரமுத்துவின் நாடகங்களைப் பலதடவை பார்த்துச் சுவைத்தவர். வைர முத்துவைப் பாராட்டித் தனது அன்பை வெளிப்படுத்திய வர். அவ்வப்போது வேண்டிய உதவிகளைச் செய்து ஊக்கியவர். பிற்காலத்தில் ஜே.பி. (சமாதான நீதிவான்) பட்டமும் பெற்றுக் கொடுத்தவர். எனவே தந்தை யவர்களிடம் இவர் ஒரு மைந்தன்போலவே நடந்து கொண்டார். (தகவல் : வி.வி. வைரமுத்து)

1972ஆம் ஆண்டு திருமதி பண்டாரநாயக்கா வும் அவருடைய ஐக்கிய முன்னணி அரசாங்கமும் ஒருதலைப்பட்சமாகக் குடியரசு அரசமைப்பைப் பிரகடனப்படுத்திய போது, தமிழர்களுக்கு இருந்த அற்ப சொற்ப உரிமைகளும் பறித்தெடுக்கப்பட்டன. அந்த அரசில், அமைச்சர் பதவி வகித்த இடதுசாரித் தலைவர்களும் இதற்கு உடந்தையாகவிருந்தனர்.

மேற்படி குடியரசுக்குத் தமிழர்களுடைய உடன்பாடும் தேசிய உடன்பாடும் உண்டு என்று அரசு கூற முனைந்தபோது ''எங்கே அதை நிரூபித்துக் காட்டுங்கள்'' எனக் கூறி எஸ். ஜே.வி. செல்வ நாயகம் 1972 இல் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்து உபதேர்தலை நடத்தும்படி சவால் விட்டார்.

1975ஆம் ஆண்டு வரை திருமதி. பண்டார நாயக்காவின் அரசாங்கம் தேர்தலை நடத்தாது இழுத் தடித்தது. ஏனெனில் செல்வ நாயகத்தைத் தோற்கடிக்கக் கூடிய ஒரு வேட்பாளரை அவர்களாற் கண்டுபிடிக்க முடியவில்லை. இதனால், கிட்டத்தட்ட இரண்டு வருடங் களுக்கு மேலாகக் காங்கேசந்துறைத் தொகுதி நாடாளு மன்ற உறுப்பினர் இல்லாத நிலையில் இருந்தது. 1975ஆம் ஆண்டு தன்னுடைய வேட்பாளர் ஒருவரை நிறுத்தி இடைக்காலத் தேர்தலை நடத்தியபோது, செல்வநாயகமும் அவரைச் சேர்ந்த கூட்டணியினரும் மேற்படி வேட்பாளரைப் படுதோல்வியடையச் செய்தனர். (A. Jeyaratnam Wilson 1981: 14-15)

# தாய்மொழி கற்பீர்

கவிஞர் பொன்னரசு, பெங்களூர்

பெற்ற தாயே பேணித்தன் மக்களை
மற்றவே றெவரினும் மாண்புடன் காப்பாள்;
கற்றிடத் தாய்வழி மொழியே சிறப்பெனக்
கற்றோர் மற்றோர் எல்லாம் அறிவார்.
வற்றா மொழிவளம் தமிழில் இருக்க
வறிய மொழிஏன் கற்றிட வேண்டும்?
நற்றா மரையே குளத்தில் இருக்க
நாடி எருக்கம் பூவிரும் புவரோ?

தாய்வழி மொழியே தனிச்சிறப் புடையது
தக்கநம் தமிழே தரணியில் சிறப்புடை
வாய்மொழி யாய்நம் வழிவழி வந்தது
வள்ளல்அம் மொழியினும் நல்லது வேறெது?
சேயாய்த் தாயின் மடியில் கற்றதைச்
சிந்தையின் கருவில் தந்ததைத் துறந்து
காயாம் மொழிகளைக் கற்கயார் விரும்புவர்?
கனிமொழி தமிழ்வழி கல்வியே வேண்டும்.

உலகில் உள்ளபல் மொழியெலாம் கற்பினும்
உற்றநம் தாயே உள்ளம் அறிபவள்
நிலையில் உயரவும் நெஞ்சினைக் கவரவும்
நேசமாய்ப் பேசி நிலைகொண் டிடவும்
கலையும் இலக்கியம் தழைத்தநம் தாய்மொழி
கண்ணினில் கனிவும் மண்ணினில் பெருமையும்
விளையச் செய்யும் வித்தக மொழிவிட்டு
வெற்று மொழிகளைக் கற்பதில் பயனென்?

# மாளாது காக்கும் மாத்தமிழ்!

புலவர் வெற்றியழகன்

*எடுப்பு*

தாயும் நீயே! தந்தையும் நீயே! - இந்தச்
சேயெனை வாழ்விக்குஞ் செந்தமிழ் நீயே! - தாயும்

*உடனெடுப்பு*

வாயும் நீயே! வயிறும் நீயே! - இங்குக்
காயுங் கதிரவன் கனித்தமிழ் நீயே! - தாயும்

*முடிப்புகள்*

பாயுங் குருதி பருகுந் தண்ணீர்
பார்க்கும் விழியும் பார்வையும் நீயே!
வேயும் நரம்பும் ஊனும் உயிரும்
வீர உணர்வும் மானமும் நீயே!
தூய மனமுந் துடிக்கும் இதயமும்
துன்பந் துடைக்கும் மருந்தும் நீயே!
ஆயும் அறிவும் ஆற்றல் ஆடை
அன்பும் பண்பும் அனைத்தும் நீயே! - தாயும்

தீய எண்ணந் தீய்க்குந் தீயும்
திருவை புகழைத் தருவதும் நீயே!
நோயெனும் சாதி நெருப்பு மதமும்
நொறுக்கும் மடமை நீக்குதல் நீயே!
நேய மனிதம் நேர்மை ஒழுக்கம்
நல்கும் வளமிகு நற்றமிழ் நீயே!
மாயும் என்னை மாளாது காக்கும்
மானம் வழங்கும் மாத்தமிழ் நீயே! - தாயும்

தோல்வி அடைந்த வேட்பாளர் வைரமுத்துவுக்கு நெருக்கமான நண்பர். அவர் மேற்படி தேர்தற் பிரசாரத் தின்போது வைரமுத்துவிடம் வந்து தன்னை ஆதரிக்கும் படி கேட்டுக்கொண்டார். அதற்கு வைரமுத்து ''நீங்கள், இன்றைய சூழ்நிலையில் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தை எதிர்த்துப் போட்டியிட முன் வந்திருக்கக்கூடாது. உங்களுக்குப் போடுகிற ஒவ்வொரு வாக்கும் தமிழ் மக்களுக்கு எதிராகப் போடுகிற வாக்கு'' எனக் கடுமை யாகப் பதில் அளித்தார். அதற்கு அந்த வேட்பாளர் ''நீங்கள் எல்லாம் செவிட்டுத் தலைவருக்குப் பின்னால் செல்லும் குருட்டுச் சீடர்கள்'' என்று கேலி பண்ணினார். ''செவிடரும் குருடரும் யார் என்பது காலப்போக்கில் தெரியும்'' என வைரமுத்துவும் சுடச்சுடப் பதில் கொடுத்த னுப்பினார்.

செல்வநாயகத்துக்கு ஆதரவாக நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் வைரமுத்து பாடிய பாடல்களில் ஒன்று இதுவாகும்.

சமவுரிமை தாறமென்ற பொதுவுடைமை மந்திரிமார்
தமிழர் உரிமைகளைக் கொன்றனர்
எமது தமிழருக்கு இன்னல் புரிந்திட்ட
இவர்களா தேசத் தலைவர்கள்?
எரியிலே எண்ணெய் ஊற்றும் இந்தத் தலைவர்களை
எம்மவரும் ஆதரிக்கின்றார்களே!
தெரியும் ஒருநாள் எங்கள் தேசம் வெடித்து எழும்
செல்வா வழியில் செல்ல வாருங்கள்.

(பாடல் : கருணானந்தசிவம்)

1977ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 26 ஆம் திகதி தந்தை செல்வா மறைந்த பின்னர், வைரமுத்து அரசியலிலிருந்து பூரணமாக விலகிக்கொண்டார். வெளிப்படையாக அவர் எந்தக் கட்சியையும் 1977ஆம் ஆண்டுத் தேர்தலின்போது ஆதரிக்கவில்லை. எனினும் அவருடைய உள்ளத்தில் ''தமிழர் விடுதலை பெற வேண்டும்; தமிழினம் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும்; தமிழ்க் கலைஞர்கள் போற்றப் படவேண்டும்;'' என்ற கருத்துடையவராகவிருந்தார்.

1983ஆம் ஆண்டுக் கலவரங்களும், அதன் பின்னர் ஏற்பட்ட நிகழ்ச்சிகளும், அவலங்களும் அவரைப் பெரிதும் புண்படுத்திவிட்டன. அதனால் அவர் தனக்கு வழங்கப்பட்ட ஜே.பி. பட்டத்தைத் துறந்ததோடு தமிழ் விடுதலையை ஆதரித்து நாடகங்களையும் கலை நிகழ்ச்சிகளையும் நடத்தி வந்தார். 1989ஆம் ஆண்டு அவர் மறையும் வரை கலையையும் தமிழர் விடுதலை யையும் இரண்டு கண்களாகக் கொண்டு வாழ்ந்தார் என்பதை யாவரும் அறிவர். *

(தொடரும்)

# சத்திய தரிசனம்

- சிவசரவணபவன்(சிற்பி)

''மூளையும் அறிவும் மட்டுமல்லாமல் உள்ளமும் உணர்ச்சியும் ஆன்மாவும் உடைய தனி மனிதர்கள் சேர்ந்ததுதான் சமுதாயம். ஒவ்வொரு மனித இதயத்தையும் தனித்தனியாக அணுகி, நெகிழச் செய்து படிப்படியாகப் பண்படுத்துவதுதான் இலக்கியத்தின் பணி.'

''புதிய சிந்தனையும் பரந்த மனப்பான்மையும் உள்ளவர்களுக்கு இந்தப் படம் நிச்சயமாகப் பிடிக்கும். உன்னுடைய நண்பன் குமாரதாசனிடம் இவை இருப்ப தாகத் தெரியவில்லை. இன்றைக்கு இங்கு வருவாரா என்பது சந்தோகத்தான்''

படமாளிகையின் வாசலில் வைத்து என்னிடம் சொன்னான் நடேசன்.

எதுவுமே பேசாது அவனைப் பார்த்துவிட்டு, மீண்டும் என் கைக்கடிகாரத்தைப் பார்த்தேன்.

படம் தொடங்குவதற்கு இன்னமும் ஐந்து நிமிடங்கள் மட்டுமே இருந்தன.

நீண்டு கிடந்த வீதியைப் பார்த்தேன். குமாரதாச னின் உருவம் தென்படவேயில்லை.

''உழைக்கும் கரங்களும் ஒட்டிய வயிறும்'' என்ற வண்ணப்படம் ''குமரன்'' படமாளிகையில் திரையிடப் பட்டிருந்தது. சர்வதேசப் பரிசுகள் பலவற்றைப் பெற்றி ருந்த அந்தப் படத்தைக் குமாரதாசன், நடேசன், நான் ஆகிய மூவரும் ஒன்றாகச் சேர்ந்து பார்ப்பது என முடிவு செய்திருந்தோம்.

படமாளிகை வாசலில் ஒருவரை ஒருவர் சந்திப் பதாக ஏற்பாடு.

நடேசனும் நானும் சற்று முன்பின்னாக வந்து விட்டோம். குமாரதாசனை இன்னமும் காணவில்லை.

முதலாவது மணி அடித்தது.

''இனி, உங்களுடைய ஆசனங்களிலே போய் இருங்கோ. படம் துடங்கினாப் பிறகு, ஆசனங்கள் வெறுமையாக இருந்தால், புதிதாக யாரையாவது கொண்டுவந்து இருத்திவிடுவோம்'' என ஒரு வகையான எச்சரிக்கை விடுத்தான் கடமையில் நின்ற ஊழியன் ஒருவன்.

நான் நடேசனைப் பார்த்தேன்.

''இனிக் காத்திருப்பதிற் பயனில்லை. வா, நாங்கள் ரெண்டு பேருமாவது படத்தைப் பார்ப்போம்'' என்றான் அவன். குமாரதாசனைப் பற்றிய சில விவரங்களைச் சொல்லி, அவன் வந்தால், உள்ளே அழைத்து வரும்படி அந்த ஊழியனிடம் கூறிவிட்டு, நடேசனைப் பின் தொடர்ந்து ஆசனத்தில் அமர்ந்தேன்.

''அவர் வருவார் என்று இன்னமும் நீ நம்புகிறாயா?'' நடேசன் கேட்டான்.

''ஓம்'' என்று சொல்ல எனக்குத் துணிவு வர வில்லை.

''இல்லை'' என்று சொல்ல உள்ளம் இடம் கொடுக்கவில்லை.

※ ※ ※

குமாரதாசன் ஓர் எழுத்தாளன், சிறுகதைகள் எழுதி வருபவன்.

அவனுடைய கதைகள் எனக்குப் பிடிக்கும்; மிக நன்றாகவே பிடிக்கும்.

என்னைப் போல, இன்னும் பல இரசிகர்கள் அவனுக்கு உண்டு.

அவனுடைய சிறுகதைகளை வாசிக்கத் தொடங்கி னாற் போதும்; அவற்றை வாசித்து முடித்துவிட வேண்டும் என்ற ஆர்வம் வரவர அதிகரித்துக் கொண்டே போகும்!

பிரச்சினைகளை நோக்கும் புதிய கோணம்; உண்மையா, கற்பனையா எனப் பிரித்துப் பார்க்க முடியாதவண்ணம் தொகுக்கப்படும் சம்பவக் கோவை; எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் எழுத்துகளுடன் இசைக்கும் சத்திய இழை எல்லாம் அளவான முறையிற் கலந்து நின்று, அவனுடைய கதைகளுக்கு ஒருவித எழிலை, கவர்ச்சியை, கம்பீரத்தை அளித்து வருகின்றன என்று சொல்லலாம்.

வாசிக்கும் போது உன்னதமான உணர்ச்சிகள் கிளர்ந்தெழுவதும், வாசித்து முடித்த பின்னர், ஒருவித நிறைவு, 'ஒருபடி உயர்ந்துவிட்டோம்' என்ற உள்ளப் பூரிப்பு ஏற்படுவதும் பலர் சந்திக்கும் சத்தியமான அனுபவங்கள்!

ஆனால் நடேசன் விதி விலக்காக இருந்தான்.

''குடும்பம், கோவில், தருமம் - இவைகளை விட்டால் எழுதுவதற்கு அவருக்கு வேறு ஒன்றுமே இல்லை. அவருடைய ஒரு கதையை வாசித்தால், மற்றக் கதைகளை வாசிக்கத் தேவையில்லை. ஒரே மாதிரியான கருத்துகளை வெவ்வேறு சூழ்நிலைகளில் வைத்துச் சொல்லுகிறார். அவ்வளவுதான்'' - குமாரதாசனைப் பற்றிய நடேசனின் கணிப்பீடு இது.

இலக்கிய விமர்சனத்தில் அவனுக்கு நாட்டம் அதிகம். மேல் நாடுகளில் உள்ளதைப்போல, தமிழில் இலக்கிய விமர்சனம் வளரவில்லையே என்ற கவலை யும், அந்தக் குறையைத் தன்னால் நீக்க முடியும் என்ற

*(சுடரொளி கௌரவ ஆசிரியர் திரு. சிவ சரவண பவன் ('சிற்பி') ஒரு சிறந்த சிறுகதை எழுத்தாளர், அவரது சிறுகதைகள் சுடரொளியில் வெளிவர வேண்டுமெனப் பல வாசகர்கள் கேட்டிருந்தனர். போர்ச்சூழல் காரணமாகப் புதிய படைப்புகளைப் பெற முடியவில்லை. அவர் அண்மையில் வெளியிட்ட ''சத்திய தரிசனம்'' என்ற சிறுகதைத் தொகுப்பிலிருந்து, வாசகர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில், இக்கதை பிரசுரிக்கப்படுகிறது - ஆசிரியர்)*

நம்பிக்கையும் அவனிடம் நிறைய உண்டு. ஆங்கிலத்தில் உள்ள விமர்சன நூல்களை ஆழ்ந்து கற்று அந்த அளவு கோலை வைத்துத் தமிழ் இலக்கிய ஆக்கங்களை விமர்சிப்பவன்.

''விஞ்ஞான வளர்ச்சியுடன் புதிய கருத்துகள், புதிய உத்திகள், புதிய பார்வைகள் என மேலை நாடுகளில் இலக்கியம் வீறுநடை போடுகின்றது. ஆனால், அன்றிலிருந்து இன்றுவரை எங்களுடைய எழுத்தாளர்களால் தாம் செல்லும் தடத்தை மாற்ற முடியவில்லை'' என அலுத்துக்கொள்ளும் நடேசனுக்குக் குமாரதாசனின் கதைகள், கதைகளாகவே தெரிவதில்லை.

''ஒரு நாட்டின் பண்பாட்டைப் பிரதிபலிப்பதும் - அதை மேலும் செழுமைப்படுத்துவதும் அந்நாட்டின் இலக்கியம். வெளிநாட்டு அளவுகோலைக் கொண்டு எங்கள் இலக்கியத்தை விமர்சனம் செய்வது அவ்வளவு பொருத்தமில்லை'' என்பான் குமாரதாசன்.

இருவரும் என் நண்பர்கள். இருவரின் திறமைகளையும் நான் நன்குணர்ந்தவன்.

இருவரையும் சந்திக்க வைத்து, மனம்விட்டுப் பேசச் செய்து நெருக்கமான உறவினை ஏற்படுத்த வேண்டும் என்பது என் விருப்பம். ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்வது அவர்களுக்கு மட்டுமல்லாமல் இலக்கியத்திற்கும் பெரும் பயன் விளைவிப்பதாகவும் அமையக் கூடும்.

ஆனால், அவர்களைச் சந்திக்க வைப்பது இலகுவானதாகத் தெரியவில்லை.

நடேசனைச் சந்திப்பதற்கு குமாரதாசனுக்கு நாட்டமே இல்லை. ''புதிய தத்துவங்கள், சிந்தனைகள் என்று எதையெதையோ சொல்லிக் கொண்டிருப்பது சிலருடைய பொழுதுபோக்கு. ஏழை எளியவர்களுக்காக இரக்கப்படுவதாகச் சொல்லிக் கொள்வதில் ஒரு திருப்தி''.

''நடேசன் அப்படியானவர்தான் என நீ நினைக்கிறாயோ?''

''வேறு மாதிரி நினைக்க என்னால் முடியவில்லை. தன்னுடைய ஆடம்பரத்தையும் சொகுசு வாழ்க்கையையும் அவர் இன்னமும் மாற்றிக்கொள்ளவில்லை. தான் சொல்லும் கருத்துகள் தன் வாழ்க்கைக்குப் பொருத்தமில்லை என்று நினைக்கிறார் போலைக் கிடக்கு. முதலில் மற்றவர்கள் திருந்தட்டும் என்று எதிர்பார்க்கிறாரோ?''

''நேரிலே சந்தித்து இதைப் பற்றியெல்லாம் பேசினாலென்ன? ஒருவரையொருவர் சரியாக விளங்கிக்கொள்ள வழி ஏற்படும். என் வீட்டிலேயே சந்திக்கலாம். நான் ஏற்பாடு செய்கின்றேன்.''

நீண்ட மௌனத்தின் பின் குமாரதாசன் சம்மதித்தான்.

❊ ❊ ❊

படம் தொடங்குவதற்கான இரண்டாவது மணியும் அடித்து விட்டது. விளக்குகள் அணைக்கப்பட்டன.

செய்திச் சுருள் என்ற பெயரில் அமைச்சர்களும் அரசியல் பிரமுகர்களும் ''நடிக்கும்'' காட்சிகள் ஒன்றன் பின் ஒன்றாய் விரிந்து எரிச்சலூட்டிக் கொண்டிருந்தன.

அன்று காலையில் என் வீட்டில் நடைபெற்ற அந்த இலக்கியச் சந்திப்பு என் மனத்திரையில் ஓடிக் கொண்டிருந்தது.

❊ ❊ ❊

''நீங்கள் இரண்டு பேருமே இலக்கியத் துறையில் இருந்தாலும், எப்போதும் எதிர் எதிராகவே நிற்பதைப் போல எனக்குத் தெரிகிறது'' என நான் ஆரம்பித்தேன்.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை'' எனச் சமாளிக்க முயன்றான் நடேசன்.

''கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. அவை ஆழமானவை என்பதை முதலில் ஒப்புக்கொள்வோம்'' என்ற குமாரதாசன் நடேசனைப் பார்த்துச் சொன்னான். ''மேல் நாட்டிலுள்ளவைதான் இலக்கியம். அவற்றைப் பின்பற்றித் தான் நாங்களும் இலக்கியங்களை ஆக்க வேண்டும் என்கிறீர்கள். செழிப்பான ஓர் இலக்கியப் பாரம்பரியம் எங்கள் நாட்டிலும் இருக்கின்றது என்பதை மறந்துவிட்டீர்களோ?''

''மறக்கத்தான் விரும்புகிறேன். ஆனால், இன்னமும் மறக்கவில்லை. தமிழ் இலக்கியங்கள் எல்லாமே உணர்ச்சிக் கோளங்கள்... அன்பு, காதல், இரக்கம், பக்தி, தன்மானம், தியாகம், வீரம் என்ற பெயர்களில் ஒருவித வெறியை உண்டாக்குகின்ற இலக்கியங்கள்''

''மனிதனை மனிதனாக வாழ வைக்கும் புனிதமான உணர்ச்சிகள் இவை. வெறியூட்டுபவை என்று சொல்லி அவற்றின் மதிப்பைக் குறைக்கக்கூடாது''.

''சங்க காலம் தொடக்கம் எங்கள் காலம் வரை இந்தப் 'புனித' உணர்ச்சிகள் எங்களை ஒருவித அடிமை நிலைக்குத் தள்ளிவிட்டன என்பதை மறுப்பீர்களா?''

''அடிமை நிலைக்கா?'' - விளக்கம் கோரினான் குமாரதாசன்.

''ஓம் நாங்கள் குடும்பத்துக்கு அடிமை, சமயத்துக்கு அடிமை, சம்பிரதாயங்களுக்கு அடிமை, சமூகத்துக்கு அடிமை''

''அடிமை என்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது''.

''வேறு எப்படி அதைச் சொல்வது? விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நாங்கள் இவையெல்லாவற்றிற்கும் கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும். மேல்நாட்டான் சந்திரமண்டலத்திற்குப் போகும் அளவுக்கு முன்னேறிவிட்டான். ஆனால், நாங்கள், குடும்பம், கோயில், பாவம், புண்ணியம் என்று ஒரே தடத்திலேயே சுற்றிவந்து கொண்டிருக்கிறோம்.''

''சந்திரமண்டலத்திற்குப் போவதுதான் முன்னேற்றமா?'' குமாரதாசன் கேட்டான்.

''அதை மறுப்பதென்றால், அறிவின் வளர்ச்சியை, விஞ்ஞானத்தின் சாதனைகளை எதிர்க்கின்றீர்கள் என்றுதான் சொல்வேன்.''

குமாரதாசன் விளக்கினான், ''அறிவு வளரத்தான் வேண்டும்; விஞ்ஞானம் வளரத்தான் வேண்டும். அதே வேளையில் மனிதனிடமுள்ள நல்லுணர்ச்சிகள் தூண்டப்பட்டு அவையும் பக்குவமாக வளர்த்தெடுக்கப்பட

வேண்டும்... உலகின் பல பாகங்களிலே கோடிக் கணக்கான மக்கள் வாழவே வழியின்றிப் பட்டினிச் சாவின் விளிம்பில் பரிதாபமாக நிற்கும்போது அவர் களைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், சந்திரமண்டல ஆராய்ச்சிக்காகக் கோடி கோடியாகக் கொட்டிக் குவிப்பது சரியானதாக எனக்குத் தெரியவில்லை''.

''அப்படியானால், முன்னேற்றம் என்று எதைக் கருதுகிறீர்கள்?'' நடேசனின் கேள்வி.

''மனிதன், மனிதத் தன்மையுடன் வாழ்வதுதான் முன்னேற்றம். யாரையும் புண்படுத்தாமல், யாருக்கும் தொல்லை கொடுக்காமல், மற்றவர்களின் துன்ப துயரங் களில் அனுதாபத்துடன் கலந்துகொண்டு, தியாக மனப் பான்மையுடன் வாழவேண்டும். இத்தகைய வாழ்க் கையைச் சாத்தியமாக்குவதுதான் முன்னேற்றம்.''

''துன்பங்களும் துயரங்களும் ஒருவருக்கு ஏற்பட்டால் தானே மற்றவர்கள் அவற்றிலே அனுதாபத்து டன் கலந்து கொண்டு ஆறுதல் சொல்லலாம்? சமநிலை என்பது இல்லாவிட்டால் தானே தியாகம் என்பதற்குத் தேவை ஏற்படும்? ஏற்றத் தாழ்வு அற்ற, துன்பம் என்பது என்ன என்றே அறியாத ஒரு சமுதாயம் உருவாகி னால்...?''

''அது ஓர் இலட்சியக் கனவு. ஆனால்...''

''தயங்காமல் சொல்லுங்கள்''

''அந்தக் கனவை நனவாக்குவது இலகுவான காரியம் அல்ல. அதற்காக அந்த இலட்சியத்தை விட்டு விட வேண்டும் என்று சொல்வதாக நினைக்கக்கூடாது. மனிதனின் துன்ப துயரங்களைக் குறைக்கலாம். அறவே இல்லாதொழிக்க முடியாது. ஏனெனில் மூளையும் அறிவும் மட்டுமல்லாமல் உள்ளமும் உணர்ச்சியும்கூட அவனிடம் உண்டு... ஏற்றத் தாழ்வுகளும் ஏதோ ஓர் உருவில் சிறிய அளவிலாவது இருக்கும்.''

''இருக்கும் என்றால்?''

''மனித இயல்பை வைத்துக்கொண்டு பார்க்கும் போது, அவை இருக்கும் என்றுதான் சொல்கிறேன். அதே வேளையில், மனிதப் பண்பு வளர்க்கப்பட்டால், அவற்றின் கொடுமைகள் குறையும். இந்தப் பண்பை வளர்க்கும் இலக்கியந்தான் எமக்குத் தேவை''.

''எங்களுக்கிடையேயுள்ள வேறுபாட்டின் அடிப் படைக்கே வந்துவிட்டோம். எந்த வகையிலும் ஏற்றத் தாழ்வற்ற, சமத்துவமான சமுதாயத்தை, துன்ப துயரங் களே இல்லாத சமுதாயத்தை உருவாக்குவது சாத்தியம் என்பது என்னுடைய நம்பிக்கை. திட்டமிடப்பட்ட இலக்கியம் மூலம் அதைச் சாதிக்கலாம்.''

''திட்டமிடப்பட்ட இலக்கியம் என்றால்...?'' குமாரதாசன் கேட்டான்.

''வர்க்க பேதமற்ற, சுரண்டலற்ற, சமதர்ம சமுதா யத்தை உருவாக்குவதற்கு மக்களைத் தயாரிக்க வேண்டும். அடக்கு முறைக்கு எதிராக மக்களைப் போர்க்கொடி தூக்கச் செய்ய வேண்டும். இந்த நோக்கங் களுடன் இலக்கியம் திட்டமிடப்படல் வேண்டும்.''

''அடக்குமுறைக்கு எதிராக என்றால்...?''

''முதலாளிகளுக்கு எதிராக, உயர்சாதியினருக்கு எதிராக, சமயத் தலைவர்களுக்கு எதிராக... பாமர மக்களைத் தலையெடுக்க விடாது நசுக்கி வருபவர்கள் இவர்கள்''

''அத்தனை பேருமே அப்படியானவர்களா? பரந்த மனம் படைத்தவர்கள், நல்ல மனம் உடையவர் கள், இரக்க சிந்தனை கொண்டவர்கள் அவர்களிடையே இல்லையா?''

''இரண்டொருவர் இருக்கலாம். நான் மறுக்க வில்லை. ஆனால், பெரும்பாலானவர்கள் கொடுமைக் காரர்கள்தாம். அவர்களுடன் சேர்த்துச் சிறுபான்மை நல்லவர்களும் அழிக்கப்படத்தான் வேண்டும்''.

''சமுதாயப் பார்வை என்று சொல்லிக்கொண்டு சமுதாயத்தின் ஒரு பகுதியினரை அழிக்க முயலலாமா?

''அது தவிர்க்க முடியாது. 'மயிலே மயிலே இறகு போடு' என்றால் அது போடாது.''

''தான் விரும்புபவற்றைச் சட்டங்களாக்கித் துப்பாக்கி முனையில் அவற்றை அமுல்படுத்தும் சர்வாதி காரியைப் போல் இலக்கியகர்த்தாவும் செயற்பட வேண்டும் என்று விரும்புகிறீர்கள். சமுதாயம் என்பது கல்லாலும் சிமென்றாலும் கட்டப்பட்ட கட்டடமல்ல, நாம் விரும்பியபடி இடிப்பதற்கும், பின்னர்க் கட்டுவதற் கும்! மூளையும் அறிவும் மட்டுமல்ல; உள்ளமும் உணர்ச்சியும் ஆன்மாவும் உடைய தனி மனிதர்கள் சேர்ந்ததுதான் சமுதாயம். ஒவ்வொரு மனித இதயத் தையும் தனித் தனியாக அணுகி, நெகிழச் செய்து, படிப் படியாகப் பண்படுத்துவதுதான் இலக்கியத்தின் பணி. நிர்ப்பந்தம் காரணமாக அல்லாமல், இதயபூர்வமாக ஏற்படும் மாற்றம் நிரந்தரமானதாக, உறுதியானதாக இருக்கும்.''

''ஜெற் விமானங்களின் காலத்தில் இருந்து கொண்டு, நீங்கள் மாட்டு வண்டியிற் பிரயாணம் செய்ய விரும்புகிறீர்கள். நீங்கள் கருதும் மாற்றம் வரும்வரை காத்திருப்பதற்குப் புதிய தலைமுறைக்குப் பொறுமை யில்லை''.

''அவர்கள் அவசரப்படுகின்றார்கள் என்பதற்காக இலக்கியம் தடம் புரள வேண்டுமா? பலாத்காரப் புரட்சி வேண்டும் என்போர் அரசியலில் இறங்கட்டும். பொருளி யல் வாழ்வு மட்டுந்தான் பெரிது என்போர் உற்பத்தித் துறைக்குச் செல்லட்டும். இலக்கிய கர்த்தா மனிதாபி மானத்தை வளர்க்கட்டும்''

''இவ்வளவு நேரமும் கலந்து பேசியதன் பிறகும் நாங்கள் இருவேறு துருவங்களிலேதான் நிற்கிறோம்... ''குமரன்'' தியேட்டரில் புதிய படம் ஒன்று ஓடுகிறது. அதைப் போய்ப் பார்ப்போம். பார்த்த பின்னர், என்னுடைய நிலைப்பாடு சரிதான் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள்'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தான் நடேசன்.

படம் பார்ப்பதற்குக் குமாரதாசனும் இசைந்தான்.

*(தொடர்ச்சி அடுத்த இதழில்)*

# உலகத் தமிழர் கற்க வேண்டிய பாடங்கள்

முனைவர் க.ப. அறவாணன், மேனாள் துணைவேந்தர், மனோன்மணியம், சுந்தரனார் பல்கலைக் கழகம்

தமிழர் தொல்பழம் பெருமைகள் பலவற்றைப் பெற்றவர். ஆனால், ஓர் இனத்தை அந்த இனத்தின் பழம் பெருமை மட்டுமே எடுத்து நிறுத்திவிட முடியாது. 'தம் பழம்பெருமையை இழந்துவிடக் கூடாது. தம் குடிப் பெருமையை நாம் மேலெடுத்துச் செல்ல வேண்டும்' என்ற அளவில் மட்டுமே பழைய பெருமைகள் பயன் படும்; பயன்படுதல் வேண்டும். சாகேசிய இனத்தைச் சேர்ந்த ஐரோப்பியர்க்கு இத்தகு வஞ்சினம் உண்டு.

ஓர் நிகழ்வு : நிக்காலோ மானுச்சி (கி.பி. 1653-1708) என்பவர் ஓர் இத்தாலியர். ஔரங்கசீப் ஆண்ட காலத்தில் இந்தியாவிற்குத் தன் நண்பருடன் வந்தார். வழியிலேயே நண்பர் இறந்து போனார்.

ஒரு வழியாக அவரை அடக்கம் செய்த நிலையில், அரச தூதர் அங்கு வந்து சேர்ந்தார். அக்கால நடைமுறைப்படி அயல்நாட்டு வெள்ளைக்காரர் இறந்து விட்டதால், இறந்தவருடைய உடைமைகளை எல்லாம் அரச தூதரும், அவருடன் வந்த காவலர்களும் முத்திரை இட்டு கைப்பற்றிக் கொண்டனர். அதனுடன் மானுச்சி யின் உடைகளும், உடைமைகளும் கைப்பற்றப்பட்டன.

இதனால் மானுச்சி மிகவும் பாதிக்கப் பட்டார். முடிவில், தம் பொருள்களைத் திருப்பித் தருமாறு விண்ணப்பித்தார். செயலாளரிடம் பெற்றுக் கொள்ளு மாறு மேலிடத்திலிருந்து மடல் வந்தது. ஆனால், அவற்றைச் செயலாளர் திருப்பித் தரவில்லை. அவருடன் ஒத்துப் போக முடியாத நிலையில் மானுச்சி எழுதிய குறிப்பு வருமாறு :

செயலாளர் என் பேச்சை நிறுத்தும்படி கத்தினார். ''நீ, அரசருடைய அடிமை என்பதை இன்னும் உணர வில்லை'' என்று சீறினார். இந்தச் சொற்களைக் கேட்ட தும், நான் எழுந்து நின்றுகொண்டேன்.

''ஐரோப்பியர்கள் என்றும், எப்போதும், எவருக்கும் அடிமைகளாக இருந்ததில்லை. இருக்கவும் மாட்டார் கள்'' என்று விடையளித்தேன்.

இத்தாலிய மானுச்சி தன் குறிப்பில் எழுதியது போல ஓர் அறைகூவலைத் தமிழராகிய நாம் சொல்ல முடியுமா?

தமிழர், பிற இன மக்களிடம் அடிமைப்பட்டுத் தாழ்ந்து கிடந்ததை 1948-க்கு முற்பட்ட இந்திய, இலங்கை ஆகிய தாய்ப் பூமிகளும், மலேசியா, தென்னாப்பிரிக்கா, மொரீசியஸ் முதலான குடியேற்ற நாடுகளும் மெய்ப்பிக்கின்றன. உலக வரலாற்றில் அன்று தொட்டு இன்றுவரை, தம் பழம்பெருமையை இழக்கா மல் என்றும் வைத்திருக்கும் இனமாகக் கிரேக்க, உரோமானிய இனத்தையும், அவ்வினத்தின் வழி வந்த ஐரோப்பிய இனத்தையும், இடையீடுபட்டாலும், தன் தலைமை அடையாளத்தை இழக்காத சீன இனத்தையும் இடையூறுகள் இருந்தாலும், ஃபீனிக்ஸ் பறவை போல எரிதழலில் எரிக்கப்பட்டும் எரிந்து போகாமல் நிமிர்ந்து நிற்கும் யூத இனத்தையும் நாம் சுட்டிக்காட்ட முடியும்.

இதுபோலத் தமிழினத்தைச் சுட்டிக் காட்ட முடியாது. அடிமை நிலை, கூலி நிலை, அகதிநிலை என்ற மூன்று நிலையிலிருந்தும் உலகத் தமிழர்கள் முற்றுமாக மீண்டுவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. உலகத் தமிழர் 1947-48க்குப் பிறகு, அரசியல் அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்றுவிட்டது போலத் தோன்றினும், அது முழுமையான விடுதலை அன்று என்பதையே இலங்கை உள்ளிட்ட பகுதிகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. அரசியல் அடிமைத்தனங் களிலிருந்தும், அதிகார அடிமைத்தனங்களிலிருந்தும் தமிழர்கள் இன்னும் முழு விடுதலை பெறவில்லை. குடிபெயர்ந்த நாடுகளில் 'கூலி', என்ற பெயர் மாறி, குடிமக்கள் (citizen) என்ற நிலையைத் தமிழர் அடைந்து விட்ட போதிலும், அந்தந்த நாடுகளில் தமிழர் இரண் டாம் தரக் குடிமக்களாகவே இருந்து வருகின்றனர்.

தமிழருடைய இந்நிலைக்குக் காரணம், அயலார் என்று கருதுவதும், பழிப்பதும் தவறு. தமிழருடைய அன்றைய வீழ்ச்சிக்கும், இன்றைய வீழ்ச்சிக்கும் காரணர் தமிழரே. தொலைநோக்கு இன்மையும், தமிழ் எனும் மொழியை மையப்படுத்தி சமூகக் கட்டொருமைப் பாட்டை (Social Solidarity) வளர்க்காததும், தம் சமூகத் தைக் கண்ட துண்டமாக வெட்டிப்போடும் மதங்களை யும், சாதிப் பிரிவுகளையும், கட்சிப் பிளவுகளையும் அனு மதித்து வளர்த்தெடுத்தும், உட்பகையும், பொருளாதார நோக்கில் போதிய அளவு சிந்திக்காததும், பின் நாளில் வரும் அரசியல் ஆதிக்கங்களை ஊகித்துத் தற்காத்துக் கொள்ளாததும் குறிக்கத் தக்கனவாகும்.

சோதனைகள் வந்தபோதும், வரும்போதும் வெற்றி பெற்ற இனமக்கள் எவ்வாறு அவற்றை எதிர் கொண்டார்கள், வீழ்ந்தாலும் நிரந்தரமாக வீழாமல் எவ்வாறு நிமிர்ந்து நின்றார்கள் என்பதைக் கூர்ந்து பார்த்தாவது நாம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு சில பாடங்கள் வருமாறு :

1.ஐரோப்பிய இன வரலாற்றைக் கற்கும்போது அவர்கள் தமக்குள் பேதம் கொண்டு, அடித்துக் கொண்டார்கள். ஒருவர் மேல் ஒருவர் படையெடுத்துக் கொண்டார்கள். ஆனால், எக்காரணம் கொண்டும் ஆசிய ஆப்பிரிக்க, ஆஸ்திரேலியக் கண்ட மக்கள் தம் மேல்

ஆதிக்கம் செய்வதை அவர்கள் ஒருபோதும் அனுமதிக்க வில்லை. மங்கோலிய இனத்தலைவன் செங்கிஸ்கான் (கி.பி. 1162-1227) மகன் ஒகடாய் 1241-இல் ஐரோப்பாவின் ஒரு பகுதியைக் (ரஷியா, போலந்து, ஹங்கேரி, ஜெர்மனி) கைப்பற்றினான் என்பது வரலாறு. ஆனால், அந்நிலை சிலகாலம்கூட நீடிக்கவில்லை, நீடிக்க விடவில்லை.

அன்று தொட்டு, ஐரோப்பியரும் அவருக்கு மூலவரான கிரேக்கரும், உரோமரும் தம் நாடுகளைக் கடந்து தாம் வாழும் ஐரோப்பாக் கண்டத்தைக் கடந்தும், கடல் கடந்தும் வேறு நாடுகளை வெற்றி கண்ட பொழுது, வென்ற நாடுகளை நம்மைப்போல அப்படியே விட்டு விட்டு வந்துவிடவில்லை. அவற்றைத் தம் பூமிகள் ஆக்கிக் கொண்டார்கள். தம் மொழி, பண்பாடு, நாகரிகம், ஆட்சி ஆகியவற்றை அங்கே நிலை கொள்ளச் செய்தார்கள். அலெக்சாண்டர் (கி.மு. 356-323) எகிப்தின்மேல் படையெடுத்ததின் நினைவாக எகிப்தில் அலெக்சாண்டிரியா என்ற நகரம் உருவாக்கப் பெற்றது. டாலமி (ptolemy) எனும் கலப்பினமே அந்நாட்டை நெடுங்காலம் ஆண்டது. புகழ் பெற்ற எகிப்திய அரசி, கிளியோபாத்ரா, டாலமி இனத்தில் பிறந்தவள். உலகம் முழுதும், கிரேக்கக் கலையும், கிரேக்க இரத்தமும், உரோ மானியர்களின் இரத்தமும் கலந்தன. தமிழ்நாட்டுச் சங்க கால அரசிகளின் அந்தப்புரங்களில் கிரேக்க மகளிர் வேலை பார்த்ததும், தமிழ் அரசர்க்கு மதுவை ஊற்றிக் கொடுத்ததும் இலக்கியப் பதிவுகள், தமிழகம் முழுதும் குவியல் குவியலாகக் கிடைத்துள்ள உரோமானியக் காசுகளும், மதுச் சாடிகளும் தமிழர் பெருமையை அறிவிப்பன அல்ல. உரோமானியக் காசுகளுக்கும், மதுவுக்கும் கி.மு.விலேயே தமிழர் அடிமையானமைக்கு அவை சான்றுகள்.

2.கவனிக்க வேண்டிய இன்னோர் இனம் சீன இனம். இன வரலாற்றின்படி சீனர் மங்கோலிய இனத்தைச் சார்ந்த மஞ்சள்நிற மக்கள். கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் அனைத்துக் கண்டங்களிலும் பரவிய ஐரோப்பிய அரசியல் ஆதிக்கத்தை எதிர்த்துச் சாதித்துக் காட்டியவர்கள் ஆப்பிரிக்காவிலும் இல்லை. தென்-வட அமெரிக்காவிலும் இல்லை. ஆஸ்திரேலியாவிலும் இல்லை. ஆசியாவில் உள்ள பிற இன மக்களிலும் இல்லை. ஜப்பானும், தாய்லாந்தும் முற்றுமாக ஐரோப்பிய ஆதிக்கம் உள்ளே நுழைய விடாமல் கடைசிவரை தடுத்துக் கொண்டன. பெரும்பகுதி சீனர்களும் அதில் வெற்றி கொண்டனர்.

சீனர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது. அவர்தம் தலைமை உயர்வு (Superiority Complex). உலக இன மக்களிலேயே சீன இனம் தான் உயர்ந்தது என்று ஒவ்வொரு சீனக் குழந்தைக்கும் கற்பிக்கப்பெறுகிறது. சீனர்களில் ஏழைகள் இருப்பதில்லை அவர்கள் பல நாடுகளுக்குக் குடியேறியபோதும் எந்த இடத்திலும் அவர்கள் பிச்சைக்காரர்களாக இருந்ததில்லை. இருப்ப தில்லை. வாணிகத்திலும், செல்வம் சேர்ப்பதிலும் மிகக் குறியாக இருப்பார்கள். இருக்கும் இடத்தில் மட்டு மல்லாமல் குடியேறிய நாடுகளில் தங்கள் மொழி, பண்பாடு, நாகரிகம், பெயர் சூட்டிக் கொள்ளும் முறை முதலானவற்றில் பிடிவாதமாக இருப்பார்கள்.

இந்த நிலைமையை அவர்கள் அடைந்ததற்குக் காரணம், தங்கள் இனத்தில் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் பிறந்த கன்ஃபூசியஸ் (கி.மு. 551-479) போதனை களையும், இலாவோஸ் (கி.மு. ஆறாம் நூற்றாண்டு) போதனைகளையும் கடந்த முப்பது நூற்றாண்டுகளாகக் கடைப்பிடித்து வருவதுதான்.

சீனாவிலும், அயல் நாடுகளிலும் வாழும் சீனர்கள், தாம் வாழும் இடங்களில் வாணிகத்தையும், பொருளாதாரத்தையும் தம் கைவசம் வைத்திருப்பதைக் காணுகிறோம். பொருளாதார முதன்மை, சீனர்களுக்குக் குடியேறிய நாடுகளிலும் தலைமையைப் பெற்றுத் தந்திருக்கிறது.

3.உலக ஆதிக்குடிமக்களாக யூதர்கள் தம்மைக் கருதுகின்றனர். பைபிள் பழைய ஏற்பாட்டைத் தங்கள் புனித நூலாகப் போற்றுகின்றனர். அதனை ஒட்டி, மோசஸ் அமைத்துக் கொடுத்த யூத சமயத்தைத் தங்கள் உயிரினும் மேலானதாகப் பின்பற்றுகின்றனர். உலக இன மக்களின் சொல்லில் வடித்தெடுக்க முடியாத துன்பங் களை யூத மக்கள் சந்தித்துள்ளனர். முதல், இரண்டாம் உலகப் போர்களின்போது இலட்சக்கணக்கில் யூதர்கள் துடிதுடிக்கக் கொல்லப்பட்டனர். ஜெர்மானிய சர்வாதி காரி ஹிட்லர் மட்டும், அறுபது இலட்சம் யூதர்களைக் கொன்று குவித்தான்.

இப்படிச் சொல்லொணாத் துயரத்தை அனுபவித்த யூதர்களிடம் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய மூன்று பழக்கங்கள் உள்ளன. அவை யாவன :

ஒன்று, எந்தச் சூழ்நிலையிலும் கல்வி கற்பது. இரண்டு, தம் யூத இன மக்களில் ஒருவர் சிறிய ஒன்றைச் சாதித்தாலும் அவரை உற்சாகப்படுத்தி ஊக்கப் படுத்துவது. மூன்று, சீனர்களைப் போன்றே சீனர்களை விடவும் பொருளாதாரத்தில் யூதர்கள் மிகக் குறியாக இருப்பார்கள். அன்று மட்டுமன்றி இன்றும் உலகப் பெரும் பணக்காரர்களாக யூதர்களே விளங்குகின்றனர்.

ஐரோப்பிய, சீன, யூத வரலாற்றை உற்றுப் பார்க்கும்போது அவர்தம் பெரும் வெற்றிக்கு மிகப் பெரிய காரணம், அவர்கள் பொருளாதாரத்தில் முன்னிலை வகிப்பதே என்பதை அறிந்துகொள்ளலாம். தமிழர்கள், தம் பொழுதுபோக்கு, கலை, இலக்கிய நாட்டங்களிலிருந்து பொருளாதார நாட்டத்தை நோக்கி ஒருமித்து முயல வேண்டும். உலகத் தமிழர்தம் நிகழ் கால, வருங்கால வெற்றியை அவர்களுடைய பொருளா தார வெற்றியே நிருணயிக்கும். ✱

# கலாபூஷணம், கவிஞர் வேலணை வேணியன்
# 68-ஆவது பிறந்த நாள் வாழ்த்து

*சிறந்த கவிஞனாகவும், இலக்கியவாதியாகவும், சமூக சேவையாளனாகவும், அரசியல்வாதியாகவும், தமிழ்த் தேசியத்தை நேசிப்பவராகவும் தமிழுணர்வாளராகவும் கொழும்பு மாநகரிலிருந்து பல்வேறு பணிகள் ஆற்றிவரும் கவிஞர் வேலணை வேணியன் அகவை 68 எய்தியுள்ளார். சுடரொளி வெளியீட்டுக் கழகம் நடத்திய இரண்டாவது உலகக் கவிதைப் போட்டி சிறப்புடன் நடந்தேற உதவியதோடு இலண்டன் சுடரொளி வளர்ச்சிக்கும் ஆதரவு நல்கிவரும் வேலணை வேணியன் நீண்ட காலம் வாழ்ந்து நற்பணியாற்ற சுடரொளி வெளியீட்டுக் கழகம் வாழ்த்துகிறது.*

*இலக்கியச் செம்மல் செ. குணரத்தினம் அவர்களின் செய்தியையும் இங்குப் பிரசுரித்துக் கௌரவிக்கிறோம்.*

கவிஞர் வேலணை வேணியனின் 68 ஆவது பிறந்த தினம் நாளை திங்கட்கிழமையாகும். இவர் வேலணை பிரபல ஆங்கில ஆசான் அமரர் சு. வைத்திய லிங்கம் தம்பதிகளின் புதல்வராவார்.

இவரது தாயார் விசாலாட்சி அம்மையார் தனது 91-ஆவது வயதிலும் இன்றும் வாழ்ந்து வருகின்றார். இவர் தனது ஆரம்பக் கல்வியை வேலணை சைவப் பிரகாச வித்தியாசாலையிலும் உயர் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியில் பெற்றுக்கொண்டார்.

1955, 1956-ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் சிதம்பரம் ஆறுமுக நாவலர் கலாசாலையில் தமிழ்க் கல்வியைக் கற்றுக்கொண்டார். இக்காலத்தில் கவியரசர் மூலம் கற்றுக்கொண்டார். இக்காலத்தில் கவியரசர் கண்ணதாசன், தற்போதைய தமிழக முதல்வர் டாக்டர் மு. கருணாநிதி ஆகியோருடன் நட்புறவைப் பெற்றுக் கொண்டார். சிதம்பரத்தில் ஈசான சிவாச்சாரியாரின் தேவாரப் போட்டியில் முதல் பரிசினைப் பெற்று ஆறுமுகநாவலர் கலாசாலைக்குப் பெருமை சேர்த்தார்.

மலையகத் தோட்டத்து மக்களுடன் நெருங்கிய நட்பையும் அன்பையும் தேடிக் கொண்டார். இவர் பொக வந்தலாவை, தொங்கப்பத்தனை, செல்வகந்தை, குயிணாத் தோட்டங்களில் பண்டகசாலைப் பொறுப்பாளராகக் கடமையாற்றினார். அங்குத் தோட்ட உத்தியோகத்தர் சங்கத்துடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தார். இவரது கங்கை பொங்குது எனும் கவிதைத் தொகுப்பு இலங்கை, இந்தியா, டென்மார்க் ஆகிய மூன்று நாடு களில் வெளியிட்டு வைக்கப்பட்டது. இவரது கவிதைத் திறமைகளுக்காகத் திருவருட்கவிஞன், அருட்கவி, வரகவி, தமிழ்த் தென்றல் ஆகிய கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2005-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இவர் கலா பூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். கொழும்பு மாநகர சபைக்கு இம்முறை நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்டு மாநகர சபை உறுப்பினராகப் பணிபுரிந்துவருகிறார். இதற்கு முன்னரும் மாநகர சபை உறுப்பினராகப் பணி புரிந்துள்ளார். இலங்கை வானொலியில் பல நாடகங்களில் நடித்துள்ளார். மறைந்த சில்லையூர் செல்வராஜனுடன் கவிதை நிகழ்ச்சிகளில் இலங்கை வானொலியில் பங்கு பற்றியிருக்கிறார். அந்த நன்றியுணர்வால் 1995-ஆம் ஆண்டு பொரளை கனத்தை மயானத்தில் சில்லையூர் செல்வராஜனுக்கு உருவச் சிலை ஒன்றை நிறுவியுள்ளார்.

1983-ஆம் ஆண்டு அகில இலங்கை கண்ண தாசன் மன்றத்தினை ஆரம்பித்துக் கவியரசருக்கு வெள்ள வத்தை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் சிலை நிறுவி யுள்ளார். அத்தோடு அகில இலங்கை கண்ணதாசன் சங்கம் சார்பாகக் கொழும்பில் உள்ள பல தமிழ்ப் பாடசாலைகளுக்கும் பல முக்கிய நிறுவனங்களுக்கும் வள்ளுவர் சிலைகளை வழங்கியுள்ளார். இவர் மேலும் பல்லாண்டு வாழ்ந்து தனது தமிழ்ப்பணியைத் தொடர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

இலக்கியச் செம்மல் செ. குணரெத்தினம்,
முன்னாள் அரசாங்க அமைச்சுச் செயலாளர், முன்னாள் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர். ✱




கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற 2ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி பரிசளிப்பு விழாவில் உரையாற்றும் கவிஞர் **வேலணை வேணியன்**

## MAHA KUMBABISHEKAM CEREMONY - MUAR

**E. Paramananthan,** Kuantan, Malaysia

The consecration ceremony (Maha Kumbabishekam) of the historic Sri Muthumariamman Temple in the heart of Muar town (Kuantan, Malaysia) was attended by some 5,000 devotees.

An endless stream of devotees and well wishers from all over the country make their way to witness the auspicious Maha Kumbabishekam ceremony culminated on 2nd July 2006.


Devotees started to converge the temple as early as 6 am to witness the Yaha Salai Pooja, before the gathering grew into thousands as devotees from Singapore joined their brothers and sisters at the temple.

The highlight of the ceremony was the Maha Kumbabishekam prayers led by Suresh Kurukkal assisted by 22 priests, where the main Gopuram was consecrated at an auspicious moment, holy water and basket of flower petals were showered simultaneously.

The entire temple complex had been extensively renovated, the mammoth project came into action in the year 2002.

Free vegetarian meal and refreshment were served by the temple from noon till evening for devotees outside the temple complex.

Devotees patronize the thirty over stalls outside the temple complex selling a host of merchandise ranging from traditional foodstuffs to religious books including audio and VCD at bargain price.




## Unesco award for 'Oh Mind! relax please' book



On 1-8-2006, Monday A new self-development workshop "Manase Relax Please" (Oh Mind Relax Please) was launched in Kuala Lumpur city at a function at Sri Shakti Vinayagar Temple, Bandar Tun Sambanthan, KL city. This workshop is conducted by the famous international spiritual and management master Swami Sukhabodhananda, who is also the author of the all-time best-seller tamil book, "Manase Relax Please". This workshop is designed to help the Hindu Community in Malaysia to understand the rich heritage of their culture in the right perspective and thus overcome the modern-day stresses, emotional disturbances, and physiological and psychological sufferings, explained Mr. Ramesh Partani, the seniormost disciple of Swami Sukhabodhananda.

Speaking on the occasion, YB Dato M. Pasupathy and Senchor Tamilmigu Sir Shree Eela Vengkai informed the gathering that Swamiji's book Manase Relax please has been included in the Tamil Book Bank of UNESCO (TD). Dato M. Pasupathy also presented a UNESCO AWARD issued by UNESCO MANDRAM, KL city to this effect to Mr. Ramesh Partani on the occasion.

The speaker also gave a detailed explanaton of the various mantras and their use in practical day to day life to achieve the desired results. There was an overwhelming response to the unfolding of the rich heritage of the Hindu culture by the august gathering.

# புஷ் என்ற மாரகனின் போர்க்கோலம்

பொன் பாலா

ஜனநாயகம் மக்களுக்காக மக்களினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்ற மக்களுக்கான கொள்கையை முன்வைத்த ஒரு நாட்டிலிருந்து இன்று போருக்கான பறை ஒலித்துக்கொண்டிருக்கிறது.

எடுத்ததற்கு எல்லாம் போர். நினைத்த மாத்திரத்தில் போர். எதற்கும் போர். எங்கும் போர்.

மக்களுக்காகச் சுதந்திரம் இருக்கவேண்டுமென 1861ஆம் ஆண்டில் ஆபிரஹாம் லிங்கன் உபதேசம் செய்த அதே மண்ணிலிருந்து இந்தப் போர் முழக்கம் கேட்பதுதான் வேதனையாகவும், விந்தையாகவும் உள்ளது.

ஒரு நாட்டின் மீதோ அல்லது ஒரு நாட்டின் மக்களின் மீதோ போர் தொடுப்பதற்கு எல்லா நேரங்களிலும் தயாராக இந்த நாட்டின் இன்றைய தலைமைப் பீடம் தயாராக இருக்கிறது.

இந்த நாட்டில் 'சமாதானம்' என்ற சொல்லிற்கு மதிப்பில்லாமல் போய்விட்டது. சமீபகால அரசியல் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் இது புலனாகும்.

1941-ஆம் ஆண்டில் ஆரம்பமான இரண்டாவது உலக யுத்தத்தின் போது ஜப்பானின் நாகஸாகியில் (1945) அழிவை உண்டாக்கிய அணுகுண்டைப் போட்ட நாட்டிலிருந்து இப்படியான போர்க் குரல் வருவதை நினைக்கும்போது மூன்றாவது உலக யுத்தம் ஒன்று அந்த நாட்டின் ஒரு தளத்தில் உருவகம் பெற்று வருவதாக நினைப்பதில் கூடத் தவறில்லை.

1965-1973ஆம் ஆண்டுக் காலத்தில் வியட்நாமில் போர் தொடுக்கப்பட்டது. எட்டு வருடங்கள் போர் தொடர்ந்தது. ஆனால், முடிவில் போர் தொடுத்தவர்களே புறுமுதுகு காட்டவேண்டி ஏற்பட்டுவிட்டது. இதையும் பழைய கதை என விட்டுவிடலாம்.

2003க்கு வருவோம். ஈராக் போர் ஆரம்பிக்கப்பட்டது. நாசகார அணு ஆயுதம் அங்கு இருப்பதாகவும், அவற்றை அழித்து உலகத்தையே காப்பாற்றப் போவதாகவும் போர் முரசு கொட்டப்பட்டது. நடந்தது என்ன? எந்தப் பயங்கர ஆயதமும் கண்டுபிடிக்கப்படவில்லை. முகங்களில் அசடு வழிய ஆரம்பித்துவிட்டது. எந்த உலகத்தைக் காப்பாற்றிவிட்டார்கள்?

இவர்களுக்குக் கிடைத்த பயங்கர ஆயுதம் மனித உருவெடுத்து வந்த சதாம் ஹுசெய்ன் என்ற ஒரு தனி மனிதன்தான்.

இன்று ஈராக் என்ற ஒரு நாடு அழிந்து கொண்டிருக்கிறது. தினமும் கோரமாக மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாடே பிணக்காடாக மாறி இருக்கிறது.

இனி, ஆப்கானிஸ்தானுக்கு வருவோம். எல்லாம் முடிந்து அமைதிப் பூங்கா மலர்வதாகக் கூறினார்கள். அங்கு அப்படி எதையும் காண முடியாமலிருக்கிறது.

இந்த நாடுகளுடன் போர் முழக்கம் ஓய்ந்து விடவில்லை. ஈரானில் பயங்கர அணு ஆயுத தயாரிப்புக்கான யூரேனிய உலை இருக்கிறதாம்.

லெபனானிலுள்ள ஹெஸபுல்லர்களுக்கு ஸிரியா ஆயுதங்களைக் கொடுப்பதாகக் குற்றம் சாட்டுகிறது.

வடகொரியாவும் ஈரானைப்போல எல்லை மீறி அதாவது கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து சென்று தாக்கும் ஆயுதங்களைத் தயாரிப்பதாகக் குமுறுகிறது.

இப்படியான குற்றச் சாட்டுகளைப் பார்க்கும் போது மூன்றாவது உலக யுத்தம் ஒன்று அவசியம் என்பதற்கு அடித்தளம் அமைப்பதாகவே நினைக்க வேண்டியிருக்கிறது.

இந்த அவல நிலையின் சூத்ரதாரி ஜோர்ஜ் புஷ் என்னும் போர் விரும்பிதான். இவருக்குத் துணை செல்பவர் பிரித்தானியாவின் ரோனி பிளயர் என்பவர். பத்திரிகைகள் எல்லாம் பிளயரை புஷ்ஷின் பின்னால் வாலாட்டித் திரியும் நாய்க்குட்டி என வர்ணித்துள்ளன.

இவர்களது மத்திய கிழக்குக் கொள்கை இன்று உலகத்தின் கண்டனத்துக்குள்ளாகி இருக்கிறது. மத்திய கிழக்கில் தோல்வி, லெபனானில் தோல்வி, ஆப்கானிஸ்தானில் தோல்வி என்று பத்திரிகைகள் விமர்சிக்கின்றன.

'வந்தேன்', 'கண்டேன்', 'வென்றேன்' என்று ஜூலியஸ் ஸீஸர் எங்கோ, எப்போதோ, எதற்காகவோ சொன்னதாக ஒரு ஞாபகம். ஆனால், இந்த புஷ் என்ற பூச்சாண்டி 'போர் தொடுத்தேன்', 'கொன்றேன்', 'புறமுதுகு காட்டினேன்' எனக் கூறுவதற்குக் கூட அருகதையற்ற நிலையில் இருப்பதைப் பார்த்து உலக மக்களுடன் சேர்ந்து அமெரிக்க மக்களும் சிரிக்கிறார்கள்.

இந்தப் போர்க் கோலத்தால் 298, 213,000 (29 கோடி 82 இலட்சத்து 13000 பேர்) (இதுவரை காலமும் சுதந்திரமாக நடமாடிய) அமெரிக்க மக்கள் பீதியில் வாழ வேண்டிய நிலையில் உள்ளனர் என்பது உலகளாவிய உண்மையாக இருக்கிறது.

புஷ்ஷின் ஆட்சிக்காலம் அமெரிக்க சரித்திரத்தில் அழிவை ஏற்படுத்திய காலம் எனச் சரித்திரப் பதிவேடுகள் வருங்காலச் சந்ததியினருக்குக் கூறப்போகின்றன. சிறிய நாடுகளில் நடக்கும் சிறிய பிரச்சனைகளில்கூடப் பேச்சுவார்த்தை என்ற திறவுகோலை இவர் உபயோகித்தது கிடையாது. அமைதியாக அணுகியதும் இல்லை.

புஷ்ஷின் கொள்கையால் அமெரிக்கா காப்பாற்றப் பட்டுள்ளதா? அமெரிக்கர்கள் பாதுகாக்கப் பட்டுள்ளார்களா? அமெரிக்க நலன்கள் பேணப் பட்டுள்ளனவா? பதில் வெட்ட வெளிச்சம்.

கறுப்பு இன மக்களின் அடிமை விலங்கை அறுத்துச் சுதந்திர மனிதர்களாக வாழவைத்த ஆபிரஹாம் லிங்கன் ஆட்சிக் காலத்திலிருந்து இன்று வரையில் புஷ்ஷின் காலத்தில்தான் அதிகமான அளவு அமெரிக்கர்கள் போர்முனைகளில் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பதை புஷ்ஷால் மறுக்க முடியுமா? அல்லது, அமெரிக்கா பயங்கரமான அழிவை எதிர்நோக்கியதும் புஷ்ஷின் ஆட்சிக்காலத்தில் தான் என்பதை புஷ் மறைக்க முடியுமா?

சுதந்திரமாக வாழ்ந்த அமெரிக்க மக்கள் இன்று இரவு பகலாகப் பீதியில் வாழ்ந்து வருகிறார்கள்.

இந்தத் தொடர் கதை எப்போது முற்றுப் பெறப் போகிறது? புஷ் இருக்கும் வரை அது சாத்தியமாகாது என நம்பலாம். *

"புலிகள்... எம்.ஜி.ஆர்... கலைஞர்..." வைகோ. அதிர்வேட்டு ஃப்ளாஷ்பேக்!

# கோபத்தின் உச்சத்தில் கொந்தளிக்கிறார் வைகோ!

தருமபுரியில் ம.தி.மு.க.வின் செயல் வீரர்கள் கூட்டம்... சென்னை சென்ட்ரலில் இரயில் ஏற வந்தவருக்குத் தொடர்ந்து தொலைபேசி அழைப்புகள். ''ரொம்ப சந்தோஷம், நல்ல சேதி சொல்லியிருக்கீங்க, இது எனக்குச் சர்க்கரை மாதிரியான செய்தி'' என்றபடி கூபேயில் அமர்ந்தார். ரயில் புறப்பட, வைகோவிடம் நாம் கேட்ட முதல் கேள்வியே... *''அது என்ன சர்க்கரைச் சேதி?''*

''ஈழத் தமிழர் பாதுகாப்புப் பொதுக் கூட்டத்தில் நான் பேசியது இந்திய இறையாண்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தி விட்டது என்று குற்றம் சாட்டி, என்னைச் சிறையில் அடைக்கத் துடிக்கிறார்களாம். அதுதான் சர்க்கரைச் சேதி, கைதுக்கும் சிறைக்கும் எப்போதும் அஞ்சுபவன் அல்லன் இந்த வை.கோ. வழக்குகள் வரட்டும், காத்திருக்கிறேன்!''

இடையிடையே புலம் பெயர்ந்த தமிழர்கள் சிலரின் அழைப்புகளுக்குப் பதில் சொல்பவர், ''அவங்க வேதனை எனக்கு நல்லாப் புரியுது. 'தமிழ்நாட்டில் இலங்கைப் பிரச்சினையை எப்படிப் பார்க்கிறாங்க, எங்களுக்கு இந்த முறையாவது நல்ல காலம் பிறக்குமா?'ன்னு கேட்கிறாங்க. 'நல்லது நடந்தே தீரும்'னு சொல்லிட்டிருக்கேன்'' என்று வேதனையாகச் சிரிக்கிறார்.

தமிழக சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு வை.கோ.வுடன் இதுதான் ஆனந்த விகடனின் முதல் சந்திப்பு. 'ஜூனியர் விகடன் பத்திரிகை மாறன் குடும்பத்துக்குக் கைமாறிவிட்டது' என்று தேர்தல் சமயத்தில்தான் வெளியிட்ட தகவல் தவறானது என்று மனப்பூர்வமாக நம்மிடம் வருந்தியவர், இலங்கை நிலவரம் பற்றிப் பேச்செடுத்ததுமே எரிமலையாகிறார்.

***''இலங்கையில் போர் மேகங்கள் சூழும்போதெல்லாம் தமிழக அரசியல் கட்சிகள் கொடி பிடிப்பதும், பிறகு அந்தப் பிரச்சினையை மறந்துபோவதும் வெகுகாலமாக நடக்கும் வேதனையான வாடிக்கை. இலங்கைப் பிரச்சினை தீர என்னதான் தீர்வு சொல்லுங்கள்?''***

''வல்வெட்டித்துறையில் வேலுப் பிள்ளையின் மகனான பிரபாகரன் என்ற இளைஞன் தனது 16-ஆவது வயதில் 'புதிய புலிகள்' என்ற பெயரில் இயக்கம் கண்டு, ஆயுதம் ஏந்திப் போராட ஆரம்பித்தது ஏன்? வரலாற்று ஆதாரங்களுடன் இலங்கையில் தமிழர்களுக்கு இருந்த உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறித்து வந்த சிங்களப் பேரினவாதத்தின் உச்சகட்டக் கொடூரமாக நடந்த ஒரு நிகழ்வு. இரண்டு தமிழ்ச் சிறுவர்களைச் சிங்களர்கள் கொதிக்கும் தாரில் போட்டுக் கொன்ற துயரச் சம்பவம். இதோ, இப்போதும் செஞ்சோலையில் தமிழ்க் குழந்தைகளைச் சிங்கள இராணுவம் குண்டு வீசிக் கொன்றிருக்கிறது. அன்று பிரபாகரன் ஆயுதம் ஏந்தியது சரிதான் என்பதை உலக நாடுகள் இனியாவது ஒப்புக்கொள்ளும். புலிகள் மட்டும் இல்லையென்றால், சிங்களத் தீவில் இப்போது ஒரு தமிழன்கூட உயிரோடு இருந்திருக்க மாட்டான். என்னைக் கேட்டால், இதற்குத் தீர்வு ஒன்றுதான். அது, போர்தான்.

இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ள இப்போது ஈழத் தமிழர்களே விரும்புகிறார்கள். புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிருவாகத்தில் நேர்மையையும், நியாயத்தையும் வரவேற்கிறார்கள். அங்குள்ள அப்பாவித் தமிழர்களுக்கு ஆதரவாகப் பேசுவதாலேயே எங்கள் இயக்கத்தை முடக்கிவிட இங்கே எத்தனை சூழ்ச்சிகள், பயமுறுத்தல்கள்! எதற்கும் நாங்கள் பயப்பட மாட்டோம். இந்த வைகோவைத் தூக்கு மேடைக்கே அனுப்பினாலும் சரி, துணிச்சலோடு ஏற்றுக்கொள்ளத் தயாராக நிற்கிறேன்.''

*''பல வருடங்களுக்கு முன், தனக்குத் தெரியாமல் தான் வைகோ ரகசியமாக இலங்கைக்குப் போய்ப் பிரபாகரனைச் சந்தித்ததாக முதல்வர் கருணாநிதி அடித்துச் சொல்கிறாரே...?''*

''அன்றைய எனது ஈழப் பயணம் குறித்து, கொஞ்சம் விவரமாகச் சொன்னால் தான் தமிழக அரசியல் குறித்துப் புலிகளின் கருத்து மக்களுக்கு முழுமையாக விளங்கும்.

இப்போது இலங்கை அரசுக்கு மாபெரும் சிம்ம சொப்பனமாகப் புலிகள் இருக்கிறார்களே, இதற்கு எப்போதோ அடித்தளம் அமைத்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்! அவர்தான் புலிகளுக்கு ஆரம்பத்தில் உதவிகளை வாரிக் கொடுத்தவர். அந்த வகையில் கலைஞரைவிட, பிரபாகரனுக்கு எம்.ஜி.ஆரைத்தான் ரொம்பவும் பிடிக்கும்.

எம்.ஜி.ஆர். மறைவதற்குச் சில நாள்களுக்கு முன்பு தில்லிக்குச் சென்றிருந்தார். இலங்கை அரசுக்கு மத்திய அரசு போர் உதவிகளைச் செய்வதை நிறுத்தச் சொல்லி வற்புறுத்தினார். இலங்கையில் போர் நிறுத்தத்துக்கு வகை செய்யுங்கள் என்று கேட்டுக்கொண்டார். ஆனால், மறுநாள் காலையில் 'தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். எங்களிடம் இலங்கை தொடர்பாக எந்த கோரிக்கையையும் வைக்கவில்லை' என்று மத்திய அரசு சொன்னது. எனக்குத் தெரிந்து இந்த மன வருத்தம்தான் எம்.ஜி.ஆரின் உடல்நிலையை மோசமடையைச் செய்திருக்க வேண்டும். காரணம், இலங்கைத் தமிழர்கள் குறித்தும், அவர்களுக்காகப் போரிடும் புலிகள் குறித்தும் எம்.ஜி.ஆருக்கு அளவு கடந்த பாசம் இருந்தது. எம்.ஜி.ஆர். இருந்த வரை அவரை ஆதரித்த புலிகள், அவரது மறைவுக்குப் பிறகு கலைஞரை முழுமையாக ஆதரிக்கவில்லை. அந்த வருத்தம் எப்போதும் கலைஞருக்கு உண்டு.

89-இல் கலைஞர் முதல்வராகப் பதவியேற்றுக் கொண்டவுடன், இலங்கையில் என்னதான் நடக்கிறது... கலைஞர் பற்றி புலிகளின் அபிப்பிராயம்தான் என்ன என்பதைத் தெரிந்து வந்து கலைஞரிடம் சொல்வோமே

என்ற எண்ணத்தில்தான் நான் வவுனியாவுக்குச் சென்று பிரபாகரனைச் சந்திக்க முடிவெடுத்தேன்.

நான் பிரபாகரனைச் சந்திக்கப்போவது யாருக்கும் தெரியக் கூடாது என்பதற்காக, இப்போது கடல் புலிகளின் தலைவராக இருக்கும் சூசையை என் வீட்டுக்கு வரவழைத்து, என் மனைவிக்குக் கேட்கும் படியாக, 'லண்டனுக்கு விசா எடுங்கள்' என்று போலியாக உரக்கச் சொல்லி அனுப்பினேன். அடுத்து என் உதவியாளர் திவானை அழைத்து, குட்டி என்பவர் மூலமாகக் கலைஞருக்கு ஒரு கடிதம் கொடுத்து, அதை மறுநாள் காலையில் கொடுத்துவிடச் சொன்னேன். நான் கடிதம் கொடுத்தது 89-ஆம் ஆண்டு பிப்பிரவரி 6-ஆம் தேதி மாலை.

கலைஞர் அந்தக் கடிதத்தை வைத்துக்கொண்டு, சாமர்த்திய அரசியல் செய்யும் திட்டம் போட்டிருக்கிறார். நான் இலங்கைக்குச் சென்றதும் என்னைப் பற்றிய எந்தத் தகவலும் இல்லையென்பதால், பேபி சுப்பிரமணியத்தை அழைத்து, 'வைகோவுக்கு என்ன ஆனது?' என்று கேட்டிருக்கிறார்கள். 'வைகோ போன பாதையில் கடுமையான சண்டை நடக்கிறது. அவருக்குப் பாதுகாப்பாகச் சென்ற சிலரும் இறந்துவிட்டார்கள். வைகோவைப் பற்றிய எந்தத் தகவலும் இல்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். அதே சமயத்தில் இலங்கைப் பத்திரிகைகளில், போரில் வைகோ படுகொலை செய்யப்பட்டார் என்று செய்தி வெளியானது. எல்லாவற்றையும் வைத்து, 'இனி வைகோ வரமாட்டான். அவன் நம்மைப் போற்றி எழுதிக் கொடுத்து விட்டுப் போன கடிதத்தைப் பத்திரிகைகளுக்குக் கொடுத்து விடலாம்' என்று என் கடிதத்தை வெளியிட்டு விட்டார்கள். அதைத்தான் இப்போது சட்டமன்றத்திலும் படித்துக் காட்டியிருக்கிறார் கலைஞர், அப்போது நான் ஒரு தி.மு.க. உறுப்பினர் என்பதால் எனது ஈழப் பயணத்தால் கழகத்துக்கு எந்தவொரு சங்கடமும் வரக் கூடாது என்பதற்காக அப்படியொரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போனேன்.

இந்த இடத்தில் இலங்கையிலேயே என்னைத் தீர்த்துக்கட்ட, இந்திய இராணுவம், தொடுவாய் என்ற இடத்தில் பயங்கரத் தாக்குதல் நடத்தியது. அதில் என் பாதுகாப்புக்கு வந்த புலித் தளபதிகள் பலர் அழிக்கப் பட்டார்கள். நானும் சிலரும் பக்கத்தில் இருந்த ஒரு காட்டுக்குள் மூன்று நாள்கள் தலைமறைவாக இருந்தோம். இந்த நிலையில் பேராசிரியர் அன்பழகன் எனது இலங்கைப் பயணத்தைப் பற்றி ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில், 'வைகோ இலங்கைக்குப் போனது கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய செயல், அவரது நடவடிக்கைக்கும் கழகத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை' என்று குறிப்பிட்டிருந்தார்.

பேராசிரியரின் அறிக்கை வருவதற்கு முதல் நாள் சென்னையில், இந்திய இராணுவத் தளபதி ஒருவர் கலைஞரைச் சந்தித்துப் பேசியிருக்கிறார். ஒரு வேளை, நான் உயிரோடு இந்திய இராணுவத்தினரால் பிடிக்கப் பட்டால் தி.மு.க.வின் நிலை என்னாகுமோ என்ற அச்சத்தில்தான் பேராசிரியரால் அப்படியொரு அறிக்கை கொடுக்கப்பட்டு இருக்கிறது.

இந்தச் செய்தியெல்லாம் தமிழகத்திலிருந்து புலிகளுக்குத் தெரிவிக்கப்பட்டு, என்னிடம் சொல்லப் பட்டது. அப்போது பிரபாகரன் என் பக்கத்தில் இருந்தார். 'நான் பெரிதும் நம்பிய என் சொந்தக் கட்சியே எனக்கு மாபெரும் துரோகம் செய்துவிட்டது. இனி நான் இந்தியா போக மாட்டேன். தமிழகத்துக்கும் போக மாட்டேன்' என்று முடிவெடுத்தேன். ஆனால் பிரபாகரனோ, 'நீங்கள் தமிழ்நாட்டுக்குப் போக வேண்டும். அண்ணிக்கு நான் என்ன பதில் சொல்வேன்? அவர்கள் கையால் எத்தனை முறை சாப்பிட்டிருப்பேன்! உங்களைக் கட்சியிலிருந்து நீக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று எனக்குத் தகவல்கள் வருகின்றன. நீங்கள் தமிழ் நாட்டுக்குப் போயாக வேண்டும்' என்று சொன்னார். 57 புலித் தோழர்களின் பாதுகாப்புடன் என்னை இந்திய மண்ணுக்கு அனுப்பி வைத்தார்.

நாங்கள் திரும்பும்போதும் இந்திய இராணுவம் எங்கள் மீது பெரிய அளவில் தாக்குதல் நடத்தியது. அப்போது என் அருகில் ஒரு குண்டு விழ, அதிலிருந்து என்னைத் தப்பிக்கவிட்டு, தான் தாங்கிக் கொண்டு சரத் என்ற புலித் தளபதி உயிர்விட்டார். தன் உயிர் கொடுத்து என் உயிர் காத்த சரத்தின் படத்தை இன்றும் என் வீட்டில் மாட்டியிருக்கிறேன். இத்தனைக்குப் பிறகும், என் பயணம் பற்றிக் கலைஞர் தொடர்ந்து இல்லாததெல்லாம் பேசினால், நான் விரிவாக விரைவில் சில உண்மைகளைச் சொல்வேன். அப்போது தெரியும், கலைஞரின் நிஜ முகம்!

கலைஞருக்கு இலங்கைப் பிரச்சினையில் உண்மையான பாசம் இருந்தது. அது ஒரு காலம். இப்போதெல்லாம் ஆட்சி, அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, அந்தக் கொள்கைகளெல்லாம் தி.மு.க. வில் நீர்த்துப் போய்விட்டன!''

*''தி.மு.க.வோடு கூட்டணியாக இருக்கின்ற காங்கிரஸின் நிலைப்பாடு பற்றி...?''*

''ஈழப் பிரச்சினை குறித்து நான் பேசியதற்கு, என்னைக் கைது செய்ய வேண்டும் எனச் சட்டமன்றத்தில் காங்கிரஸ் உறுப்பினர்கள் முதல்வரை நிர்ப்பந்திக்கிறார்கள். நான் அந்தப் பொதுக் கூட்டத்தில் பேசிய விஷயங்களைப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் ஏற்கெனவே நேரில் விவாதித்திருக்கிறேன். 'தமிழகத்தில் ஒரு காஷ்மீர் நிலைமை வர வேண்டுமா என்பதை யோசித்துப் பாருங்கள்' என்றே சொல்லி யிருக்கிறேன். அதற்கு அர்த்தம் காஷ்மீர் மாதிரி தமிழகத்திலும் வன்முறை நிகழும் என்பதல்ல. இப்போதுள்ள இளைஞர்கள் வன்முறைக்கு எளிதில் பலியாகித் தங்கள் வாழ்க்கையைத் தொலைத்து விடுகிறார்கள். அந்த இளைஞர்கள் வன்முறைப் பக்கம் திரும்ப, இலங்கைப் பிரச்சினை ஒரு காரணமாகிவிடக் கூடாது என்பதைத்தான் சொன்னேன்.

எனக்கும் எங்கள் இயக்கத்துக்கும் வன்முறை மீது துளியும் விருப்பம் கிடையாது. அதை நாங்கள் எப்போதும் ஏற்றுக்கொள்பவர்களும் அல்ல. மனித நேயம்தான் எப்போதும் வெல்லும். ஆனால், ஈழப் பிரச்சினை அப்படி அல்ல. காரணம், அங்கு ஏற்கெனவே பற்ற வைத்த தீ கொழுந்துவிட்டு எரிகிறது. அது வெந்து தணியும்போது விடியல் நிச்சயம்!'' ✱

**– எஸ். சரவணகுமார்**

*நன்றி : ஆனந்த விகடன்*

# யோகேஸ்வரி சிவப்பிரகாசம் நூல் வெளியீடு

## உணர்வின் நிழல்கள், கணநேர நினைவலைகள், அரை நிமிட நேரம், ஈன்ற பொழுதில்

*(இலண்டனில் இருந்து இயங்கும் ஐ.பீ.சி. அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சர்வதேச ஒலிபரப்பில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் பிரித்தானிய நேரம் காலை 07.00 முதல் 10.00 வரை ஒலிபரப்பப்படும் ''காலைக் கலசம்'' நிகழ்ச்சியில், ''இலக்கியத் தகவல் திரட்டு'' என்ற பகுதி காலை 7.15 முதல் 8.00 மணி வரை சுமார் 20 நிமிடங்கள் ஒலிபரப்பாகின்றது. 13-8-2006 அன்று நூலகவியலாளர் என். செல்வராஜா அவர்களால் தொகுத்து வழங்கப்பட்டது இது )*



இலங்கையின் நவீன சிறுகதை எழுத்தாளர்களை, குறிப்பாகத் தமிழ்த் தேசிய உணர்வுக்காலச் சிறுகதை எழுத்தாளர்களைத் திறனாய்வாளர்கள் இரண்டு வகைக்குள் அடக்குகின்றனர். ஒன்று முன்னோடி எழுத்தாளர்கள், மற்றது 1981க்குப் பிற்பட்ட சமகால கட்டத்து எழுத்தாளர்கள். தமிழ்த் தேசிய உணர்வுக் காலகட்டத்திலும் அதைத் தொடர்ந்தும் தம் படைப்புகளை வழங்கி வரும் முன்னோடி எழுத்தாளர்களுக்கென்று வரதர், எஸ்.பொ., அ. முத்துலிங்கம், நந்தி, செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், செ. யோகநாதன், மு. பொன்னம்பலம் என்று பெரும் பட்டியலே உள்ளது. இவர்களுள் தமிழ்த் தேசிய உணர்வுக்கால முன்னோடிப் பெண் எழுத்தாளர்களைக் குறிப்பிடுவோமானால் பத்மா சோம காந்தன், கோகிலா மகேந்திரன், குறமகள், பாலேஸ்வரி, தாமரைச்செல்வி என்று ஒரு சிறு பட்டியலே எம்மிடம் உள்ளது.

1981க்குப் பிற்பட்ட சமகாலத்துப் பெண் எழுத்தாளர்களை நாம் பட்டியலிட்டுக் குறிப்பிடுவோமானால் அப்பட்டியலில் சித்ரா நாகநாதன், சந்திரா தனபாலசிங்கம், சந்திரா தியாகராஜா, கெக்கிராவை ஸஹானா, நந்தினி சேவியர், ராணி ஸ்ரீதரன், ரூபராணி யோசப், தாட்சாயினி, சி. சிவானி, குமுதினி, ச. சாரங்கா, பிரியா குணராசா, நர்த்தனா என்று இப்பட்டியல் நீண்டு செல்லும். இந்தப் பட்டியலில் உள்ள பெயர்களின் வரிசையில் செங்கை ஆழியான் அவர்களால் தனது ஈழத்துச் சிறுகதை வரலாறு என்ற நூலில் முதன்மையில் குறிப்பிடப்படுபவர் யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்களாவார்.

''மறுமலர்ச்சி சஞ்சிகை வெளியான 1945 முதல் 1948 வரையிலான காலத்தில் எழுதுகோலில் கை வைத்து, வைத்த கையின் மைக்களை அழியும் முன்னரே எழுத்துலகிலிருந்து ஓய்வுபெற்ற சகுந்தலா தேவி தொடக்கம், இன்றும் ஓயாது எழுதிவரும் தாட்சாயணி வரை ஈழத்துப் பெண் எழுத்தாளர்களின் எண்ணிக்கையைக் கணிப்பதனால் அந்தத் தொகை இருபதுக்குள் அடங்கிவிடும். இந்த இருபதுக்குள் ஒருவராய்த் தம்மை இனம்காட்டித் தரமான சிறுகதைகளைப் படைத்து வருபவர் திருமதி. யோகேஸ்வரி சிவப்பிரகாசம்'' என்று அமரர் சொக்கன் அவர்கள் யோகேஸ்வரியின் உணர்வின் நிழல்கள் நூல் வெளியீட்டு உரையில் குறிப்பிட்டுள்ளார். (நன்றி : கணநேர நினைவலைகள் பக்கம் 86)

திருமதி. யோகேஸ்வரி சிவப்பிரகாசம் ஈழத்துப் பெண் எழுத்தாளர்களில் இன்று முன்னணியில் நிற்பவர். மலேசியாவில் பிறந்த யோகேஸ்வரி தன் தாயின் ஊரான இளவாலை, தந்தையின் ஊரான மூளாய், கணவரின் ஊரான கோப்பாய் என மூன்றிலும் வாழ்ந்த இவர், 1995இன் இடப்பெயர்வின் பின் யாழ்நகரில் வசித்து வருகின்றார். இவர் பண்டத்தரிப்புப் பெண்கள் உயர்நிலைக் கல்லூரியின் பழைய மாணவியாவார். வடமொழிச் சிறப்புப் பட்டதாரியான இவர், தனது பல்கலைக்கழகக் கலைத்துறைப் பட்டப் படிப்புக் காலத்திலிருந்தே, குறிப்பாக 1965ஆம் ஆண்டிலிருந்தே சிறுகதை, கவிதை, நாடகமென எழுதி வருபவர். அண்மைக் காலத்தில் மூன்று சிறுகதைத் தொகுதிகளை எமக்குத் தந்துள்ளார். இவரது இளமைக் கால ஆக்க இலக்கிய அறிமுகத்திற்கு, சுதந்திரன் பத்திரிகையின் சிறுவர் பகுதியான வளர்மதி களம் அமைத்துக் கொடுத்திருக்கிறது. தனது எழுத்தார்வத்தை வளர்த்த வளர்மதி சிறுவர் பகுதியின் வளர்மதி மாமாவாக அறிமுகமான மனோகரன் மயில்வாகனம் அவர்களையும், பாரதி பதிப்பக உரிமையாளர் இ. சங்கர் அவர்களையும் தனது முதலாவது சிறுகதைத் தொகுதியான உணர்வின் நிழல்களில் நன்றியுடன் யோகேஸ்வரி நினைவு கூர்ந்துள்ளார். இந்நூலிலுள்ள இவரது சிறுகதைகள் விரக்தியின் வெளிப்பாடுகளாக அமையாது நம்பிக்கையூட்டும் உணர்ச்சிச் சித்திரங்களாகவுள்ளன. பெரும்பாலான சிறுகதைகள் ஈழத் தமிழ்ச் சமூகத்தின் ஒரு காலகட்டத்தினை மிகச் சிறப்பாகச் சித்திரிக்கின்றன. இன்றைய தமிழ் மக்களின் வாழ்வியல் நிலையை இவரது சிறுகதைகள் மூலம் மிக நுட்பமாக அவதானிக்க முடிகின்றது. யாழ்ப்பாணம் கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளராகப் பதவி வகித்துக்கொண்டே அயராது எழுதிவந்த இவரது 'சோகங்களும் சுமைகளாகி' என்ற சிறுகதை இலங்கை சார்க் மகளிர் அமைப்பு நடத்திய பெண்கள் எழுதிய சிறுகதைக்கான போட்டியில் முதற்பரிசைப் பெற்றது. சார்க் அமைப்பு தென்னாசிய நாடுகள் அனைத்தையும் உள்ளடக்கிய பெரியதோர் அமைப்பு. இவ்வமைப்பு வழங்கிய பரிசு சர்வதேச ரீதியிலானதொரு பரிசு என்ற வகையில் பெருமைக்குரியதொன்றாகும். தேசிய ஒருங்கிணைப்புச் செயல்திட்டப் பணியகமும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் இணைந்து நடத்திய வானொலி நாடகப் போட்டியிலும் இவர் பல பரிசுகளையும் பாராட்டுகளையும் பெற்று மகிழும் பெருமைக்குரியவர்.

ஈழத்துச் சிறுகதை வரலாறு என்ற தனது ஆய்வில் கலாநிதி க. குணராசா அவர்கள் திருமதி. யோகேஸ்வரி

சிவப்பிரகாசம் அவர்கள் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ''யோகேஸ்வரி சிவப்பிரகாசம் ஈழத்துப் பெண் எழுத்தாளர்களில் தரமான ஒருவராகத் தனது சமீபகாலச் சிறுகதைகள் மூலம் தன்னை அடையாளம் காட்டிக் கொண்டவர். பேய்த்தேர், கரை தாண்டாத அலைகள், இரண்டு பௌர்ணமிகள், நேசக் கரங்கள், சோகங்களும் சுமைகளாகி, ஆனால் முடியவில்லை, தொலைந்துவிட்ட அண்மை முதலான குறிப்பிடத்தகுந்த சிறுகதைகளைப் படைத்துள்ளார். கதைகள் சித்திரிக்கும் கதைக் கருக்கள் பெரும்பாலும் அவருடைய நேரடி அனுபவங்களாகவுள்ளன. பேய்த்தேர், சோகங்களும் சுமைகளாகி ஆகிய சிறுகதைகள் உயர்தரமானவை. சோகங்களும் சுமைகளாகி சிறுகதை கலாபூர்வமாகப் பதிவாகியுள்ளது.'' இவ்வாறு கலாநிதி கந்தையா குணராசா அவர்களின் யோகேஸ்வரியின் சிறுகதைகள் தொடர்பான திறனாய்வு அமைந்துள்ளது.

யோகேஸ்வரியின் சிறுகதைகள் ஈழத்தின் பெரும்பாலான அனைத்து ஊடகங்களிலும் வெளிவந்துள்ளன. ஈழநாடு, தினகரன், வீரகேசரி, மல்லிகை, முரசொலி, ஈழமுரசு, ஈழநாதம் ஆகிய ஊடகங்களில் இதுவரை இவர் எழுதிய சிறுகதைகளின் தேர்ந்த தொகுப்பாக மூன்று தொகுதிகள் இதுவரை வெளிவந்துள்ளன. இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு உணர்வின் நிழல்கள் என்ற தலைப்பில் மல்லிகைப் பந்தல் வெளியீடாக மார்ச்சு 1997இல் இந்தியாவில் அச்சிடப்பட்டு வெளிவந்திருக்கிறது.

இத்தொகுப்பிற்கு அணிந்துரை எழுதியுள்ள திரு. வ. இராசையா அவர்கள் யோகேஸ்வரியின் கதைகள் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ''சமுதாயம் என்ற பரந்த தளத்தில் நின்று மானிடத்தை நோக்கிப் பல கோணங்களில் புனையப்பட்ட கதைகள் இவை. படைப்பாளியின் பார்வையின் விரிவை இவை தெளிவாகக் காட்டுகின்றன. குழந்தைகளின் உளப்பாங்கு, குடும்பத் தலைவியின் சுதந்திர எல்லை, இளமையின் ஏக்கம், மானிடத்தின் வெறியாட்டம், வறுமையின் நெருடல், போலிகளின் மாய்மாலம், சமுதாயச் சீரழிவு என்பவற்றையும் இன்றைய வாழ்வின் அவலங்கள் சிலவற்றையும் இவை போன்ற மற்றும் சில உரிய பிரச்சினைகளையும் இந்தக் கதைகள் எடுத்துச் சித்திரிக்கின்றன.'' இவ்வணிந்துரையை வழங்கிய வ. இராசையா அவர்கள் இலங்கை வானொலியில் இலங்கை மன்ற அண்ணாவாக இவருக்கு அறிமுகமானவர். யோகேஸ்வரியின் ஆரம்பகால வானொலிப் படைப்புகளுக்கு நல்லாதரவு நல்கியவர்.

1997இல் வெளியான உணர்வின் நிழல்கள் சிறுகதைத் தொகுதியில் இவரது 14 சிறுகதைகள் இடம் பிடித்துள்ளன. கதைகளின் சரளமான, எளிமையான சித்திரிப்பு, தளர்வற்ற கம்பீரமான கதையோட்டம், பிசிறற்ற மொழிநடை என்பன யோகேஸ்வரியின் 14 கதைகளுக்கும் வலுவும் வளமும் சேர்க்கின்றன.

யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் இரண்டாவது சிறுகதைத் தொகுதி ஈன்ற பொழுதில் என்ற தலைப்பில் இரண்டாண்டுகளின் பின்னர் நவம்பர் 1999 இல் வெளிவந்திருக்கிறது. யாழ்ப்பாணம் பாரதி பதிப்பகம் இந்நூலை வெளியிட்டிருந்தது.

ஈழத்தின் பெண் எழுத்தாளர்கள் பற்றிய பொதுவான கணிப்பொன்று இலக்கிய உலகில் உள்ளது. தமது இளமைக் காலத்தில் வீறுடன் எழுந்து படைப்பிலக்கியங்களை வழங்கிய பல பெண் எழுத்தாளர்கள் திடீரென்று இலக்கிய உலகிலிருந்து காணாமல் போய் விடுவார்கள். திருமணம், குடும்பப் பொறுப்பு, ஆணாதிக்கத்தின் கட்டுப்பாடு போன்ற பல புறக்காரணிகள் அவர்களைக் குடும்பச் சுமைகளுக்குள் தொலைத்து அந்நியப்படுத்திவிடுகின்றன. தம் வாழ்வின் எல்லை வரை தமது குடும்பப் பொறுப்புகளுக்கிடையே காத்திரமான படைப்பிலக்கியத் தொடர்பினைத் தளராமல் கொண்டு செல்லும் ஒருசிலரையே ஈழத்துப் படைப்பிலக்கிய வரலாறு இன்று தீவிரமான பெண் படைப்பாளிகளாகப் பதிவு செய்திருக்கின்றது. இந்தப் பட்டியலில் யோகேஸ்வரி சிவப்பிரகாசமும் ஒருவராக மிளிர்கின்றார்.

இந்நூலுக்கு முன்னுரை வழங்கியுள்ள திருமதி சரோஜா சிவச்சந்திரன் அவர்களும் யோகேஸ்வரி பற்றிய தன் அறிமுகத்தில் இதைக் குறிப்பிட்டுள்ளார். சரோஜா சிவச்சந்திரன் அவர்கள் ஈன்ற பொழுதில் என்ற யோகேஸ்வரியின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பிற்கான முன்னுரையில் மேலும் குறிப்பிடுகையில், இத்தொகுப்பிலுள்ள 15 கதைகளிலும், ஒரு பொதுத் தன்மை இழையோடுவதை அவதானிக்கின்றார். தமிழ்ச் சமுதாயத்தின் நீண்டகாலச் சாபக்கேடாகிப்போன மரணத்துள் வாழ்வு தரும் துன்ப துயரங்கள், அவலங்கள், ஓலங்கள், மன உளைச்சல்கள், பண்பாட்டுப் பிறழ்வுகள் என்பவற்றை இக்கதைகளில் காணமுடிவதாகக் குறிப்பிடுகின்றார். இத்தொகுப்பில் வெளியான சிறுகதைகள் வீரகேசரி, சஞ்சீவி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் வெளியாகியவை. ஈன்ற பொழுதில் என்ற தலைப்புச் சிறுகதை திருக்குறளையும் பெரிதுவக்கும் அன்னையையும் மேலெழுந்தவாரியாக நினைவூட்டக் கூடும். ஆனால் கதையின் கரு அதுவன்று. இவற்றுக்கப்பால், இன்று ஆண் மகவைப் பெற்ற ஈழத்துத் தாய்மார் அவர்களைப் பேணிப் பாதுகாத்து வளர்த்தெடுக்கப்படும் பாட்டை இக்கதை விவரிக்கின்றது. இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு யாழ்ப்பாணம் மல்லிகைப்பந்தல் வெளியீடாக வெளிவந்த போதிலும் தமிழகத்திலேயே அது அச்சிடப்பட்டது. பரவலாகப் பிரதிகள் தருவிக்கப்பட்டு ஈழத்து வாசகரை அது இலகுவாகச் சென்றடைந்திருக்குமா என்று தெரியவில்லை. இதற்கு மாறாக, ஈன்ற பொழுதில் என்ற இரண்டாவது சிறுகதைத் தொகுதி முற்று முழுதாக இலங்கையிலேயே அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

யோகேஸ்வரியின் மூன்றாவது சிறுகதைத் தொடர்பான கணநேர நினைவலைகள், கோப்பாய்ப் பிரணவன் வெளியீட்டகத்தின் வாயிலாக ஏப்பிரல் 2001 இல் யாழ்ப்பாணத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. திருமதி. யோகேஸ்வரி அவர்கள் 1975இல் தினகரனில் எழுதிய முதலாவது கதையாகிய நீங்காத பாசம் உள்ளிட்ட, கடந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் ஈழத்தின் தமிழ் ஊடகங்களில் வெளியான 15 சிறுகதைகளைக்

கொண்ட இத் தொகுப்பிற்கான முன்னுரையை யப்பான் சுக்சுயின் பல்கலைக்கழக வருகை ஆய்வாளர் திருமதி. மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் வழங்கியுள்ளார். அவர் தமது உரையில், ''யோகேஸ்வரி தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கணநேரத்து உணர்வுச் சிதறல்களைக் கதையாக எழுத முனைந்துள்ளார்'' என்று குறிப்பிட்டுள் ளார். பெண்மையின் மென்மையான பண்புகளை, உள்ளத்தில் உறையிட்டு வைத்திருக்கும் உணர்வுகளை உள்ளே புகுந்து பார்த்தவராக யோகேஸ்வரி சிவப் பிரகாசம் அவர்கள் இச் சிறுகதைத் தொகுதியினூடாக இனம் காணப்படுகின்றார். தான் வாழும் சூழலையும், உடன் வாழும் மக்களையும் ஊன்றி நோக்கும் தன்மை இவரது எழுத்தையும் வழி நடத்துகின்றது. எளிமையான தமிழ்மொழி நடை அதற்கு அணி செய்கின்றது. கடந்து போன நிகழ்வுகளை வெறுமனே அசை போடாது, அவற்றை நிகழ்காலச் சிக்கல்களை விடுவிக்கும் கருவி யாகப் பயன்படுத்தி யிருக்கின்றார் என்று மனோன்மணி அவர்கள் மேலும் குறிப்பிடுகின்றார்.

இந்நூலின் இறுதியில் அமரர் சொக்கன் அவர்களின் உரையொன்றும் பின்னிணைப்பில் பிரசுர மாகியுள்ளது. சார்க் அமைப்பின் பரிசைப் பெற்றமைக் காக யோகேஸ்வரிக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கோப்பாய்க் கிளையினர் நடத்திய பாராட்டு விழாவின்போது அமரர் க. சொக்கலிங்கன் அவர்கள் ஆற்றிய நல்லதொரு உரை இது. இவர் தமது உரையில் ஈழத்தின் மூன்று பெண் எழுத்தாளர்களின் பாணி பற்றிக் குறிப்பிடுகின்றார். கதை நிகழ்வுகளிலே பாத்திரங்களினூ டாக அவற்றின் உளவியல் நோக்குகளையும் போக்கு களையும் சித்திரிப்பதற்குக் கோகிலா மகேந்திரனையும், பெண்ணியத்தின் ஆற்றாமைகள், போராட்டங்கள், சாதனைகளை விவரிப்பதற்கு வள்ளிநாயகி இராமலிங்கன் என்ற குறமகளையும் விதந்துரைக்கும் சொக்கன், குடும்ப உறவுகள், பாசங்கள், போராட்டங்கள் என்பவற்றினைச் சமகாலப் பகைப்புலத்தில் நின்று வெற்றிகரமாகச் சித்திரிப் பதற்கு யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்களைச் சிலாகிக்கின்றார்.

படைப்பிலக்கியத் துறையில் நான்கு தசாம்சங்கள் கடந்த நிலையில் மூன்று சிறுகதைத் தொகுதிகளை எமக்குத் தந்துள்ள ஈழத்தின் குறிப்பிடத்தகுந்த பெண் எழுத்தாளரான யோகேஸ்வரி அண்மையில் அரை நிமிட நேரம் என்ற மற்றொரு கட்டுரை நூலினையும் வெளியிட்டுள்ளார். யாழ்ப்பாணம் பாரதி பதிப்பகத்தின ரால் ஜுன் 2005இல் வெளியிடப்பட்டுள்ள இந்நூலில் மொத்தம் 30 சிறு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இது இவரது நான்காவது நூலாகும்.

வடமொழிச் சிறப்புப் பட்டதாரியான இவர் பல்கலைக் கழகக் கல்வியின் அறுவடையாக இந்நூலை வெளிக்கொண்டு வரும் அதே வேளையில் அவரது சிந்தனை வளர்ச்சியின் வெளிப்பாடும் ஆங்காங்கே இந்நூலில் மிளிர்வதாகப் பாரதி பதிப்பக உரிமையாள ரும், இந்நூலின் பதிப்பாளருமான இ. சங்கர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்படும் ஞானச்சுடர் மலரில் 2003 ஆம் ஆண்டில் வெளிவந்த ஆன்மீகக் கட்டுரைகள் இவை. சரண கமலங்களை அரை நிமிட நேரம் தியானிக்க முடியாத சடகசட மூடமட்டி மனத்தை மாதமொரு முறையேனும் இறைவனது பாதங்களைச் சிந்திக்க வைக்க முயன்ற முயற்சியால் எழுந்த கட்டுரைகள் இவை என்ற கூறும் யோகேஸ்வரி, அரை நிமிட நேரம் என்ற தலைப்பில் முருகப்பெரு மானின் பொற் பதங்களைப் பற்றிப் பாடும் பாட லொன்றை எடுத்து அதுபற்றிய சிறு கட்டுரையொன் றையும் மாதமொருமுறை எழுத முற்பட்டதால் விளைந்த படைப்பே அரைநிமிட நேரம் என்ற கட்டுரைத் தொகுப்பாகியுள்ளதெனக் குறிப்பிடுகின்றார்.

சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டுப் பேரவையின் வெளியீடாகிய ஞானச்சுடர் மலரின் யோகேஸ்வரியின் ஆன்மீகத் தொடர் ஒன்றும் முன்ன தாக 2002இல் ஒரு கணம் உன்னோடு என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது. இது தனி நூலுருவாக்கம் பெற்றதா என்பதை அறிய முடியவில்லை.

தாயக மண்ணில் போர்ச் சூழலில், இராணுவக் கெடுபிடிகளுக்குள் வாழும் ஈழத்துப் படைப்பாளியான ஒருவரின், குறிப்பாகக் குடும்பப் பொறுப்புகளுடன், வங்கியொன்றின் பொறுப்பான பதவியையும் வகித்துப் படைப்பிலக்கியத் துறையிலும் ஆழக்கால் பதித்துள்ள பெண் படைப்பாளி ஒருவரின் உள்ளத்து உணர்வுகளின் ஒரு சிறு ஆதங்கத்தை நேயர்களின் சிந்தனைக்கு விட்டுச் செல்லும் வகையில் அவரது வார்த்தைகளிலேயே பதிவு செய்து எனது உரையை நிறைவு செய்யவுள்ளேன்.

''நாட்டில் நடைபெறும் போர் பலரையும் பலவகைகளில் பாதித்து வருகின்றது. அந்தப் போரினால் உடைந்து போன எனது வீட்டைத் திருத்துவதற்கு உற்சாக மற்றுப்போன எனக்கு ஒரு பூச்செடியையும், ஒரு பூனைக் குட்டியையும் யாரும் வளர்க்குமாறு யாரும் கூறினாலும், ஆசையாகவும் அருமையாகவும் வளர்த்துவிட்டுத் துப்பாக்கியோடு வருபவனைக் கண்டதும் விட்டுவிட்டு ஓடிவிடுவோம், அல்லது இறந்துவிடுவோம். இதெல்லாம் வேண்டாம் என்று சுடலை ஞானம் பேசும் எனக்கு எனது கதைகளை, படைப்புகளை மட்டும் அச்சிலேற்றிவிட வேண்டும் என்ற எண்ணத்தை அதே போர் ஏற்படுத்தி யிருந்தது. நான் ஆசையுடன் சேர்த்து வைத்திருந்த நூல்களும் எழுதிவைத்திருந்த ஆக்கங்களும் எங்குப் போயின என்று தெரியாத நிலை ஒன்று ஏற்பட்டபோது, நான் உயிருடன் இருக்கும்போதே, எனது கதைகள் எதுவுமே இல்லாமல் போய்விடுமோ என்றொரு சந்தேகம் ஏற்பட்டதால் எனது மூன்றாவது தொகுப்பை யும் வெளியிட முடிவு செய்தேன். நூல் வடிவில் எங்காவது ஒரு மூலையில் தப்பி, எனது ஆக்கங்களை நான் அல்லது எவராவது தேடும்போது அவை கிடைக்கு மல்லவா?''

தாயகப் படைப்பாளி யோகேஸ்வரி சிவப்பிரகா சத்தின் இவ்வரிகளினால் பாதிக்கப்பட்ட எவராவது புகலி டத்தில் இருந்து அவரது எதிர்கால வெளியீடுகளுக்கு நிதியுதவி செய்து உதவவேண்டும் என்று கருதினால் தயவுசெய்து என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள். *

# உலகத் தமிழர் பேரமைப்பின் 4ஆம் ஆண்டு நிறைவு விழா மாநாடு

உலகத் தமிழர் பேரமைப்பின் 4ஆம் ஆண்டு நிறைவு விழா மாநாடு சேலம் நகரில் ஆகஸ்டு 12, 13 நாள்களில் சிறப்பாக நடைபெற்றது. தமிழ்க் கொடியேற்றித் தொடங்கிய இம்மாநாட்டில் தமிழர் பண் இசைப்புக்குப் பின், சிறப்பு மலர் வெளியீடு. கவியரங்கம். கலை நிகழ்ச்சிகள், விருது வழங்கல், தீர்மானங்கள் நிறைவேற்றல் என ஆக்கப்பணிகளாக நடந்து முடிந்தது. புதுவை, கேரளம், ஆந்திரம், கர்நாடகம் முதலான பிற மாநிலங்களிருந்தும். மலேசியா, பிரான்சு, பர்மா, கனடா, ஆஸ்திரேலியா முதலான அயல்நாடுகளிலிருந்தும் இம்மாநாட்டி ல் பேராளர்கள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. இம்மாநாட்டு நிகழ்வின் சில படங்களைக் கீழே காணலாம்.



கொடியேற்றம்





தமிழர் பண்




மலர் வெளியீடு




கவியரங்கம்




விருது அளித்தல்



சுப வீரபாண்டியன்



பழ நெடுமாறன்

## *சீக்கிய மண்ணை மன்னித்த தாயே! தமிழ் மண்ணை மன்னிக்க மாட்டாயா?*

# சோனியா காந்திக்குக் கவிஞர் வைரமுத்து வேண்டுகோள்!

இலங்கை முல்லைத்தீவு செஞ்சோலை சிறுமியர் காப்பகத்தில் சிங்கள இராணுவத்தால் குண்டுவீசிக் கொல்லப்பட்ட 61 அனாதைச் சிறுமிகளுக்காக அஞ்சலி செலுத்தி இலங்கை அரசுக்குக் கண்டனம் தெரிவிக்கும் ஒருநாள் பட்டினிப் போராட்டத்தைச் சென்னையில் வள்ளுவர் கோட்டம் அருகில் தமிழர் பேரவை ஏற்பாடு செய்திருந்தது. தமிழக மின்துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி மலரஞ்சலி செலுத்திப் பட்டினிப் போராட்டத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். அடுத்து கவிஞர் வைரமுத்து மலரஞ்சலி செலுத்தி உரை யாற்றினார். அவர் ஆற்றிய உரை :


''இலங்கை முல்லைத்தீவில் கொல்லப்பட்ட செஞ் சோலைப் பிஞ்சுகளுக்காகக் கனத்த மனத்தோடு கண்ணீர் அஞ்சலி செலுத்தக் கூடியிருக்கிறோம். பறித்து வைக்கப் பட்ட காய்கறிகளைப் போல அடுக்கி வைக்கப்பட்ட பிஞ்சுப் பிணங்களைப் பார்க்கிறபோது நெஞ்சு வெடிக் கிறது. ஆனால் தமிழ்நாட்டு மக்கள் இந்தச் சோகத்தை முற்றிலும் உணரவில்லையோ என்பது இன்னொரு சோக மாக இருக்கிறது.

கும்பகோணம் தீ விபத்தில் இறந்துபோன கொழுந்துக் குழந்தைகளுக்காகத் தமிழ்நாடே எழுந்து நின்று அழுதது. கும்பகோணத்தில் நடந்தது விபத்து. செஞ்சோலையில் நிகழ்ந்திருப்பது கொலை. விபத்துக்கு அழுகிற தமிழா! கொலைக்கு அழமாட்டாயா? என்றே கேட்கத் தோன்றுகிறது.

யுத்தத்தில் ஈழத் தமிழினம் அழிந்துவிடுமோ என்ற அச்சம் இங்கே வெளிப்படுத்தப்பட்டது. ஆனால் அது அவ்வளவு எளிதல்ல. யுத்தத்தால் புலிகளை வெல்ல முடியாது என்று சிங்கள இராணுவத்துக்குள் இப்போது ஒரு தெளிவு ஏற்பட்டிருக்கிறது. தமிழன் செய்வது உணர்ச்சிமயமான யுத்தம். இனம் காக்க நிலம் மீட்க அவன் புரியும் யுத்தம் சத்தியமானது. உணர்ச்சியுள்ள யுத்தம்தான் வலிமையானது. ஒரு சிங்கம் முயலைத் துரத்தும்போது சிங்கத்தின் வேகம் அதிகமா? முயலின் வேகம் அதிகமா? என்று கேட்டால் சிங்கத்தின் வேகத்தை விட முயலின் வேகம்தான் அதிகமாக இருக்கும். ஏனென்றால் சிங்கம் துரத்துவது உணவுக்காக. முயல் ஓடுவது உயிருக்காக. தமிழன் இனமானம் காக்கப் போராடும்போது அவன் போர்தான் வெல்லமுடியாத போராக இருக்கும்.

இலங்கைத் தமிழர்களின் துயரத்தில் பங்கு கொள்ளும் முகமாக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறை வேற்றிய முதல்வர் கலைஞர் அவர்களின் உள்ளத்தின் வலியை நாங்கள் உணர்கிறோம். இந்திய அரசுக்கு ஒரு வேண்டுகோள் : சிங்கள அரசுக்கு எந்த நிலையிலும் ஆயுதம் வழங்கிவிடாதீர்கள். அது தமிழர்களுக்கு ஆபத்து. பாகிஸ்தானிடமிருந்து சிங்கள அரசு ஆயுதம் வாங்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். அது இந்தியா வுக்கே ஆபத்து. சிங்கள அரசு வங்காள விரிகுடாப் பக்கம் கைநீட்டி இந்தியாவிடம் ஆயுதம் கேட்கலாம். அரபிக்கடல் பக்கம் கைநீட்டிப் பாகிஸ்தானிடமும் அது ஆயுதம் கேட்கலாம். இரண்டுமே கூடாது. இந்திய அரசே கவனமாய் இரு.

நிறைவாக அன்னை சோனியாகாந்தி அவர் களுக்கு ஒரு வேண்டுகோள் : 'தாயே நீங்கள் தியாகத் திருவிளக்கு! உங்களைப் பெரிதும் மதிக்கிறோம். பாரதப் பிரதமர் பதவியை விட்டுக் கொடுத்தீர்களே அதற்காகக் கூட அல்ல. உங்கள் மாமியார் இந்திராகாந்தியைச் சுட்டுக் கொன்றவர் ஒரு சீக்கியர். ஆனால் அந்தப் பழைய சோகத்தை மறந்து ஒரு சீக்கியரையே இந்தியப் பிரதமர் ஆக்கினீர்களே அதுதான் உங்கள் தியாகத்தின் உச்சம். சீக்கிய மண்ணின் பிழையை மறந்து மன்னித்த நீங்கள், தமிழ் மண்ணின் ஒரு பிழையை மறந்து மன்னிக்கக் கூடாதா? உங்கள் சோகம் பெரியது. நிகழ்ந்திருக்கவே கூடாது; ஆறுதல் மொழிகளுக்கு அப்பாற்பட்டது. அதை யும் தாண்டி அந்தப் பிழையை நீங்கள் மறந்து மன்னித் தால் நீங்கள் சிகரத்தின் உச்சிக்கே சென்றுவிடுவீர்கள். ''இலங்கைத் தமிழர்களின் அவலம் தீரட்டும். அங்கே ஒரு நிரந்தர விடியல் வேண்டும்''.



இந்தப் பட்டினிப் போராட்டத்திற்கு சுப வீர பாண்டியன் தலைமை தாங்கினார். நடிகர் சத்தியராஜ், கவிஞர்கள் காசி ஆனந்தன், வா.மு. சேதுராமன், மு. மேத்தா, திரைப்பட இயக்குநர்கள் வீ.செ. குகநாதன். சீமான், செல்வபாரதி மற்றும் அனைத்துக் கட்சி பிரமுகர் களும், கவிஞர்களும், தமிழறிஞர்களும் கலந்து கொண்டனர். *

# பாட்டுக்கொரு புலவன் பாரதி! பலமுகங் கொண்ட பெருங்கவிஞன்!

மயில் மனோகரன்,
இலண்டன்

எனது கடைசிக் கட்டுரைக்கும் இந்தக் கட்டுரைக்குமிடையே சிறிது இவைவெளி ஏற்பட்டுவிட்டது.

பாரதியின் 'கண்ணன் என் காதலன்' என்ற தலைப்பின் கீழடங்கியுள்ள கவிதைகளை முதலில் பார்ப்போம்.

**'கண்ணன் பிறந்தான் - எங்கள்**
**கண்ணன் பிறந்தான் - இந்தக்**
**காற்றதை யெட்டுத் திசையிலுங் கூறிடும்'**

என்று கண்ணனை வரவேற்கும் பாரதி, பின்னர்க் கண்ணனைத் தன் காதலனாக மனத்தில் வரித்துக் காட்டியே அவனைத் தேடி அலைகிறான்.

**'திக்குத் தெரியாத காட்டில் - உனைத்**
**தேடித் தேடி யிளைத்தேனே'**

என்று அங்கலாய்க்கிறான்.

**'கால்கை சோர்ந்து விழலானேன் - இரு**
**கண்ணுந் துயில்படர லானேன்'**

என்றும் தன் ஆற்றாமையைத் தெரிவிக்கின்றான்.

ஈற்றில் அவர் முன் கண்ணன் 'ஒரு வேல்கைக் கொண்டு கொலை வேடன்' உருவத்தில் தோன்றுவதாகக் கவிஞன் கற்பனை செய்கின்றான்.

அந்த வேடுவ உருவத்தில் வரும் கண்ணன், காதலியாகப் பாவிக்கும் கவிஞனிடத்தில் என்ன கூறுகிறான், தெரியுமா? 'இந்த மானுட வாழ்வு, உலகின் இன்பங்களை உய்த்துணர்ந்து உளம் மகிழ்ச்சி கொள்ள வேயன்றி, வீணே சோர்ந்து போய் மூலையில் முடங்கிக் கிடப்பதன்று' என்று ஆக்கபூர்வமான கருத்தினை வெளியிடுகிறான்.

தன் காதலியைப் பார்த்து, 'அடி கண்ணே, எனதிரு கண்மணியே, உனைக் கட்டித் தழுவ மனங் கொண்டேன்' என்று தனது உள்ளக்கிடக்கையை ஆசையுடன் வெளியிடும் கண்ணன், மேலும் இப்படிக் கூறுகின்றான்.

**'சோர்ந்தே படுத்திருக்க லாமோ? - நல்ல**
**துண்டக் கறிசமைத்துத் தின்போம் - சுவை**
**தேர்ந்தே கனிகள் கொண்டு தருவேன் - நல்ல**
**தேங்கள் ளுண்டினிது களிப்போம்''**

அட! பாரதி வாழ்ந்த காலத்தில், ஏன், இன்றைய சூழலிலும் கூட, இந்த வார்த்தைகள் எவ்வளவு புரட்சிகரமானவை! இப்படி எழுத, இந்தச் சத்தியக் கவிஞன், சுப்பிரமணிய பாரதியாலன்றி வேறு எந்தக் கவிஞனாலும் முடியாதென்று நாம் திடமாகக் கூறலாம்.

மனிதனுக்கும் தெய்வத்துக்குமிடையே இடைத்தரகர்களால், அதுவும் அவரது சொந்த வர்க்கத்தினரால், செயற்கையாக இடப்படும் கோட்டைக் கிழித்துக் கொண்டு, மனிதனையும் தெய்வத்தையும் மிக அருகருகே கொண்டு செல்லும் தனது உயரிய முயற்சியை, 'தீராத விளையாட்டுப் பிள்ளை'யாகவும், 'தெருவில் பெண்களுக்கோயாத தொல்லை' கொடுப்பவனுமாகிய கண்ணன் மூலம் கவிஞன் வெளிப்படுத்தும் சாதுர்யம் சாலவும் போற்றுதற்குரியதாக விளங்குகிறது.

அடுத்தடுத்த வரிகளில், கவிஞன் கண்ணனை மிகப் புரட்சிகரமான தெய்வமாக்கிவிடுகிறான்; கண்ணன் தனது காதலியிடம் கூறுகிறான்,

**''ஏடீ, சாத்திரங்கள் வேண்டேன் - நின**
**தின்பம் வேண்டுமடி கனியே! - நின்றன்**
**மோடி கிறுக்குதடி தலையை - நல்ல**
**மொந்தப் பழைய கள்ளைப்போலே.''**

இங்கு, இந்தச் சொற்களை மேலெழுந்தவாரியாக நாம் கருத்திற் கொள்ளாது, அவற்றின் உள் அர்த்தத்தை விளங்கிக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

தெய்வம் வேண்டி நிற்பது, சாத்திரங்களும், சடங்குகளுமல்ல. அவனுக்கு மிகவும் பிரியமானது, பக்தி ஒன்றே. எந்தவிதத் தடையுமற்ற, எல்லைகளற்ற பக்தன் ஒருவனின் காதல் தான் இறைவனுக்கு வேண்டிய தென்பதையே புலவன் இங்குப் பிரகடனப்படுத்துகிறான்.

பக்தன் தன் மீது வைத்திருக்கும் அன்பை, காதலை, இறைவன் எவ்வளவு தூரம் மதிக்கின்றான், அது அவனை எவ்வளவு தூரம் பாதிக்கிறது என்பதை நாம், கவிஞனின் கள்ளமில்லா இச்சொற்கள் மூலம் உணர்கிறோம்.

**'நின்றன் மோடி கிறுக்குதடி தலையை - நல்ல**
**மொந்தப் பழைய கள்ளைப் போலே.''**

வட நாட்டவரும், மற்றையோரும் போற்றிப் புகழ்கின்ற 'பகவத் கீதை' என்ற கண்ணன் அருளியதாகக் கூறப்படும் நூலில் வெளிக்கொணரப்படும் பக்தியின் மேன்மையை, மேலாண்மையை எவ்வளவு எளிதாக, ஆனாலும் எவ்வளவு ஆழமாகவும் எடுத்துரைக்கிறான் எங்கள் மக்கள் கவிஞன் மகாகவி சுப்பிரமணிய பாரதி! இதுதான் அந்த மாபெரும் கவிஞனின் தனிச்சிறப்பும், இயல்பும் ஆகும்.

கண்ணனிடம் பாங்கியைத் தூது விடுத்தல் என்னும் கட்டத்தில், கவிஞன் எடுத்த எடுப்பிலேயே என்ன சொல்லுகின்றான் என்று பாருங்கள் :

**'கண்ணன் மனநிலையைத் தங்கமே தங்கம்**
**கண்டுவர வேணுமடி தங்கமே தங்கம்**
**எண்ண முரைத்துவிடில் தங்கமே தங்கம் - பின்னர்**
**ஏதெனினுஞ் செய்வமடி தங்கமே தங்கம்.'**

இறைவனிடம் ஓர் உண்மையான பக்தன் கேட்கும் அடிப்படையான கேள்விகளும், இறைவனிடம் அதற்கு எதிர்ப்பார்க்கப்படும் பதிலும் இந்தச் சொற்களில் வெளிக்கொணரப்பட்டுள்ளது. இறைவனைப் பார்த்துக் கவிஞன் கேட்கின்றான். 'உன்னுடைய எண்ணம் தான் என்ன? அதை நீ கூறிவிட்டால் போதும், அதன் பிறகு நாம் எதையும் செய்ய முடியும்' என்று.

மற்றுமோர் சயத்தில், கண்ணனின் அக்கறை யின்மையால் மனம் நொந்து போயுள்ள காதலின் மன நிலையையும், ஊடலையும் கவிஞன் அழகாக வெளிப் படுத்துகிறான். அவன் கூறுகிறான்.

**'சொன்ன மொழி தவறு மன்னவனுக்கே - எங்கும்**
**தோழமை யில்லையடி தங்கமே தங்கம்**
**என்ன பிழைகளிங்கு கண்டிருக்கின்றான்?-அவை**
**யாவும் தெளிவுபெறக் கேட்டு விடடீ.'**

'ஒரு பக்தனிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியவில்லை பிறகு, அவனிடம் என்ன நட்புறவு வேண்டிக் கிடக்கிறது? அத்தோடு, எதற்காக இந்தக் கோலம்? அப்படி நான் என்ன பிழை செய்துவிட்டேன் என்று இப்படி நடக்கிறான்? அதற்கான விளக்கத்தைத் தெளிவாகக் கேட்டு வா' என்று காதலி தன் தோழியிடம் கூறுவது போல் எவ்வளவு தத்ரூபமாக, மனம் நொந்த ஒரு காதலியின் வேதனையையும், விரக்தியையும் கவிஞன் வெளிப்படுத்தியிருக்கிறான்!

பின்னர்ப் பொதுவான ஓர் உண்மையை, 'பெண் ணென்று பூமிதனிற் பிறந்துவிட்டால் - மிகப் பிழை யிருக்குதடி தங்கமே தங்கம்' என்று கூறப் போந்த கவிஞன், அந்த இக்கட்டளை நிலையிலும் ஆபத்தாந்த வனாகக் கண்ணனே வர முடியுமென்பதை உணர்த்த,

**'தீர ஒரு சொல்லின்று கேட்டு வந்திட்டால் - பின்பு**
**தெய்வமிருக்குதடி தங்கமே தங்கம்'**

என்று தன் மனத்தைத் தேற்றிக் கொள்கின்றான்.

'கண்ணன் என் காதலன்' என்று பிரகடனப் படுத்துகிறான் கவிஞன், எவ்வளவு அழகாக, இறை வனுக்கும் பக்தனுக்குமிடையேயுள்ள ஆத்மார்த்த உறவைப் பிரதிபலிக்கிறான் என்பதை எண்ணும்போது வியப்பும் பாராட்டுமே எம் உள்ளங்களில் மேலோங்கி நிற்கின்றன.

இறுதியில், இந்த உறவுக்கு முத்தாய்ப்பு வைப்பது போல், அதனுடைய ஆளுமையையும் ஆற்றாமையை யும் பின்வரும் வரிகளில் அழகாக எடுத்துரைக்கின்றான் கவிஞன் :

**'கண்ணன்முக மறந்து போனால் - இந்தக்**
**கண்களிருந்து பயனுண்டோ?**
**வண்ணப் படமுமில்லை கண்டாய் - இனி**
**வாழும் வழியென்னடி தோழி?'**

கண்ணன் அருள் இல்லையேல், வாழ்வே இனி இல்லை என்று முடிக்கின்றான் இந்தக் கவிஞன். ✱

*(தொடரும்)*

# PEACE

There is an incredible yearning that
comes from within each person.
Inside each one of us
peace is like a seed in the desert,
waiting to blossom.

It seems no distinction.
It doesn't care if we are rich or poor,
which religion we belong to,
or which country we live in.

What it cares about is water.
Like the seed,
it lies in wait
for the time water will come.

In our hearts it waits
and wants nothing else
but to be fulfilled,
to once feel whole,
not separated by all the issues
that penetrate our lives.

Peace begins
with every single human being.
Peace is something that has to be
experienced in every heart.

The absence of war is not peace.
Peace is not an issue of institutions.
It is people who start the wars.
If people start respecting peace,
then there will be peace.

The peace we are looking for
is within us.
That is where we will find it.
Peace is within the heart
of each being.

If we want peace in our lives,
it is definately possible.

We don't have to create peace;
we have to usher it in.

So many people
are working on trying to bring peace.
Peace is already there
and it resides in the heart
of all human beings -
it always has and always will.

Each of us is a magnificent reality
in a magnificent world,
and within us
is immeasurable peace,
immeasurable joy.

This reality is not in antiquity
and not in modern science.
It is not up in the heavens,
but in the heaven inside of us.

All the good and the bad,
all the things
that will happen and
won't happen,
the wars will be fought
and the peace that will be made -
the sum of all that
is less important
than the experience of each
human being.

This is our time;
this is our opportunity to be alive.

The breath that comes into everyone
so quietly,
so quietly,
is screaming a message
very loud and clear.
What is the message?
"Now."
Now in your life,
be fulfilled.
Now in your life,
find joy.
Now in your life,
find peace.

**- TUAN TIMOTHY MAT JANGGUT,**
Malaysia

வெள்ளி விழா காணும்

# யாழ் - ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம்

- மோ. தார்சீசியஸ் -

ஆடி மாதம் 30 ஆம் நாள். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தோராம் ஆண்டு. மருதமடு திருப்பதியின் முற்றத்தில் பெருவிழாக்கோலம்.

அலங்காரச் சோடனைகள். ஆடம்பர மின் விளக்குகள். அழகுற அமைக்கப்பட்ட முன் தாழ்வாரம். (போர்டிக்கோ) விசேடமாகப் பெருப்பிக்கப்பட்ட அகல மாக்கப்பட்ட அழகு நிலை. யாவும் விசேடமாக அமைக்கப்பட்ட நிலை. இத்தனை அலங்காரங்கள் ஆயத்தங்கள் நடுவே மக்கள் பெருங்கூட்டம்.

வழமையான ஆடி, ஆவணி மாதப் பெருவிழா போன்று மக்கள் கூட்டம். பெருவிழாக் கூட்டத்தைவிடப் பெருங்கூட்டம் என்று கூறினாலும் அது மிகையாகாது.

இத்தனைக்கும் காரணம், அன்று தான், புதுப் பிறப்படைந்த மன்னர் மறை மாவட்டத்தின் முதல் ஆயராக மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மன்னார் திருமறையின் ஆயராகத் திருநிலைப்படுத்தப் பட்டார். இப்பெரு நிகழ்வினைக் காணத்தான் மக்கள் வெள்ளம் திரண்டு வந்திருந்தது.

இறையடி சேர்ந்த மறைந்த மாமேதை மேதகு வ. தியோகு பிள்ளை ஆண்டகையின் தலைமை சடங் கமைப்பில் இலங்கையின் ஏனைய ஆயர்கள் முன்னிலை யில் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மன்னார் மறை மாவட்ட முதல் ஆயராக அபிஷேகம் செய்து திருநிலைப்படுத்தப்பட்டார்.

மறை மாவட்டம் என்ற மன்னார் மறைமாவட்டத் திற்கு அதுவும் யாழ் மறை மாவட்டக் குருவான மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை திருநிலைப் படுத்தப்பட்டமை மிகவும் பொருத்தமன்றோ? இந்நிகழ் வின் தொடரில்தான் இறையருளால் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தமது ஆயர் பதவியின் தொடர் தேர்ச்சியான இருபத்தைந்து ஆண்டுகளின் நிறைவு விழாவினைக் கொண்டாடுகின்றார்.

இவ்விழாவானது முதல் முறையாகப் பொறுப் பேற்ற மன்னார் மறை மாவட்டத்திலன்று; இன்று அவர் பொறுப்பேற்று ஆட்சி புரியும், நிருவாகம் நடத்தும், தான் பிறந்து வளர்ந்து, கல்வி கற்று, இறைவனின் குருவாகப் பணியாற்றிக் களங்கள் கண்ட யாழ் மறை மாவட்டத் திலே கொண்டாடுகின்றார்.

முதன் முதலாக ஆயர் பணியினைப் பொறுப் பேற்றுப் புத்தம் புதிய மன்னார் மறை மாவட்டத்தில் அப்போது அவர் எதிர்கொண்ட சவால்கள், பணிக் கஷ்டங்கள் சொல்லும் தரமன்று. இருந்தும் தூய ஆவியின் நற்கொடை வல்லமையினால் அனைத்தையும் சாதனைகளாக மாற்றினார். வேதனைகளைக் கணக்கில் எடுக்கவேயில்லை. போதனைகளை மேற்கொண்டார். சோதனைகளை வென்றார். இவை அனைத்தையும் தமது வழமையான புன்னகையால், புன்சிரிப்பால் துவம்சம் செய்தார்.

## மன்னாரில் பணி

மன்னார் மறை மாவட்டத்தினை அன்னார் பொறுப்பெடுத்த போது அம்பாறை மாவட்டம் ஒரு சிறு குழந்தை, புதிய ஆயர், புத்தம் புது மறை மாவட்டம், இந்நிலையில் புதிய ஆயரின் பணிக்களம் கஸ்டங்கள் நிறைந்ததாகவே இருந்தது. முன் அனுபவம், ஆயத்தங் கள் அடிப்படைத் திட்டங்கள் எவையும் இன்றித் தலையைக் கொடுத்தார். காலூன்றினார். ''இறைவா, நீ இருக்க, நமக்கேது பயம், உன் அருளே எனக்குப் போதும். உன் துணையே எனக்கு வலிமை, உன்னடிச் சுவட்டில் என் பணி தொடர்வேன்'' என்று மருதமடு அன்னையினதும், கானக செல்வியின் ஆசீர்களுடனும் தனது பணியினை முன்னெடுத்தார்.

## யாழ் மறைமாவட்டப் பணி

எதற்கும் ஒரு வரையறை உண்டு. வரம்பு உண்டு. அரசு ஊழியர்கள் அறுபது வயதுடன் ஓய்வுபெற வேண்டும் என்பது கட்டாய விதி. இதே போன்று நம் திருச்சபையிலும் சில வரம்புகள், வரையறைகள் உண்டு. இதற்கு அமைய ஆயர்கள், எழுபத்தைந்து ஆண்டுகள் தாம் பணி புரிய முடியும். இதன் பின்னர் அவர்கள் ஓய்வு பெற வேண்டும்.

இதற்கு அமைய யாழ், மறை மாவட்ட அந்நாள் ஆயர் மறைந்த பேரருள் திரு. வ. தியோகு பிள்ளை ஆண்டகை கட்டாய ஓய்வு பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. யாழ் மறை மாவட்ட வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும். எப்படி? இறை அருள் பாலித்தது. இதன்படி மன்னார் மறை மாவட்டத்து ஆயர் பேரருள் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை யாழ் மறை மாவட்ட ஆயராக நியமனம் பெற்றார். இந்நியமனம் காரணமாக மன்னார் மறை மாவட்டத்தில் வெற்றிடம் ஏற்பட்டது. இவ்வெற்றிடமும் இறையருளால் நிரப்பப்பட்டது. இதன்படி மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை மன்னார் மறை மாவட்ட ஆயரானார்.

யாழ் மறை மாவட்டத்தின் பொறுப்பினை ஏற்பதற்குப் பலர் பின்னடித்த வேளையில் மன்னார் மறை மாவட்ட ஆயராக இருந்த மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை முன்வந்தார். ''மலையே வீழ்ந்தாலும் தலையே சும என்ற உலக நியதி வாக்குக்கு ஒப்ப எதற்கும் நான் அஞ்சமாட்டேன்'' என்ற துணிவு

டன் முன்வந்தார். அவர் இதற்குப் பல வழிகளிலும் இயைபானவரே. காரணம் யாழ் மறை மாவட்ட மண்ணின் மைந்தன். இம்மாவட்டத்தின் தனிப் பெரும் சிறப்பினால் மன்னார் மறை மாவட்ட ஆயரானார். ''நன்றி மறப்பது நன்றன்று'' என்பதற்கொப்ப பெருந் தன்மையோடு, நன்றித்தன்மையோடு யாழில் பணிபுரிய ஒப்புதல் கொடுத்தார்.

யாழ் மண்ணிற்கு வந்த வேளை, மிக மிக இக் கட்டான நெருக்கடியான கால கட்டம் அரச நெருக்கு வாரங்கள், கெடுபிடிகள் நிறைந்த காலமாகும். மறையை யும் காக்க வேண்டும். மக்களையும் காக்க வேண்டும். மறையும் வளர வேண்டும். மக்களும் வளர வேண்டும்; வாழ வேண்டும். இந்நிலையில் இறையருளை வேண்டித் துணை கொண்டு தனது ஆன்மீக, லௌகீகப் பணியினை முன்னெடுத்தார், முகம் கொடுத்தார்.

யாழ் மறை மாவட்டத்தைச் சேர்ந்த கிளி நொச்சி, முல்லைத் தீவு, மாங்குளம், பூநகரி இவற்றுடன் இணைந்த தீவுகள் முன்னர்ப் பல கஸ்டங்களையும், நெருக்கடிகளையும் கொண்ட பங்குகளாக விளங்கின. பங்குக் குருக்கள், உதவிப் பங்குத் தந்தையர்கள் போது மான அளவில் இல்லாமையினாலும் ஆன்மீகப் பணி களை நிறைவாக, பூரணமாகப் பெற முடியாதவாறு பங்கு மக்கள் இன்னல்கள் அடைந்தனர்.

இன்றும் ஒரு பங்குத் தந்தையிடம் அநேக பல பங்குகள் சுமத்தப்பட்டு, இணைக்கப்பட்டு அவர்களும் தம் கடமைகளை சரிவரச் செய்ய முடியாது பிரச்சினைப் பட்டனர். இவற்றை எல்லாம் கற்றுணர்ந்த ஆயர் அவர்கள் தமது நிருவாகத் தன்மையைத் திறம்படச் செய்யத் திட்டம் தீட்டினார்.

வன்னி மக்களின் தேவையை உணர்ந்தார். அவர் களது ஆன்மீகத் தாகத்தைத் தீர்க்க முனைந்தார். இதன் முடிவு வன்னி மக்களுக்கு விடிவைக் கொடுத்தது. பல புதிய பங்குகளை உருவாக்கினார்.

முன்னர் ஒரு தனிப் பங்கில் குவிந்து கிடந்த வழிப் பங்குகளை, கோவில்களை மக்கள் வசதிக்கேற்பப் பிரித்து எடுத்துப் பல புதிய பங்குகளை உருவாக்கினார். இதற்கெனப் பல புதிய பங்குத் தந்தையர்களையும், உதவிப் பங்குத் தந்தையர்களையும் நியமித்து, முன்னைய பங்குகளின் சுமைகளைக் குறைத்தார். இச்செயலானது மக்களிடையே புதிய ஆர்வத்தினையும், புத்தூக்கத்தை யும், விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தியது. அதுமட்டு மல்லாது, அவர்களிடம் முன்னர் விளங்கிய ஏனோ தானோ என்ற ஓய்வுணர்வை ஒழித்து, ''நமது பங்கு, நமது பங்கு'' என்ற அவாவினையும் ஏற்படுத்தியது. இதனால் அவர்கள் தத்தம் புதுப் பங்குகளில் ஆர்வம் கொள்ளத் தூண்டியது.

யாழ் ஆயர் ஆன்மீகப் பணியுடன் மட்டும் தம் செயல்பாட்டினை நிறுத்திக் கொள்ளவில்லை. பரந்துபட்ட நோக்கிலே சமூக, சமுதாய ரீதியிலும் மிக அக்கறை யுடனும், ஆர்வத்துடனும் செயல்பட்டார். நாட்டிலே ஏற்பட்ட அசாதாரண நிலையினாலே சாதி, சமய, இன வேறுபாடு இன்றி அனைத்து மக்களின் நலன் கருதி அவர்களது குடியியல் வாழ்வுரிமைக்காகப் போராடி னார். உண்மைக்காக வாதாடினார். நீதிக்காகக் குரல் கொடுத்தார். மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களைப் போக்க முயன்றார். இதனால் பல வெளிநாட்டுப் பிரமுகர்கள், அரசியல்வாதிகள், ஆட்சியாளர்கள் யாழ்ப் பாணம் வருகை தரும்போது ஆயரையும் சந்தித்துத் தவறாமல் அவரது முறைப்பாடுகள், குறைபாடுகள் யாவற்றையும் கேட்டறிந்தார்கள். அவரது ஆலோசனை களுக்கும் முன்னுரிமை கொடுத்தார்கள்.

இன்று ஆயர் பதவியின் வெள்ளி விழாவினைக் காணும் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மேலும் பல காலம் இறைப்பணியும், சமூகப் பணியும் புரிந்திட இறைவனிடம் அருள் வேண்டுவோம். தூய ஆவி அவரை வழி நடத்திட வேண்டுவோம். மரியன்னை அவரை என்றும் பாதுகாத்திட வேண்டுவோம். ✱

## பிஞ்சுகளைப் பிளந்த பிசாசுகள்

### நோர்வேயிலிருந்து தமிழன்

செஞ்சோலையில் எங்கள் பிஞ்சுகளின்
செங்குருதி குடித்த இரும்புப் பறவைகளே
முல்லையின் மரண ஓலம் கேட்கிறதா...?

வானம் பார்த்து விழிமூடிக் கிடக்கும் - எங்கள்
வண்ணப் பூக்களை வந்து பாருங்கள்
யுத்தவெளி பிடித்த புத்தமுகம் கிழியும்!

உங்கள் தாகம் தீர்த்துக் கொள்ள
தமிழனின் குருதியென்ன மதுபானமா?
பிணவெறி பிடித்த இனவெறிகளே!

எங்கள் வலிகளைச் சேமிக்கும்
இதயங்கள் இனியும் தாங்காது
வலிகளைச் செலவு செய்ய வருவோம்!

எங்கள் குருதியால் எழுதப்படும்
சிங்கள மகிந்தவின் சிந்தனைக்கு
எரிமலைப் பிழம்புகள் கொடுப்போம்!

எல்லை மீறிய எதிரிகள் கூட்டமே - இனி
எழுது கருவிகள்கூட ஏவுகணையாகும்
எட்டுத் திக்கிலும் வெற்றி எமதாகும்!

கனத்த நெஞ்சுடைக்கும் ஓலத்தில்
முடிவெழுதிச் சென்றவர்களே கேளுங்கள்
தீ கொண்டு தீர்ப்பெழுத வருவோம்!

துயரங்களைத் தூக்கி எறிவோம் - எங்கள்
தமிழினத்தை விலைபேச வரும்
தீயசக்திகளைத் தீயிட்டுக் கொளுத்துவோம்!

உக்கிரமானவர்களாக மாறுவோம்
உயிருக்குள் வெடிமருந்து சுமப்போம்
உலகத்தைத் தினமும் உலுக்குவோம்!

சமாதானம் கல்லறை சேரட்டும் தலைவனின்
விழிகளில் தீயெரி வழியட்டும்
விரைவினில் தமிழீழம் மலரட்டும்!

# ஈழம் பிரபாகரனுடன் ஒரு நாள்!

## இயக்குநர் இமயம் பாரதிராஜா

இந்தியில் 'சினிமா' என்ற தலைப்பிலேயே ஒரு சினிமா இயக்கிக்கொண்டு இருக்கிறார் பாரதிராஜா.

''என்னோட 28 வருஷ சினிமா வாழ்க்கையில், இப்படி சாத்விகமாக உட்கார்ந்து ஒரு படம் நான் செய்த தில்லை. 'பதினாறு வயதினிலே', 'சிகப்பு ரோஜாக்கள்' ரெண்டுக்குப் பிறகு, இது நானே எழுதின கதை. ஒரு சினிமா டைரக்டரின் வாழ்க்கையில் நடக்கிற கதை. இதில் நானே நடிச்சிரலாம்னு முதல்ல நினைச்சேன். இது என் சொந்தக் கதைன்னு நினைச்சுடுவாங்க. அது ஒரு பிரச்சினை. அதனால், மனசில் பட்டவர் நானா படேகர். பெரிய ஞானஸ்தன். விதையைப் போட்டால், விருட்சமா வெளிச்சமா வெளியே வருவான். எனக்கே வித்தை காட்டுவான். தெரிஞ்சு கையாண்டால், மகா நடிகன், ரஜினி, கமல், சிவாஜி வரைக்கும் சகஜமா கொண்டு வந்திருக்கேன். இப்போ, தோண்டத் தோண்ட ஊறுகிற மனுஷனா படேகர்!''. கடல் காற்றை ஆழமாகச் சுவாசித்தபடி நிமிர்கிற பாரதிராஜாவின் முகத்தில் ஏராள மான உணர்வலைகள்.

''இதோ கண்ணு முன்னால கிடக்குதே கடல். சுனாமி வந்த கடல். அதுக்கப்புறம் நாம எல்லாரும் கடலைப் புறக்கணிச்சுட்டோமா என்ன? காலம் எல்லாத் தையும் மாத்தும். துயரங்களைக் கண்டு கதறலாம். ஆனா. அடுத்து என்னன்னு யோசிக்கணும். நினைச்சாலே நெஞ்சு கொதிக்குதுங்க. கும்பகோணத்தில் குழந்தைங்க கருகிச் செத்தப்போ துடிச்சோமே, அதே துயரம், அதே கவனம், இலங்கையில் செஞ்சோலையில் குண்டு பட்டு உருக்குலைஞ்ச குழந்தைகளுக்கு ஏன் கிடைக்கலை?

அவனும் நம்ம வம்சாவளி தானே? நம்ம ரத்தம் தானே? கோபம், வீரம், ஈரம் எதுவுமே இல்லாமப் போயிட்டோமா என்ன? இந்த மத்திய அரசும், மாநில அரசும் ஏதாவது செய்ய வேண்டாமா? தீர்மானம் போட்டுட்டு சட்டசபையில் சொந்தச் சண்டைகளைப் போட்டுக்கிட்டு, எவ்ளோ நாள் இருக்கப்போறோம்?''

*''ஈழ மக்களின் துயரங்களில் பங்கு கொள்ள, இருக்கிற சில தடைகள் நீங்கள் அறியாததா?''*

''ராஜீவ் காந்தியின் மரணத்தைச் சொல்றீங்களா? அந்த கறுப்புப் பக்கத்தைப் புரட்டிட்டு போங்க. அது கிரேட் மிஸ்டேக்! அதில் எனக்கு வேற கருத்தே கிடை யாது. ஆனா, அதுக்காக இந்தப் பூமி உள்ளவரை ஒரு இனத்தையே மொத்தமா புறக்கணிக்கறதுதான் தண்டனையா?

மகாத்மா காந்தியைக் கொன்னவங்களையே மன்னிச்ச தேசம்யா இது. அன்னை இந்திரா மரணத்துக் காக, சீக்கிய சமுதாயத்தையே நாம தடை செஞ்சுட் டோமா என்ன? அதே சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரைப் பிரதம மந்திரியா உட்கார வெச்சு அழகு பார்க்கிற இயக்கம் தானே காங்கிரஸ் கட்சி. அது எத்தனை நல்ல பண்பு. நான் சோனியாவை இந்த ஒரு காரணத்துக்காக வணங்குகிறேன்.

இப்போ இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்கள் தினம் தினம் சாகிறான். உயிரைக் காப்பாத்திக்க பிள்ளை குட்டியோட இந்தப் பூமி முழுக்க ஓடித் தவிக்கிறான். அவனுக்கு உதவ அரசும் வரணும். நமக்கு நல்ல மனசும் வரணும்!''

*''இலங்கைக்கு நீங்கள் போய் வந்ததாக ஒரு தகவல். தமிழ் ஈழத்தை நேரடியாகப் பார்த்து வந்த அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள முடியுமா?''*

''தமிழ், தமிழன்னு நாமெல்லாம் சொல்லிட்டுத் திரியுறோமே, நானெல்லாம் தமிழன்தானான்னு எனக்குக் குற்ற உணர்ச்சியே வந்திருச்சு. 'போர்'னா என்னன்னு தமிழ்நாட்டில் ரெண்டு மூணு தலைமுறைக்குத் தெரியாது. ஆனா, யுத்தம், சத்தம் ரத்தம்னு ஒரு வாழ்க்கை. கை இழந்து, கால் இழந்து, பார்வை பறிபோய், குடும்பம், வீடு, பிள்ளை குட்டின்னு பறி கொடுத்தும் நம்பிக்கை யோட நடமாடுறாங்க. காந்தியோட கனவு தேசம் மாதிரி நாட்டை வெச்சிருக்காங்க. தமிழ் ஈழத்தில் ஒரு குடி காரனைப் பார்க்க முடியாது. பிச்சைக்காரன் இல்லைங்க. திருடன் இல்லை. நடுராத்திரி 12 மணிக்குத் தன்னந் தனியா பெண் நடமாட முடியும்யா அந்த மண்ணில்.

வீர மரணம் எய்திய புலிகளின் கல்லறைகளைப் பார்த்தேன். 'நாங்க புதைக்கப்படலை. விதைக்கப் பட்டிருக்கோம்'னு புரட்சி பேசுற இடுகாடு. அவங்க கிட்டே இழக்கிறதுக்கு இனி எதுவுமே இல்லை. வாழவா வது விடலாம்ல?''

*''புலித் தலைவர் பிரபாகரனையும் சந்தித்தீர்களா?''*

''ஆமா! கம்பீரமா அந்த உண்மையைச் சொல் றேன். நான் கிளிநொச்சிக்குள் நுழைந்ததுமே, 'தலைவர் உங்களைச் சந்திக்க விருப்பத்துடன் சம்மதித்திருக் கிறார்'னு தகவல் சொன்னாங்க. அந்த மகோன்னத வேளைக்காகக் காத்திருந்தேன்.

எங்கெங்கேயோ அழைச்சுட்டுப் போறாங்க. திடீர் திடீர்னு திசை மாறுகிற பயணங்கள். மூணாவது முறை போகும்போது, வழியில் தமிழ்ச்செல்வனைப் பார்த்தேன். என்னை ரொம்ப ரசிக்கிற மனுஷன். சிரிக்கச் சிரிக்கப் பேசினார்.

அதுக்கப்புறம்தான் நிஜப் பயணம். வண்டி போய் இறங்கின இடத்தில் சிரிச்ச முகமா, கூப்பின கையுடன் நின்றிருந்தார் பிரபாகரன். இராணுவச் சீருடையில், சிங்கம் மாதிரி இருந்தார். ஹா! என் எதிரில் இந்த யுகத்தின், இந்த இனத்தின் ஒரே நம்பிக்கை நிக்கிறார். அப்போ எனக்குள்ள உண்டான சிலிர்ப்பு, பரவசத்தை யெல்லாம் விவரிக்கத் தெரியலை. சட்டுன்னு அப்படியே அவரை இறுக்கிக் கட்டிக்கொண்டேன். அவரும் என்னை அணைச்சுக்கிட்டார். என் கண்ணுல தண்ணி முட்டிக்கிச்சு.



பேச்சே வரலை. அவர் பக்கத்தில் யாரையும் அவ்வளவு நெருக்கத்தில் அனுமதிக்க மாட்டாங்களாம். ஆனா, எனக்குத் தந்த மரியாதை, அவங்க நம்ம மேல வெச் சிருக்கிற அன்பின் அடையாளம்!

புது இரத்தம் பாய்ஞ்ச மாதிரி இருந்துச்சு. 'உங்க உருவத்தில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸைப் பார்க்கி றேன்'னு சொன்னேன். 'எனக்கு வழிகாட்டியே அவர் தான்!'னு சிரிச்சார்.

அவர் பேசுறதைக் கேட்க ஆரம்பிச்சா, மனசுக் குள்ள மரியாதை இன்னும் கூடிட்டே போகுது. 'எங்களுக்காக ஈழத் தமிழ் வாழ்க்கையை ஒரு படமாக எடுத்துத் தர வேண்டும், செய்வீர்களா?'ன்னு கேட்டார். 'பேருக்கும், பணத்துக்கும், புகழுக்கும் நிறையச் செய்துட் டேன். என் வாழ்க்கைக்கு அர்த்தம் தேடிக்கவாவது நிச்சயம் செய்யறேன்'னு சொன்னேன். அந்த நிமிஷமே என் மனசுக்குள்ள ஏறின சத்தியம் அது.

'மணிரத்னம் படத்தில் ஒரு மோசமான அரசியல் வாதியா நீங்க நடிச்சிருக்கக் கூடாது'ன்னு சொன்னார். 'கன்னத்தில் முத்தமிட்டால்! படத்தில் பிரகாஷ்ராஜ் ஒரு சிங்களவனா ஊடுருவுவது மாதிரி, நிஜத்தில் முடியாதுன் னார். 'நான் உங்களை இவ்ளோ பக்கத்தில் பார்த்துட் டேன். இந்த உலகம், இந்த வாழ்க்கை எனக்கு இப்போ புரியுது. அதுமாதிரி மணிரத்னம் பார்த்திருந்தா, அப்படிச் செய்திருக்க மாட்டார். மணிரத்னம் மதிக்கப்பட வேண் டிய அற்புதமான கலைஞன்'னு எடுத்துச் சொன்னேன்.

மூணு மணி நேரப் பேச்சு. தளபதிகளை அறி முகம் செஞ்சுவெக்கிறார். கடல் புலிகள் தலைவர் சூசை, பொட்டு அம்மான், தமிழ்ச்செல்வன்னு எல்லாரும் இருக் காங்க. சூசையைக் கூப்பிட்டு, 'அண்ணனைக் கடல் பய ணத்துக்குக் கூட்டிட்டுப் போ!'ன்னு சொன்னார் பிரபா.

ஆனா, அன்னிக்குக் கடுமையான மழை. அதனால போக முடியலை. எனக்குக் 'கூழ் விருந்து' கொடுத்தாங்க. அது அங்கே அன்பு உபசரிப்பு. நண்டு, மீனுன்னு என்னென்னவோ போட்டுத் தந்தாங்க. அமிர்தம்னு சொல்வாங்களே, அதுதான்!

'உலகத்தில் ஏழு அதிசயத்தையும் பார்த்துட்டேன். நீங்க எட்டாவது அதிசயம்; யாருக்கும் எட்டாத அதிசயம்'னு சொன்னதும் சிரிச்சவர், 'ஈழத் தமிழர் களுக்காக, எனக்காக படம் செய்வீர்கள்தானே?'ன்னு மறுபடியும் கேட்டார்.

## சயனைடு கவிதை

### கபிலன்

வாடகைத் தாயின் மார்பில்
அனாதைக் குழந்தைகளாய்
அகதிகள்.

எரிக்கப்பட்ட கூட்டிலிருந்து
இரை தேடி வரும்
ரணம் பூசிய சிறகுகள்.

பனை மரங்கள்
துப்பாக்கிகளாய் வெடிக்க
தேயிலை புகையிலையாய்க் கசியும்.

சமாதானப் புறாவின்
சவத்தில்
சிவப்புக் கொடி.

கிரிக்கெட் ஆட்டம் நின்றுபோனால்
இன்னொரு நாள்
வைத்துக்கொள்ளலாம்.
கோயிலுக்குள் குண்டு வெடித்தால்
இன்னொரு கடவுள் சிலையை
வாங்கிக்கொள்ளலாம்.
வகுப்பறையில் குண்டு வெடித்தால்
எப்படி முளைக்கவைப்பது

இன்னொரு சீருடைச் செடியை?
ஊரே அழுகிறது
எதற்கு ஊரடங்கு?

ஒரு துளி நிலத்தில்
கடலளவு கல்லறைகள்.

மண்டை ஓடுகள்
எல்லைக் கோட்டை அழிக்கட்டும்.
பிணங்களின் கனவு
மெய்ப்பட வேண்டும்.

ராமேஸ்வரத்தில்
ஒதுங்கிய தமிழர்கள்
தாய் மண்ணுக்குத் திரும்பும்போது
தேசியகீதம்
தாய் மொழியாகட்டும்.

ரத்தத்தில் மூழ்கிய
பேனாவிலிருந்து
துளித் துளியாய்க் கரைகிறது
கவிதை.

''என் காலம் முடியுறதுக்குள்ள செஞ்சுட்டுத்தான் போவேன்'னு சொல்லிட்டுத்தான் புறப்பட்டு வந்தேன்!'' என்கிறார் அழுத்தமாக! *

– நா. கதிர்வேலன்

*நன்றி : ஆனந்த விகடன்*

# கொழும்பு தமிழ்ச்சங்க தமிழ்த்திறன் பரீட்சை முடிவுகள்

தமிழவேள் இ.க. கந்தசுவாமி, பொதுச் செயலாளர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

தமிழ்மொழி அறிவையும், ஆற்றல்களையும் வளர்ப்பதற்காக இளம் வயதினருக்கும் வயது வந்தவர்களுக்கும் இச்சங்கம் பல ஆண்டுகள் தமிழ்த்திறன் பரீட்சைகளை நடத்தித் தங்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கியுள்ளது. கடந்த ஆண்டு நடத்திய இத் தேர்வுகளுக்கான பரிசில்கள் பெறுபவர்கள் வருமாறு :

### அ. மாணவர்கள் பரிசில்கள்

### 1. மாணவர் நாவன்மை முதனிலைப்பரிசில்:

1ஆம் பரிசில் செல்வன் சி. சோபிதன்,
சாவகச் சேரி இந்துக் கல்லூரி.

2ஆம் பரிசில் செல்வன் மா. அரவிந்த்,
கம்பளை இந்துக் கல்லூரி.

3ஆம் பரிசில் செல்வி சதுர்த்திகா சக்கரவர்த்தி,
மட்டக்களப்பு வின்சன்ற் கல்லூரி.

செல்வி து. சந்திரவதனி, செல்வி சு. சுகிர்தா, நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி. இவர்களுக்கு மறவன் புலவு மு. கணபதிப் பிள்ளை நினைவுப் பரிசில் வழங்கப்படும்.

### 2. மாணவர் நாவன்மை உயர்நிலைப் பரிசில்:

1ஆம் பரிசில் செல்வி. அருணகிரி தேவிகா நதீஷானி,
நுகேகொடை தமிழ் மகா வித்தியாலயம்.

2ஆம் பரிசில் செல்வி. ரி. பவித்திரா,
நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி.

3ஆம் பரிசில் செல்வி. தனபாலசிங்கம் சசிரேகா,
வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி.

இவர்களுக்கு முல்லைத்தீவு ஆ. கனகசபாபதி நினைவுப் பரிசில் வழங்கப்படும்.

### 3. தமிழ்த் திறன் எழுத்துத் தேர்வு முதனிலை:

1ஆம் பரிசில் செல்வன் அ. அர்ச்சனா,
பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி.

2ஆம் பரிசில் செல்வி. அ. அமுதப்பிரியா,
வத்தளை புனித அன்னம்மாள் மகளிர் கல்லூரி.

3ஆம் பரிசில் செல்வி. அசிலா அருந்ததி,
வத்தளை புனித அன்னம்மாள் மகளிர் கல்லூரி.

இவர்களுக்கு திருமதி மனோன்மணி சங்கரப் பிள்ளை பரிசில் வழங்கப்படும்.

### 4. தமிழ்த் திறன் எழுத்துத் தேர்வு உயர்நிலை:

1ஆம் பரிசில் செல்வி. யோகேந்திரா காயத்திரி,
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

2ஆம் பரிசில் செல்வி. ரா. சுரேக்கா,
வத்தளை புனித அன்னம்மாள் மகளிர் கல்லூரி.

3ஆம் பரிசில் செல்வி. செ. சரண்ஜா,
வவுனியா நெடுங்குளம் கலைமகள் தமிழ் மகா வித்தியாலயம்.

இவர்களுக்கு முன்னாள் தலைவர் அ. சபாரத்தினம் நினைவுப் பரிசில் வழங்கப்படும்.

### ஆ. வளர்ந்தவர்களுக்கான ஆய்வுக் கட்டுரைத் தேர்வுப் பரிசில்கள்

### 1. பாரதி இலக்கிய ஆய்வுக் கட்டுரை :-

''மகாகவி பாரதியும் பாஞ்சாலி சபதமும்''

திருமதி. பீ.எஸ். இராசரத்தினம்,
பின்தாலியா பிளேஸ், கல்கிசை. இவருக்குப் பேராசிரியர் க. கைலாசபதி நினைவுப் பரிசில் வழங்கப்படும்.

### 2. திருமுறை இலக்கிய ஆய்வுக் கட்டுரை :-

''அப்பர் திருமுறை காட்டும் வழிபாட்டு முறைகள்''

ஏ.எஸ். இராதாகிருஷ்ணன், ஆசிரிய ஆலோசகர், மாத்தளை. இவருக்கு உயர்நீதிமன்றச் சட்டத்தரணி எஸ். சிவசுப்பிரமணியம் நினைவுப் பரிசில் வழங்கப்படும்.

### 3. இலக்கண ஆய்வுக் கட்டுரை :-

''பயனிலைகளின் ஆக்கமும் அவற்றின் பயன்பாடும்''

சஞ்சீவி சிவகுமார், உதவிப் பதிவாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்.

சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பரிசு.

### 4. பொருளியல் ஆய்வுக் கட்டுரை :-

''வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் பொருளாதார வளங்களும் பயன்படுத்தற்கான வழிகளும்''

த. சிவசுப்பிரமணியம், திருகோணமலை. இவருக்கு அ.ஐ. நாடு அசோகன் சங்கரப்பிள்ளை பரிசில் வழங்கப்படும்.

சட்ட இயல் ஆய்வுக் கட்டுரைகள் பரிசில் பெறுவதற்குத் தெரிவு செய்யப்படவில்லை.

### இ. வளர்ந்தவர்களுக்கான கவிதைத் தேர்வுப் பரிசில் (விரும்பிய பொருள் விரும்பிய தலைப்பு.)

ந. கனகரத்தினம் (எருவில் இரத்தினம்) இவருக்கு முன்னாள் நா.உ.எஸ். கதிரவேற்பிள்ளை நினைவுப் பரிசில் வழங்கப்படும்.

# புதுயுகத் தமிழர்

**கணேசன் சேந்தன்**, யாழ்ப்பாணம்

*(2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியின் இலங்கைப் பிரதேசம் பிரிவில் முதற் பரிசு பெற்ற கவிதை)*

கடலலையும் வந்துகரை மடிதடவிப் போகும்
கதிரொளியைக் கண்டுமலர் கண்சிமிட்ட லாகும்
அடல்செறிந்த மலைமகனை ஆற்றுநங்கை மேவும்
அனலெறிந்த போதுமிளந் தென்றல்குளிர் காயும்.

தாயணைக்கும் பாசமெனத் தண்ணிலவு காயும்
தவழுகின்ற காற்றினூடு தமிழ்கலந்து பாயும்
தீயெரித்த பின்னும்வனம் திரும்பவுமே தழைக்கும்
திகழுபுவி பொலிவளங்கள் சேர்ந்தழகை இழைக்கும்.

அண்டவெளி மண்டலத்தில் அலையுமெங்கள் கோளில்
ஆதிமுதல் மனிதனவன் அடியெடுத்த நாளில்
கண்டெடுத்த நாகரிகக் கலைகளுக்குள் ஒன்றாய்க்
காலமதை வென்றதிந்தத் தமிழினமும் நன்றாய்!

புல்நுனியின் மீதமரும் பனிவடிவை மிஞ்சும்
பூமடியில் மதுநுகரும் வண்டழகை விஞ்சும்
சொல்நயமே யெம்தமிழின் சோகைமிகு சொத்தாம்
சுரந்தொழுகி நவமியற்றும் செய்கையதன் சத்தாம்!

முரசறைந்து சங்கொலிக்க முன்னரெங்கள் ஆட்சி
மூவகையில் கொடிபறக்க முடிநிமிர்ந்த மாட்சி
அரசிதென்று உம்பர்கூட அயரநின்ற காலம்,
ஆளவந்த இனமிதென்று ஏற்றமுற்ற கோலம்!

இன்றுவெறும் ஏட்டினிலே ஏனடங்கிப் போச்சு
எந்தமிழும் ஏதமுற்றே இழுக்குததன் மூச்சு!
கொன்றொழிக்கும் கூட்டமொடு குடிமனைக்குள் வாழ்ந்தே
கொள்ளிவைக்கும் பேய்களாலும் குலையுந்தமிழ் தாழ்ந்தே!

காலமென்ற நதியினோர நாணல்போல யாண்டும்
காற்றிலாடிக் கரைகடக்கும் நதியிலாழ்ந்து மீண்டும்
கோலஞ்செய்து நிமிர்வதென்ற கொள்கைதன்னை விட்டுக்
கொண்டுபோகும் வெள்ளமோடு போகிறோமே பட்டு!

நாடழிந்து நலமிழந்து நாதிகெட்டுப் போனோம்
நாம்வணங்கும் தாய்நிலத்தை விட்டகதி ஆனோம்
வேடமிட்டு வாழவேண்டி வேளைவந்த தேனோ?
வெட்கமின்றி நாங்கள் வாழும் தன்னலத்தால் தானோ?

கல்விவேள்வி யெங்குமெங்கள் கைகளின்னும் மேலே
ககனவெளிக் கேதுஎல்லை யென்றுபோவ தாலே
வல்லபிறர் விழிகளெங்கள் வளர்ச்சிகண்டு விரியும்,
வந்தனையும் திருஷ்டியாலே பண்புகொஞ்சம் சரியும்!

மொழிகலந்து மெய்வளைந்து மோகனமாய்ப் போசி
முகத்தினையும் வேறதாக்கி முடிக்குந்தீங்கைப் பூசிப்
பழியிதடா தமிழிற்கென்று பதறுவோரைத் தாண்டிப்
பாதியான ஆடையோடு புதுமைதனை வேண்டி!

நெறிகடந்த தமிழரிங்கு நிலையழிந்து விட்டார்!
நினைவிருந்த கட்டுக்கோப்பின் களையிழந்து கெட்டார்!
செறிவிழக்கும் மொழிகளுள்ளே தமிழுமொன்றாம் தமிழா!
செம்மொழியா யா(க்)கியினிச் சேர்வதென்ன புகழா?

எம்மினத்தை மொழியையெங்கள் ஏற்றமிகு நாட்டை
எச்சிலாக்க வருபவரை எதிர்த்தவர்க்குச் சாட்டை
செம்மையாக வீசிடவே செருக்களங்கள் ஏறும்
சீலர்களால் தமிழிற்கின்னும் சீவனுண்டு. தேறும்!

தமிழென்ற அமிர்தமிங்குத் தனிமைமிக்க மொழியாம்
தமிழரெங்கள் பலமதொன்றே அதனைக்காக்கும் வழியாம்
நிமிர்ந்தஞான அறிஞரோடு நெருப்பையொத்த படையும்
நிற்பதனால் தமிழினந்தான் நினைத்ததனை அடையும்!

உருண்டுஓடும் யுகத்தின்வழி ஓடுகின்ற போதும்
உதிக்குமெதிர் காலமிங்கு உணர்வுகொண்டே ஓதும்
திரண்டதனால் தமிழர்வென்ற தீரமதன் நாதம்
திசைகளெங்கும் ஒலிக்கவின்று செய்வமொரு வேதம்!

ஒருபுறத்தில் தமிழர்வாழ உயிரையூற்றும் வீரர்
உணர்வினாலும் அறிவினாலும் தமிழ்வளர்க்கும் தீரர்
இருப்பிலுள்ளார்! புதுயுகம்வாழ் என்னருமை நண்பா!
இவர்க்குநீர் அணிலானாலே எழுமேதமிழ் தெம்பாய்!!

### ஈ. நூலாக்கப் பரிசில்கள்

### 1. செய்யுள் இலக்கிய நூல்:-

''பண்டார வன்னியன் காவியம்''

எழுதியவர் கவிஞர் ஜே. ஷெரீபுதீன் அவர்கள். இந் நூலுக்குப் புலவர் கருணாலய பாண்டியனார் நினைவுப் பரிசில் வழங்கப்படும்.

### 2. உரைநடை இலக்கிய நூல்:-

''வியத்தகு தமிழர் வாழ்வியல்''

எழுதியவர் மாத்தளை சோமு. இந்நூலுக்குச் சங்க முன்னாள் தலைவர் க. மதியாபரணம் நினைவுப் பரிசில் வழங்கப்படும்.

### 3. நாடக இலக்கிய நூல்:-

''சம்பூரண அரிச்சந்திரா''

எழுதியவர் நாட்டுக் கூத்துப் புலவர் ஆ. தேவ சகாயம் பிள்ளை, யாழ்ப்பாணம். இவருக்கு ஈழத்து அறிஞர் இ. இரத்தினம் நினைவுப் பரிசில் வழங்கப்படும்.

### 4. வரலாற்று நாவல் :

''யார் இந்த வேடர்''

எழுதியவர் பெரும் புலவர் க.தா. செல்வராசகோபால் மட்டக்களப்பு. இவருக்கு முன்னாள் தலைவர் பொ. சங்கரப் பிள்ளை நினைவுப் பரிசில் வழங்கப்படும்.

### உ. கல்விப் புலமைப் பரிசில்கள் :-

பெறுபவர் செல்வி விஜயதர்ஷினி விஜயகுமார். பரந்தன் முரசு மோட்டை தமிழ் மகா வித்தியாலய மாணவி. இவருக்குக் கொழும்பு மஸ்கன் நிறுவன எஸ். சுப்பிர மணியம் நினைவுப் பரிசில் வழங்கப்படும். ✱

## நாற்பது வயதுக்குப் பின்

# பெண்களை வாட்டும் தூக்கமின்மை நோய்



பொதுவாகவே எந்த வயதினருக்கும் அவர்கள் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும், தூக்கம் என்பது எந்தப் பிரச்சினையுமின்றி வந்துவிட்டால் அவர்களின் புத்துணர்ச்சி, சுறுசுறுப்புக்குக் குறைவே இருக்காது. ஆனால், ஆண்களை விடப் பெண்களுக்குத் தூக்கம் இன்மை ஏற்பட இரு மடங்கு வாய்ப்பு உள்ளது.

மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும், பெண்களுக்கு எல்லாப் பருவத்திலும் தூக்கம் பாதிப்பாகவே உள்ளது. உணவு உடற்பயிற்சிதான் அவர்களுக்கு இதில் இருந்து மீளக் கைகொடுக்கும் விஷயங்கள், அதிவேக உலகில், இப்போது பல பெண்களுக்கும் தூக்கம் இன்மை என்பது பெரும் தொல்லை தரும் விஷயம்.

பருவ வயதை அடையும்போது சிலருக்குத் தூக்கமின்மை ஆரம்பிக்கிறது. சிலருக்கு அவர்கள் கருத்தரிக்கும் சமயத்தில் ஆரம்பிக்கிறது. மாதவிடாய்ச் சுரப்பிகளின் இயல்புத் தன்மை மாறும்போதும் சிலருக்கு இந்தத் தொல்லை ஏற்படும். மன அழுத்தமும் கூடச் சிலருக்குக் காரணமாக இருக்கும். வயதான பெண்களுக்கோ தூக்கமின்மை அதிகமாக இருக்கும். நடு இரவில் தூக்கத்தில் இருந்து எழுந்துகொள்வோர் பலர் உண்டு.

எல்லா வயதுப் பெண்களுக்கும் தூக்கமின்மை ஏற்படுவதற்குக் காரணமாக ஒன்றைக் கூறலாம் என்றால், அது உணர்வு பூர்வ விஷயங்கள்தாம்.

எந்த ஒரு வயதிலும் தூக்கமின்மை அதிகமாக இருந்தால், அதுதான் டிப்ரஷன் பாதிப்புக்கு அறிகுறி. இப்படி டிப்ரஷன் உள்ள பெண்கள், படுக்கைக்குப் போகும்போது நன்றாக உறங்குவார். ஆனால், நடு இரவில் அவர்கள் திடீர் என்று விழித்துக்கொண்டு விடுவர். அப்புறம் தூக்கமே வராது.

டீன்-ஏஜ் பெண்களுக்குள் இப்படிப்பட்ட சிலர், நள்ளிரவில் ஏதாவது சாப்பிட்டால் தான் மீண்டும் தூங்க முடியும் என்று நினைப்பர். சாப்பிட்டு விட்டுத்தான் தூங்குவர். இதை நாக்டர்னல் ஈட்டிங் சிண்ட்ரோம் என்று கூறுவர். உணர்வுபூர்வ விஷயங்களால், பகலில் சாப்பிடாமல் இருந்துவிட்டு அதனால் தூக்கம் போய், கடைசியில் நள்ளிரவில் சாப்பிட்டு விட்டுத் தூங்குவது என்பது தான் இது.

சிலருக்கு மாதவிடாய் ஆரம்பிக்கும் காலத்துக்கு முன் தூக்கமின்மை இருக்கும். பகல் வேளைகளில் அதிகம் தூங்கிச் சோர்வுடன் காணப்படுபவர்களும் உண்டு. இவர்கள், மாதவிடாய் ஆரம்பித்த பின்னர், வழக்கப்பட்ட எந்தப் பிரச்சினையும் இன்றித் தூங்க ஆரம்பிப்பர். மாதவிடாய்க் காலத்திலும் சிலருக்குத் தொடர்ந்து தூக்கம் வராமல் தவிப்பது உண்டு. அவர்களுக்கு இந்த நிலை நீடித்தால் அதனால், அன்றாடச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டால், டாக்டரைப் பார்ப்பதே நல்லது. கருத்தரித்த காலத்தில் பெண்களுக்குப் பல கட்டங்களில் தூக்கம் போய்விடும். பெரும்பாலான பெண்களுக்குப் பகலில் அதிக சோர்வு இருக்கும். இரவில் நீண்ட நேரம் தூங்குவர். கருத்தரித்த கால கட்டங்களில் கடைசி மூன்று மாதம், தூக்கம் பெரிதும் பாதிக்கப்படும். அடிக்கடி எழுந்துகொள்வர். நெஞ்சு எரிச்சல், முதுகுவலி, கருப்பையில் கருவின் இயக்கம் போன்றவைதாம் இதற்குக் காரணங்கள்.

கருத்தரிக்கும் காலம் முழுக்கப் பெண், நன்றாகத் தூங்கவேண்டும். மன அழுத்தத்துக்கு இடம் கொடுக்கக் கூடாது. தூக்கமாத்திரை போன்றவற்றைச் சாப்பிடவே கூடாது. அதிகமான உணவையோ காரவகைகளையோ சாப்பிடாமல் தவிர்க்க வேண்டும்.

குழந்தை பிறந்த பின்னர்க் குழந்தைக்குப் பால் தருவது, உணவு தருவது போன்ற விஷயங்களுக்காகத் தாயின் தூக்கம் பாதிக்கிறது. எனினும் பிரசவத்துக்குப் பின்னர்த் திட்டமிட்டுத் தூக்கத்தைப் பராமரிக்க வேண்டும். அதற்கு டாக்டரின் ஆலோசனை பெறலாம்.

பெண்கள் நாற்பதைத் தாண்டினால் பல விஷயங்களில் கவனிப்புடன் இருக்க வேண்டும். அந்தக் கால கட்டம்தான் முக்கியமானது. மாதவிடாய் நிற்கும் கால கட்டம் ஆரம்பிக்கும்போது சிலருக்குத் தூக்கம் அதிகமாகப் பாதிக்கப்படும். சிலரை இரவில் தூங்கவே விடாது. அடிக்கடி எழுந்து கொள்வர்.

படுக்கை அறையில் ரொம்பவும் வெப்பமாக இல்லாமல் பார்த்துக்கொள்வது, படுக்கையில் பருத்தித் துணிகளைப் பயன்படுத்துவது, அல்கஹோல், சீனி போன்றவற்றை உணவில் இருந்து தவிர்ப்பது, ஆகியவை செய்தால் இதில் இருந்து தப்பலாம்.

விட்டமின் 'உ' சத்தை உணவில் அதிகரிக்கலாம். எஸ்ட்ரோஜன் ரீப்ளேஸ்மென்ட் தெரபி என்ற மருத்துவச் சிகிச்சை முக்கியமானது. அதற்கு டாக்டரிடம் ஆலோசனை பெறலாம். பெண்களுக்குப் பொதுவாகவே ஏற்படும் இதுபோன்ற தூக்கமின்மை, உணவு, பயிற்சிகள், பழக்க வழக்கங்களால் சீராக்கி விடமுடியும். ஆனால், தூக்கமின்மை பெரும் தொந்தரவாக இருக்கிறது என்றால் டாக்டரிடம் செல்வது தான் நல்லது. ✱

# ஆயிரம் வயசு!

**ப. அருணகிரிநாதன், புரட்சிப் புயல் வைகோ.வின் தனிச் செயலாளர்**

மனிதன் ஆயிரம் ஆண்டுகள் வாழ முடியுமா? முடியும் என்று மருத்துவ அறிவியல் மெய்ப்பித்து வருகிறது. 2050 ஆம் ஆண்டுக்குப் பின்னர்ப் பிறக்கின்ற குழந்தைகள் 1000 ஆண்டுகள் வரையிலும் வாழக்கூடிய வாய்ப்புகள் பெருகி வருகின்றன என்பதை அண்மையில் வெளியாகி உள்ள பல ஆய்வுக் கட்டுரைகள் தக்க சான்றுகளுடன் விவரிக்கின்றன. மனித உடற்கூற்றின் அடிப்படை மரபணு அமைப்பில் (Genetic Code) 15 சதவீதம் கண்டு அறியப்பட்டு உள்ளது. அடிப்படை தெரிந்துவிட்டதால் மேற்கொண்டு ஆராய்ச்சிகள் விரைவாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. அடுத்த சில ஆண்டுகளில் வியக்கத்தக்க மாறுதல்கள் ஏற்பட இருக்கின்றன.

சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆடை அணியாமல் திரிந்த மனிதன் வெயிலிலும், மழையிலும், பனியிலும், குளிரிலும் பாதிக்கப்பட்டான். பெரும்பாலும் 25 ஆண்டுகளே உயிர் வாழ்ந்தான்.

எப்போது மனிதன் ஆடை அணியத் தொடங்கினானோ அப்போதிலிருந்து அவனது வாழ்நாள் பத்து ஆண்டுகள் கூடியது. ஒரு வீட்டைக் கட்டி அதில் குடியேறியபோது மேலும் பத்து ஆண்டுகள் கூடுதலான வாழ்நாள் பெற்றான். பச்சையாக உணவு உண்ணும் பழக்கத்தில் இருந்து விடுபட்டு நெருப்பின் மூலம் சமைத்த உணவை உண்ணத் தொடங்கியபோது மேலும் கூடுதல் வாழ்நாள் பெற்றான்.

இவ்வாறான புறக்காரணிகளால் மனிதனுடைய வாழ்நாள் கூடுதலாகி வந்து இருப்பதை யாரும் மறுக்க முடியாது. தற்போது மனிதர்களின் வாழ்நாள் 70 வயதினைக் கடந்து உள்ளது. ஜப்பான் நாட்டில் 100 வயதை நெருங்கியவர்கள் 22,000 பேர் இருக்கிறார்கள்.

## வருமுன் காப்போம்

நோய்கள் வந்தபின் மருத்துவம் பார்த்த காலம் மாறி, நோய்கள் வருவதைத் தடுப்பதற்கான மருத்துவ முறைகள் வந்து விட்டன. நம்முடைய காலத்திலேயே பெரியம்மை, இளம்பிள்ளைவாதம் போன்ற பல நோய்களுக்குத் தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு முற்றிலுமாக ஒழிக்கப்பட்டதைக் கண்டோம். அதிலும் பெரியம்மை நோயின் அறிகுறிகள் குறித்துத் தகவல் தருபவர்களுக்கு ஆயிரம் ரூபாய் பரிசு என்று வீதிகள் தோறும் அறிவிக்கப்பட்டது. தற்போது பிறக்கின்ற குழந்தைகளுக்குப் பல்வேறு நோய்கள் வருமுன் பாதுகாப்பதற்காகத் தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன. மூன்று ஆண்டுகளுக்கு என்னென்ன தடுப்பு ஊசிகள் போட வேண்டும் என்பதை ஒரு பட்டியல் அட்டவணையாக அச்சடித்துக் கையில் கொடுத்துவிடுகிறார்கள்.

சமச்சீரான சத்துள்ள உணவு கிடைக்காததால் பல்வேறு உடல்நலக் குறைவுகள் ஏற்பட்டன. இப்போது நம்முடைய உணவுப் பழக்க வழக்கங்களிலும் மாறுதல் ஏற்பட்டு வருகிறது. எடுத்துக்காட்டாக 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர்த் தமிழகத்தில் எத்தனை ஆயிரம் கோழிக்கறிக் கடைகள் புதிதாகத் திறக்கப்பட்டு உள்ளன என்பதை எண்ணிப் பாருங்கள்.

நடந்து செல்கிற இடங்களுக்கு வண்டிகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஐந்து ஆண்டுகள் கூடப் பெற்றான். வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்றால் கால்களால் நடக்காதீர்கள்; காலையில் நடைபழகுங்கள். காலில் செருப்பு அணியத் தொடங்கியபோது மேலும் ஐந்து ஆண்டுகள் கூடுதல் வாழ்நாள் பெற்றான்.

கடுமையான உடல் உழைப்பினால் செய்துவந்த பணிகளையெல்லாம் மின்பொறிகளைக் கொண்டு செய்ய வைத்ததால் மேலும் 10 ஆண்டுகள் வாழ்நாள் பெற்றான். எனவே, உடல் உழைப்பைக் குறையுங்கள்; உடற்பயிற்சி செய்யுங்கள்.

தூய்மையைக் கடைப்பிடித்து, குளிர் மற்றும் கோடைக் காலங்களில் அறை வெப்பநிலையை சமச்சீரான அளவில் வைத்துக் கொள்வதால் மேலும் வாழ்நாள் கூடுகிறது. கடந்த நூற்றாண்டில் கிடைக்கத் தொடங்கிய மருத்துவ வசதிகள் மனிதனுடைய உடல் நலத்தைப் பாதுகாப்பதிலும்; வாழ்நாளைக் கூட்டுவதிலும் எத்தகைய பங்கு வகிக்கின்றன என்பதை நாம் அறிவோம்.

தற்போதைய மருத்துவ வசதிகள் அதிகப்படியானவை - தேவையற்றவை என்று பலர் கருதுகிறார்கள். தெருவில் நாடோடிகளாகத் திரிபவர்களுக்கு நோய் வருகிறதா? என்று எதிர்வினா எழுப்புகிறார்கள். அவர்களுக்கு என்ன நோய்கள் இருக்கின்றன என்பதைப் பரிசோதனை செய்து பார்த்தால் அல்லவா தெரியும்? மருத்துவர்களிடம் செல்வதற்கு அவர்களிடம் பணம் இல்லை; கல்வி அறிவு இல்லை. நரிக்குறவர்கள், வீதியில் வசிப்பவர்கள் நன்றாக இருப்பதாகக் கருதினால் அது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வது ஆகும். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தி மேன்மை அடையச் செய்ய வேண்டும்.

என்னதான் ஆயிரத்தைக் கண்டுபிடித்தாலும் குழந்தைப் பிறப்பைத் தடுக்க முடியுமா? அது இறைவன் கொடுக்கும் வரம் அல்லவா? என்றார்கள். இன்று

குழந்தை வேண்டுமா? வேண்டாமா? என்பதை நாம் தான் தீர்மானிக்கிறோம். கருவில் இருப்பது ஆணா? பெண்ணா? என்று கண்டுபிடிக்க முடியுமா? என்று பத்து ஆண்டுகளுக்கு முன்பு வரை நம்மில் பலர் சவால் விட்டுக்கொண்டு இருந்தார்கள். ஸ்கேனர்கள் வந்தபின்பு இன்று அவர்கள் அதைப்பற்றிப் பேசுவதே கிடையாது. கருவில் இருக்கும் இரண்டு மாதக் குழந்தை அழுவதும், சிரிப்பதும் வண்ணப் படங்களாக வெளிவரத் தொடங்கி விட்டன. இரண்டு மாதக் கருவிலேயே அறுவைச் சிகிச்சைகள் நடைபெறுகின்றன.

எல்லாம் இறைவன் செயல் என்று சொல்லித் தன்னுடைய பொறுப்பைத் தட்டிக் கழித்து விடுவது, வேறு ஒருவர் கண்டுபிடித்துத் தந்த வசதிகளைப் பயன் படுத்திக் கொள்வது என்பது தன்னை நம்பாதவர்களின் இயல்பு. எந்தவொரு புதிய கண்டுபிடிப்பையும் அதன் அறிமுக நிலையில் மதவாதிகள் ஆண்டவனுக்கு எதிரானது என்றே முத்திரை குத்தினர். ‘கடவுளின் சினமே இடியாக ஒலிக்கிறது. கடவுளின் சிறுநீர் மழை யாகப் பொழிகிறது’ என்றெல்லாம் சொல்லப்பட்டது. புதிய கண்டுபிடிப்புகளினால் அந்தப் பொய், புரட்டு, கற்பனைகள் வலு இழந்தன. தங்களுடைய எதிர்ப்பு முனை முறிந்து போகிறபோது மதவாதிகள் வேறு ஆயுதங்களைக் கையில் எடுத்துக் கொள்வார்கள். அவர்கள் இப்போது தொலைக்காட்சியில் மடமையைப் பரப்பி வருகிறார்கள்.

நோயைக் கண்டு அறிய ஸ்கேனர்களைப் பயன் படுத்துவது தேவை இல்லாதது; மருத்துவர் அதிகப் படியாகச் செலவை ஏற்படுத்துகிறார் என்று பலர் நினைக்கிறார்கள். அது தவறான கருத்து.

**‘நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்’**

என்றார் வள்ளுவர். நோயின் தன்மையைத் தெளிவாகக் காண்பதற்கு ஸ்கேன் பரிசோதனை கட்டாயத் தேவை ஆகும். அதன் வழியாக நோயின் தன்மையைக் கண்டு அறிந்து, அதற்கு ஏற்ற வகையில் சிறப்பான மருத்துவ உதவிகள் அளிக்க முடியும். குறிப்பிட்ட கால இடை வெளிகளில் அனைவரும் தங்கள் உடலை முழுமை யாகப் பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

இனிவரும் காலங்களில் மருத்துவச் செலவுகள் பலமடங்கு கூடிக்கொண்டே செல்லுமே தவிர ஒரு போதும் குறைய வாய்ப்பு இல்லை. தற்போது மருத்துவ மனைகளில் கட்டணங்களைக் கேட்கும் அனைவருக்கும் அதிர்ச்சியும் மயக்கமும்தான் வருகிறது. ஏன்? இதுவரை நாம் நம்முடைய உடல்நலத்துக்காக அதிகம் செல வழித்தது இல்லை. நம்முடைய இளமைக் காலத்தில் உடல் நல்ல நிலைமையில் இருக்கும்போது பிற்காலத்தில் வரக்கூடிய மருத்துவச் செலவுகளைப் பற்றிச் சிந்திப்பது இல்லை. நோயோ, விபத்தோ நம்மிடம் சொல்லிக் கொண்டு வருவது இல்லை. திடீரென அவை வரும் போது நம்மால் அதை எதிர்கொள்ள முடிவது இல்லை. இதுதான் அதிர்ச்சிக்குக் காரணம்.

அமெரிக்க மருத்துவமனைகளில் ‘உடனடி மருத்துவக் கண்காணிப்புப் பிரிவில்’ அனுமதிக்கப்படு பவருக்கு ஒரு நாள் ஆகக் கூடிய செலவே பத்து இலட்சங்களைத் தாண்டுகிறது. இத்தகைய செலவுகளை ஈடுகட்டுவதற்காகத்தான் மேலை நாடுகளில் அனை வரும் காப்பீடு செய்து கொள்ளுகிறார்கள். காப்பீடு இல்லாமல் மேற்கு நாடுகளுக்குள் நீங்கள் காலடி எடுத்து வைக்க முடியாது. நுழைவு உரிமை (விசா) கிடைக்காது. அங்கெல்லாம் மருத்துவச் செலவுகள் அனைத்தையும் காப்பீட்டு நிறுவனங்களே ஈடு கட்டுகின்றன. அது போன்ற காப்பீட்டுத் திட்டங்கள் நம் நாட்டிலும் இருக் கின்றன. தனிநபர் விபத்துக் காப்பீட்டுத் திட்டங்கள், மருத்துவச் செலவுகளுக்கான காப்பீட்டுத் திட்டங்களில் உங்களைக் காப்பீடு செய்து கொள்ளுங்கள். எதிர்கால மருத்துவச் செலவுகளுக்காக உங்கள் மனத்தைத் தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள். கட்டணத்தைக் கேட்கும் போது அதிர்ச்சி ஏற்படாது.

குருதிக்கொடை அளிப்பது உடலுக்கு நல்லது. அதன் மூலம்; குருதி ஓட்டத்தில் அழுத்தம் குறையும்; புதிய குருதி ஊறும். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை குருதிக்கொடை அளிக்கலாம். ✱

## மறைக்கப்பட்ட வரலாறு!

மகாத்மா காந்தி கத்தி இன்றி, இரத்தம் இன்றி அகிம்சை முறையில் போராடி இந்தியாவுக்கு விடுதலை பெற்றுத்தந்தார் என்றாலும், அதற்கு முன்ன தாகவே இந்திய சுதந்திரப் போராட்டம் நீண்ட வரலாறு கொண்டது என்பதை நாம் அறிவோம். இதில் 1857-ஆம் ஆண்டில் வடநாட்டில் இந்தியச் சிப்பாய்கள் நடத்திய புரட்சிதான் விடுதலைப் போராட்டத்தின் முன்னோடி என்று கருதப்படுகிறது. ஆனால் வேலூர்ச் சிப்பாய்க் கலகம் அதற்கு 51 ஆண்டுகளுக்கு முன்பே 1806-ஆம் ஆண்டிலேயே வெடித்தது. இருப்பினும் இந்த முதல் சுதந்திரப் போராட்டம் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற் றில் முறையாக இடம் பெறவில்லை. மறைக்கப்பட்டு உள்ளது என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனால் இந்தச் சிப்பாய்க் கலகத்தின் 200-ஆவது ஆண்டு விழாவையொட்டி இதற்கு விடிவு காலம் பிறந்திருக்கிறது. சிப்பாய்ப் புரட்சியை மாண வர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் பாடப் புத்தகங் களிலும் ஓரிரு பக்கங்களைச் சிப்பாய்ப் புரட்சி ஆக்கிரமிக்கும். அது மாணவர்களுடைய உள்ளத்தில் வீரத்தை ஊட்டுவதாகவும் அமையும் என்று முதல் அமைச்சர் கருணாநிதி அறிவித்து உள்ளார்.

சிப்பாய்ப் புரட்சியில் உயிர் நீத்த வீரர்கள் நினைவாக ஏற்கெனவே ஒரு நினைவுத் தூண் உள்ளது. 1998-ஆம் ஆண்டு திசம்பர் 20-ஆம் தேதி நிறுவப்பட்ட இந்த நினைவுத்தூண் வேலூரின் மையப் பகுதியில் உள்ளது குறிப்பிடத்தக்கது. இப்போது மேலும் ஒரு நினைவுச் சின்னமும் அமைக்கப்படுகிறது.

## (நூல் நயவுரை) திருக்கோணமலை இலக்கிய வெளியீட்டின் முன்னோடி புலவர் வே. அகிலேச பிள்ளை

**நூலகவியலாளர் என். செல்வராஜா**

*(ஐபீசி அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் ''காலை கலசம்'' நிகழ்ச்சியில் 6-8-2006 அன்று நூலகவியலாளர் என். செல்வராஜா அவர்களால் தொகுத்து வழங்கப்பட்டது)*

திருக்கோணமலையில் இலக்கிய வெளியீட்டின் முன்னோடி புலவர் வே. அகிலேச பிள்ளை என்ற நூல் கலாவிநோதன் த. சித்தி அமரசிங்கம் அவர்களால் திருக் கோணமலை ஈழத்து இலக்கியச் சோலை வெளியீடாக மார்ச்சு 2006 இல் வெளிவந்துள்ளது. 200 ரூபாய் விலையுள்ள இந்நூலில் திருக்கோணமலை தந்த பெரியார் புலவர் வே. அகிலேச பிள்ளை அவர்களின் வாழ்வும் பணியும் பதிவுக்குள்ளாகியுள்ளது.

தமிழறிஞரான புலவர் வே. அகிலேசபிள்ளை அவர்களின் 152ஆவது நினைவாண்டில் இந்நூல் வெளி வந்திருப்பது சிறப்பம்சமாகும். இதுவரை இப் பெரியார் பற்றி ஈழத்தில் வேறெந்த நூலும் வெளிவந்திருக்க வில்லை என்பதும் சிந்திக்க வேண்டிய விடயமாகும். இந்நூலை வெளியிட்டிருக்கும் திரு. சித்தி அமரசிங்கம் அவர்கள் திருக்கோணமலையின் மண்பற்றாளர். வாழ்ந்து மறைந்த அந்த மண்ணின் மனிதர்களைப் பற்றித் தமிழ் உலகம் அறியச்செய்யும் பணியில் விடாப்பிடியாக உழைத்து வருபவர். அதையே தன் வாழ்வின் பயனாகக் கருதியும் இன்று எம்மிடையே வாழ்பவர். ஏற்கெனவே இவர் திருக்கோணமலையில் வாழ்ந்து மறைந்த தமிழ் அறிஞர்கள், சமூகச் சேவையாளர்கள் பலரைத் தனது தனிமனித நிறுவனமான ஈழத்து இலக்கியச் சோலையின் வாயிலாக அறிமுகம் செய்து வந்துள்ளார். சித்தி அமர சிங்கம் அவர்களின் ஈழத்து இலக்கியச் சோலை இது வரை 25 நூல்களை வெளியிட்டுள்ளமையும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

எழுத்தாளர், வெளியீட்டாளர், நாடக நடிகர், ஆய்வாளர், அரிய நூல்சேகரிப்பாளர் என்று பல முகங் களைக் கொண்டவர் சித்தி அமரசிங்கம் அவர்கள். திருக் கோணமலை மாவட்டத்தைச் சல்லடை போட்டுத் தேடி மறைந்துபோன பல பெரியார்கள் பற்றிய குறிப்புகளைத் தேடி எடுத்து அவை அனைத்தையும் ஆவணப் பதி வாக்கிவைப்பதில் மிகுந்த ஈடுபாட்டுடன் உழைப்பவர்.

ஈழத்து இலக்கியச் சோலையின் எட்டாவது வெளியீடாகக் கழகப் புலவர் பெ.பொ.சி. கவிதைகள் என்ற நூல் வெளிவந்தது. திருக்கோணமலை தமிழ் எழுத் தாளர் சங்கத்தின் தலைவராகவும் இராமகிருஷ்ண சங்க இந்துக் கல்லூரியின் ஆசிரியராகவும் பணியாற்றி 1983இல் அமரரான கழகப் புலவர் வரகவி பெ.பொ. சிவசேகரனார் அவர்களின் கவிதைகளின் தொகுப்பாக அமைந்த இந்நூலை, ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி இராசநாயகி கந்தையா அவர்களால் எழுதப்பட்ட அமரர் பெ.பொ.சி. அவர்களின் வாழ்க்கை வரலாற்றுடன் சேர்த்துச் சித்தி அமரசிங்கம் அவர்கள் வெளியிட்டிருந்தார். வரகவி. பெ.பொ. சிவசேகரனார் அவர்களின் அமரத்து வத்தின்போது பல்வேறு அறிஞர்களால் வழங்கப்பட்ட இரங்கலுரைகளின் சாராம்சமும் இந்நூலின் முற்பகுதி யில் காணப்பட்டன.

திறனாய்வாளர் திருக்கோணமலை த. கனகசுந்தரம் பிள்ளை என்ற நூல், ஈழத்து இலக்கியச் சோலையின் 16ஆவது வெளியீடாக வெளிவந்தது. தி.த. கனகசுந்தரம் பிள்ளை அவர்கள் மறைந்த 142 ஆவது ஆண்டில் அப் பெரியார் பற்றி அவ்வப்போது ஒன்பது அறிஞர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து 2003 இல் இந்நூல் வெளிவந்தது.

தம்பலகாமம் க. வேலாயுதம் என்ற நூல், திருக் கோணமலை மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கும் தம்பல காமத்தின் மூதறிஞரான க. வேலாயுதம் என்பவரைத் தமிழ் உலகம் அறிய வழிசெய்திருந்தது. பல்கலை வேந்தன், பழம்பெரும் பரியாரி, முதுபெரும் ஊடக வியலாளன், சமூகத் தொண்டன் என்றெல்லாம் விளிக்கப் பெற்ற தம்பலகாமம் க. வேலாயுதம் அவர்களின் முதன்மைக்காலத்தில் அவரது பணிகளை நினைவு கூர்ந்து, வாழும்போது கௌரவிக்கும் வகையில் தம்பல காமம் க. வேலாயுதம் அவர்களின் 87ஆவது அகவை யின்போது 2005இல் அவர் பற்றிய நூலை ஈழத்து இலக்கியச் சோலை வெளியிட்டிருந்தது.

இந்த நூல்கள் தவிர, காந்தி மாஸ்டர் சிறப்பு மலர், கிழக்கில் பூத்த ஞானமலர், போன்ற சிறப்பு மலர் களையும் வெளியிட்டு அந்த மண்ணின் மைந்தர்களைக் கௌரவித்து வந்தவர் ஈழத்து இலக்கியச் சோலையின் சித்தி அமரசிங்கம் அவர்கள். அவரது அண்மைக் கால அறுவடையாகத் திருக்கோணமலையில் இலக்கிய வெளி யீட்டின் முன்னோடி புலவர் வே. அகிலேச பிள்ளை என்ற வாழ்க்கை வரலாற்று நூல் அமைந்திருக்கின்றது.

திருக்கோணமலை தந்த தமிழறிஞர் புலவர் வே. அகிலேச பிள்ளை அவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம் பிள்ளை ஆகியோரது காலத்தில் வாழ்ந்தவர். இவர்கள் போன்றோரது சேவையைக் கண்டறிந்து தாமும் தம்மால் இயன்றவரையில் தமது பிரதேசத்துத் தமிழ் ஏடுகளை நூலுருவாக்கம் செய்யத் துணிந்தார் என்பதனை இந்நூலின் முதலாவது கட்டுரை யிலே அறியமுடிகின்றது.

திருக்கோணாசல வைபவம், கோணேசர் கல் வெட்டு, திருக்கரைசைப் புராணம் என்பன இவரால் நூலுருவம் பெற்றுள்ளன. அத்தோடு கண்டி அரசனாக இருந்த நரேந்திரசிங்கன் வசந்தன் சிந்து, வெருகல் சித்திர

வேலாயுத சுவாமி காதல் முதலிய சிறு நூல்களையும் இவர் ஆராய்ந்துள்ளார்.

புலவர் வே. அகிலேச பிள்ளை தாமே தரமான தொரு புலவராய் நின்று தமிழ் நயம் செறிந்த பல பிர பந்தங்கள், பதிகங்கள், வைபவங்கள், ஊஞ்சல், கும்மிகள், மாலை முதலிய படைப்புகளையும் தந்துள்ளார் என்று அறிய முடிகின்றது. புலவர் வே. அகிலேச பிள்ளை இயற்றிய நூல்களின் பட்டியலும் அந்த நூல்கள் சம்பந்த மான குறிப்புகளும் திருக்கோணமலையில் இலக்கிய வெளியீட்டின் முன்னோடி புலவர் வே. அகிலேச பிள்ளை என்ற இந்த நூலில் காணக் கிடைக்கின்றது. புலவர் வே. அகிலேச பிள்ளை அவர்களால் எழுதப் பட்டு இன்னும் அச்சுருவில் ஏறாத நூல்களின் பட்டியல் ஒன்றும் காணப்படுகின்றது.

இந்நூலில் புலவர் வே. அகிலேசப் பிள்ளை அவர்களின் பிள்ளைகள், மருமக்கள் ஆகியோரின் புகைப்படங்களும் இடம் பெற்றுள்ளன. புலவர் அகிலேச பிள்ளை பற்றிய வரலாற்றுத் தேடலை முழுமை யாக்கும் வகையில் புலவரது நினைவுச் சின்னம், நினைவுச் சின்னக் குறிப்பு ஆகியனவும் காணப்படுகின்றன. அமரர் வே. அகிலேச பிள்ளை அவர்களின் 152ஆவது ஆண்டு நிறைவின்போது முத்தமிழ் வளர்கலை மன்றத்தின் ஆதரவில் வாராந்த இந்து மயானத் தொடர் சிரமதானப் பணியொன்று இடம்பெற்று, அவரின் நினைவு ஸ்தூபி இருந்த இடம் துப்புரவாக்கப்பட்டுள்ளது. இச்சிரமதானப் பணியின் வண்ணப் புகைப்படங்கள் ஒன்பதும், சிரம தானப் பணியில் ஈடுபட்ட 69 பேரின் பெயர்ப் பட்டியலும் இந்நூலில் காணப்படுகின்றன. நூலின் பின்னட்டையில் புலவர் வே. அகிலேச பிள்ளை அவர்களின் நினைவு ஸ்தூபியில் சாய்ந்தபடி நிற்கும் நூலாசிரியரின் புகைப்படமும் அலங்கரிக்கின்றன. காத்திரமான இந்த வரலாற்று நூலில் விளம்பர நோக்கம் கொண்ட இத்தகைய புகைப்படங்கள் நெருடலாக உள்ளன. இத்தகைய பதிவுகள் இந்நூலுக்குத் தேவை தானா என்ற கேள்வியும் எழுவதைத் தவிர்க்க முடிய வில்லை. தனிப்பட்ட முறையில் நூலின் விற்பனையை அதிகரிக்க உதவும் என்று கருதப்பட்ட போதிலும், இவை நூலின் வரலாற்றுத் தரத்தினைக் குறைத்துவிடும் காரணி களாகின்றன.

புலவர் வே. அகிலேச பிள்ளை அவர்கள் தனது நூலகத்தில் சேகரித்து வைத்திருந்ததாகக் கருதப்படும் 2200 நூல்களின் பட்டியல் ஒன்று இந்நூலில் காணப் படுகின்றது. இது 132 பக்கம் கொண்ட இந்த நூலின் அரைப் பங்கினை உள்ளடக்கிவிடுகின்றன. போதிய நூலியல் தகவல்களற்ற இப்பட்டியல் இன்றைய கால ஆய்வுத் தேவைகளுக்கு எவ்வகையில் உதவலாம் என்று சிந்தித்தேன். விடை கிடைக்கவில்லை. இந்நூல்களின் தற்போதைய இருப்பிடம் பற்றிய தெளிவான தகவல்களை நூலாசிரியர் குறிப்பிடாவிட்டாலும், புலவர் வே. அகிலேச பிள்ளை அவர்களின் மகனான அளகைக் கோன் என்பவரின் ஹஸ்கிசன் வீதி இல்லத்தில் இருப்ப தாகப் புரிந்துகொள்ள முடிகிறது. ஈழத்து இலக்கியச் சோலையினால் இன்று அடையாளம் காணப்பட்டுள்ள இந்த அரிய நூற்சேர்க்கையை ஆய்வாளர்களால் முறை யாகப் பயன்படுத்தக் கூடிய வகையில் கிழக்குப் பல்கலைக்கழக நூலகம் பொறுப்பேற்க முயலவேண்டும்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையின் சிறப்புத் தமிழ் கலைமாணிப் பட்டத்தின் ஆய்வுத் தேவைக்காகப் பல்கலைக் கழக மாணவர்கள் ஆய்வு களை மேற்கொள்வது வழக்கமாகும். இவர்களின் உதவி யுடன் இன்று கிழக்கிலங்கை மண்ணில் மறைந்துவரும் மண்ணின் மைந்தர்கள் பற்றிய வாழ்வும் பணியும் ஆய்வு செய்யப்பட்டு நூலுருவாக்கப்படவேண்டும்.

புலவர் வே. அகிலேச பிள்ளை அவர்களின் காலத்தில் இவரது ஆசானாகவும், சமகால அறிஞர் களாகவும் இருந்த பலர் பற்றிய பதிவுகள் எமக்குக் கிடைப்பது அரிதாகிவிட்டது. அகில நாயகப் புலவர், கோணை மணிவண்ணர், புலவர் கதிரைவேற்பிள்ளை, கணேச பண்டிதர், அப்துல் காசிம் புலவர், சுவைக்கீம் பிள்ளைப் புலவர், திருநாவுக்கரசு உபாத்தியாயர், பூரணானந்த ஐயர், நாவலர் நாசரத் நாதர், ஞானபண்டித உபாத்தியாயர் போன்றோர் அக்காலத்தில் வாழ்ந்து மறைந்த திருக்கோணமலைத் தமிழ் அறிஞர்கள். இவர்கள் பற்றிய வரலாற்றுத் தடம் அழிந்துவரும் இன்றைய நிலையில் அந்த மண்ணில் நிலைகொண்டு அறிவியல் வளம்காணும் கிழக்குப் பல்கலைக்கழகம் போன்ற உயர்கல்வி நிறுவனங்கள் அவர்கள் பற்றி ஆய்வுத் தேடலை மாணவர்களின் ஆய்வுத் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் மேற்கொள்ள வேண்டும். இதற்கு இன்று அந்த மண்ணில் நின்று தனிமனித நிறுவனமாக உழைக்கும் சித்தி அமரசிங்கம் போன்றோர் நிச்சயம் வழிகாட்டுவார்கள் என்று நம்பலாம்.

இந்த நூலின் இறுதியில் ஒரு அறிவித்தல் காணப் படுகின்றது. மிக முக்கியமான அந்த அறிவிப்பின்படி, புலவர் வெ. அகிலேச பிள்ளை அவர்கள் இயற்றிய திருக் கோணமலை நாயகர் பதிகம், வெருகல் சித்திர வேலாயுதர் சுவாமி பேரில் சிறைவிடு தூது, திருக்கோண மலை வில்லூன்றிக் கந்தசுவாமி பேரில் பத்துப் பதிகம், திருக்கோணமலை விசாலாட்சி அம்மை பெருங் கழி நெடில் விருத்தம், நரேந்திர சிங்கராசன் வசந்தன் கூத்து, திருக்கரைசைப் புராணம் கங்கைச் சுருக்கம் ஆகிய ஆறு பக்தி இலக்கியங்களும் அச்சேறாமல் கையெழுத்துப் பிரதியாக இருக்கின்றன. இங்குக் குறிப்பிட்ட ஆக்கங் களுக்கு ஞானசிரோன்மணி பண்டிதர் இ. வடிவேல் அவர்கள் உரை எழுதியுள்ளார். இவை அனைத்தையும் அழிவிலிருந்து காப்பாற்றி அச்சுவாகனமேற்றி அழியாத இலக்கியங்களாக வாழ வைப்பதற்குப் புலம்பெயர்ந்து வாழும் திருக்கோணமலை மண்ணின் மைந்தர்கள் உதவி செய்யவேண்டும். ஈழத்து இலக்கியச் சோலை இதனை இலங்கையில் அச்சிட்டு விநியோகிக்க உத்தேசமாக 300 ஸ்டேர்லிங் பவுண் வரையில் செலவாகும். இத்தொகை இங்கிருந்து சமூக நோக்கம் கொண்ட ஓரிருவர் அனுப்பி வைக்க முடிந்தால் இந்தப் பணியை அவர்கள் வெகு இலகுவாகச் செய்து முடிப்பார்கள். *

# மீண்டும் TAMIL HOUSE இல் மார்க்கண்டன் Solicitors

# MARKANDAN & UDDIN SOLICITORS

## Solicitors and Administrators for Oaths

## அகதிகள்

14 வருட, 10 வருட, 7 வருட வதிவிட தகைமை விண்ணப்பங்கள், குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள், பிரஜாவுரிமை விண்ணப்பத்திற்கான ஆங்கில வாழ்க்கை முறை தேர்ச்சி சம்பந்தமான ஆலோசனைகள்

**விபத்தில் அல்லது வேலை தளத்தில் காயமடைந்திருந்தால் நட்ட ஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் - No Win No Fee**

## திருமணங்கள்

*01-02-2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானியா அரசின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் மணம் முடிக்கவிருப்பின், நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங் களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.*

**We Specialise in**

- For all your needs in Immigration (All aspects upto House of Lords)
- Commercial & Residential conveyancing
- Employment
- Civil Litigation
- Consumer Problems
- Last Will
- Power of Attorney
- Sponsorship Declarations HSMP
- Work Permits.

**Markandan & Uddin Solicitors**

*Tamil House, 720, Romford Road, London E12 6BT*
*Tel : 020 8514 8300 / 078 3028 5634, Fax : 020 8514 8381*
*E-mail : info@mssolicitors.com*
***Mr. Markandan** : 07956 386 578 **Mr. Uddin** : 07957 455 670*

# "இலங்கைத் தமிழரின் படைப்புகளும் மனித உரிமைகளும்"

ஐரோப்பாவில் வாழும் இலங்கைத் தமிழர்களின் 33-ஆவது இலக்கியச் சந்திப்பு எதிர்வரும் செப்டம்பர் மாதம் 23, 24-ஆம் திகதிகளில் கிழக்கு இலண்டன் பல்கலைக் கழகத்தின் உதவியுடன் இலண்டனில் நடைபெறவிருக்கிறது.

இலங்கையில் நடந்து கொண்டிருந்த இனப் படுகொலைகளிலிருந்து தப்புவதற்காக ஐரோப்பாவில் குடியேறிய தமிழ் இலக்கியவாதிகள், சிறு பத்திரிகை ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் என்போரால் இவ்விலக்கியச் சந்திப்பு தொடங்கப்பட்டது. இன, மொழி, சாதி, பால் வித்தியாசமின்றி இவ்விலக்கியச் சந்திப்பு மூலம் தமிழ்ச் சமூகத்திலுள்ள முற்போக்குவாதிகள் பலர் தங்கள் படைப்புகள், பங்களிப்புகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

1988-ஆம் ஆண்டில் ஜேர்மனியிலுள்ள ஹேர்ண் நகரில் ஆரம்பிக்கப்பட்ட இலக்கியச் சந்திப்பு இதுவரை 32 முறைகள் கனடா உட்படப் பல மேற்கு நாடுகளின் முக்கிய நகரங்களில் நடைபெற்றிருக்கின்றன.

இலண்டனில் 1994-இல் இலக்கியச் சந்திப்பு முதல்தரம் நடந்தபின் இவ்வருடம் இரண்டாம் முறையாக நடக்கவிருக்கிறது.

இலங்கை, இந்தியா, கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற பல நாடுகளிலிருந்து மிகச் சிறந்த தமிழ்ச் சிந்தனாவாதிகள், எழுத்தாளர்கள், வரைபடக் கலைஞர்கள், திரைப்பட இயக்குநர், புகைப்படக் கலைஞர்கள், பெண்ணியவாதிகள், மனித உரிமை வாதிகள், பத்திரிகையாளர்கள், தலித்தியப் போராளிகள் போன்ற பலர் கடந்து சென்ற 32 இலக்கியச் சந்திப்புகளில் பங்கு பற்றியிருக்கிறார்கள்.

இனவாதத்தைத் தூண்டும் குறுகிய அரசியற் கருத்துகள், மனித உரிமைகளுக்குப் பெண்களின் சுதந்திரத்திற்கு, மதத்தின் பெயரிலும் சாதியின் பெயரிலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான கருத்துகள் இலக்கியச் சந்திப்புகளில் தவிர்க்கப்படுகின்றன. அத்துடன் மேற்கண்ட கருத்துகள் மனித மேம்பாட்டுக்கு எதிரானவை என்பதால் இலக்கியச் சந்திப்புகளில் இக்கருத்துகள் மிகவும் பாரதூரமாக எதிர்க்கப்படுகின்றன. அப்படியானவர்களின் பங்கீடுகள் தடைசெய்யப்படுகின்றன. இந்தச் சந்திப்பு விளிம்பு நிலை மக்கள், பெண்கள், இளம்தலைமுறையினர், முஸ்லிம், மலையகப் படைப்புகளை முன்னெடுக்கும் சந்திப்பாகும்.

# புலம் பெயர்ந்தோர் புகழ்ப்பணிகள்!

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

தாயகத்துத் தமிழ்நண்பா! ஈழத் தோழன்
தனிமடலைத் தீட்டுகிறேன் 'ஃபிரான்சி'ல் நின்றே!
பேயாட்சிச் **சிங்களவர்** குண்டு வீச்சால்
பேரழிவைச் சந்தித்தோம்; புலம்பெ யர்ந்தோம்!
சேய்க்குஞ்சைத் தாய்ப்பறவை
அணைப்பதைப்போல்
திசைமாறி வந்தஎமை இந்த நாட்டார்
தோயாத பரிவுடனே அடக்கம் நல்கித்
தொழில்நல்கி வாழ்வதற்கு வழியும் செய்தார்!

வந்திருக்கும் இந்தமண்ணில் நாங்கள் எங்கள்
வயிற்றைமட்டும் பார்த்தோமா? பூமிப் பந்தில்
எந்தமொழி 'லெமூரியாக் கண்டம்' **தோன்**றி
ஈடில்லா இலக்கியங்கள் படைத்த தோஅச்
சொந்தமொழி செந்தமிழைப் பரப்பு தற்கே
சுடர்ப்பள்ளி பலஅமைத்தோம், அயல வர்க்கும்
நந்தமிழின் கலைகளினை நம்பண் பாட்டை
நளினமுடன் புகட்டுகிறோம்; ஒய்வ தேது?

உலகத்தின் மாப்பெரிய நூற்சு ரங்கம்
உயர்யாழ்நூல் அரங்கத்தைச் சிங்க ளத்தார்
குலைத்தெரித்தார்; அழித்திட்டார்! ஆனால் நாங்கள்
கொஞ்சுதமிழ் நூல்படைத்தும், மன்றம் கண்டும்
நலத்தமிழை வளர்க்கின்றோம்! உரிமை 'இஸ்ரேல்
நாடுகண்டே யூதமக்கள் நிமிர்ந்த தைப்போல்,
புலம்பெயர்ந்த குலத்தமிழர் ஒருங்கி ணைந்தால்
'புதுவிடியல்' தோன்றாதா? தோன்றும் நண்பா!

தேன்கூட்டைக் கல்லெறிந்தே நொறுக்கி விட்டால்
தேனீக்கள் முடங்கிடுமா? நாங்கள் இன்றோ
வான்சிரிக்கும் உடுக்களைப்போல் விரவி நின்றே
வையமெலாம் தமிழ்மணக்க வைத்தோம்! சோழர்
மீன்கடலைத் தாண்டிஅன்றே சிங்க ளத்தை,
மேன்மைமிகு கடாரத்தை வென்ற தெல்லாம்
என்நண்பா, வெறுங்கதையா? ஐ.நா. மன்றில்
எழில்ஈழக் கொடிபறக்கும்; தாய்மேல் ஆணை!

The Venue : University of East London,
Stratford Campus, Stratford, London E 15

திகதிகளும் நேரமும் : 23, 24 செப்டம்பர் மாதம் 2006

மேலதிக விவரங்களுக்கு :
இராஜேஸ் பாலா 0208 889 7827
rajesbala@hotmail.com
கிருஷ்ணராஜா 0208 470 7883, 0795 490 694 ✱

# பாரதி எனும் பாவலன் !

திருமதி. புவனேஸ்வரி சபாரட்னம்

பாரதி என்ற பாவலன்
பைந்தமிழ் வளர்த்த காவலன்!
மானமும் வீரமும் தீரமும் - அவன்
பாக்களில் தெறிக்கும் தீப்பிழம்புகள்!

பொய்ம்மை கண்டு பொங்கி வெடித்தவன்
மெய்ம்மை உணர்த்த நற்கவிகள் இசைத்தவன்
பாப்பாப் பாட்டில் சாதியைச் சாடிப்
பாமர நெஞ்சில் சமத்துவத் தீயை வளர்த்தவன்!

பாரதி என்ற மகாகவி கல்வியில்
பல பட்டங்கள் பெற்ற மகாநதி
வறுமை அவனை வாட்டிய போதும்
வஞ்சகர் நெஞ்சில் வெஞ்சின மூட்டினான்!

அந்நிய ஆட்சியில் அடிமைத்தனமும்
தமிழ் மக்களின் சமூகச் சாக்கடைத்தனமும்
சகதியாய் மிதிபடும் பெண்களின் அவலமும்
விடுதலை எனும் வேட்கைக் கனலை வளர்த்தன!

நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாதநெறி, சிறந்த ஞானச் செருக்கு
புதுமைப் பெண்ணிற்காய், புது நெறி வகுத்தவன்
உண்மையை இந்த உலகிற்குரைத்தவன்!

பாரத நாட்டின் சுதந்திரம் வேண்டிப்
பத்திரிகை பல பிரசுரம் செய்து
பிரிட்டிஸ் அரசின் ஆட்சியை ஒழிக்க
புரிந்தான் பிரசாரம் போர் முரசு கொட்டி!

அன்றவன் பாடிய கவிதையின் கனல்
இன்றெம் ஈழப் போரின் இலக்கணமாயின
தாய்த்திருநாட்டின் விடுதலைப் போரில்
தாய்க்குலத்தோரின் கடமையுணர்த்தினான்!

சிறு மதிபடைத்த சிங்கள அரசின்
சீறிப் பாயும் குண்டு மழையில்
கருகிச் சாகும் எமதினக் குஞ்சுகள்
கண்டால் வெடிக்கும் பாரதி நெஞ்சம்!

புலம்பெயர் வாழ்வின் தாக்கத்தால்
புதுயுகத் தமிழர் இன்று
'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரப்பும்'
புரட்சிக் கவிஞனின் கனவை நனவாக்கும்!
மாகவியின் தீர்க்க தரிசனம் நிதர்சனமாகின
தீரமுடன் நிமிர்ந்து நிற்கும் எமது தமிழ் இனம்.

# பெண்ணென்று பிறந்துவிட்டால்...

கவிச்சுடர் புதுமைக்கோமான் - பெங்களூர்

பெண்ணெனன்றே பிறந்துவிட்டார் இந்நாட்டில் பேரிழிவாய்
என்னென்றே இயம்புவதோ இவரடையும் இன்னல்களை!
கண்ணென்பார் கன்னலென்பார் இன்புற்றே இருக்குமட்டும்;
பின்னவரே பதரென்றே மிதிப்பார் - மிக்க
துன்புறுத்தித் தூசெனவே மதிப்பார்.

வறுமையினால் வாடுகின்ற சிறுமிகளை, நரைவிழுந்து
நரம்பொடுங்கி உடல்சிறுத்து நாறுகின்ற கிழங்களெலாம்
கருத்தரிக்க வைத்தேஅவரைப் பரத்தையராய் மாற்றுகின்ற
இறைபொறுக்காப் பெரும்பாவம் செய்வார் - பின்பு
கறைபடிந்த பெண்களென்று வைவார்.

துன்பமென்று வந்தவனை நண்பனென ஏற்றவர்க்கு
அன்புடனே பொருளுதவி ஆதரித்த பண்பாளன்
பெண்டின்பால் காமுற்றுப் பெண்டாளும் பாவியர்கள்
இன்றுமனம் மிகமகிழ்ந்தே இருப்பார் - நாளை
விண்ணவனின் ஆக்கினையால் இறப்பார்.

பெரும்புதையல் போன்றாளைப் போகித்து மகிழ்ந்திருக்க
விரும்பி, பல்பொருளோடு பெருந்தொகையும் யாசிக்கும்
அறக்கேடர், தமக்கும்பெண் பிறப்பாள்என் றறியாமல்
இருக்கின்ற அறிவற்ற புல்லர் - இவர்
கருக்கலிலே பொருள்பறிக்கும் கள்ளர்.

பெண்பிறக்கும் உளவறிந்து பேதலித்துப் பெறுபவளைக்
கண்கலங்கக் கடுஞ்சொற்கள் கணைதொடுத்துக் காய்ந்திடுவார்;
வன்கண்ணர் வீதியிலே விடுப்பார் - பின்பும்
பெண்டணுகிக் காமஅம்பு தொடுப்பார்.

இன்னொருத்தர் மனைவியென நன்கறிந்தும் அன்னவளை
வன்முறையில் பெண்டாண்டு வெறிதீர்த்துக் கொள்ளுமிவர்
சண்டாளர் இவர்க்குஒரு நீதி! - சுத்த
சன்மார்க்கர் தமக்கு ஒரு நீதி!

மனையாட்டி என்றொருத்தி மாண்புடையாள் என்றிருக்கப்
பணத்திற்காய் உடலைவிற்கும் பரத்தையரோ டுறவுகொளும்
கணவனென்ற கயவன்,தன்மனைவிஉற்ற உறவுடனே
இணக்கமுற உரையாடப் பாய்வான் - அவள்
புனிதத்தைக் கொச்சையெனக் காய்வான்.

போராட்டங்களையும் தவறுகளையும் பொருட்படுத்தாதே. பசு ஒன்று பொய் பேசியதாக நான் எந்தக் காலத்திலும் கேள்விப்பட்டதில்லை. ஆனால், அது பசுவே தவிர ஒருபோதும் மனிதனாகிவிடாது. எனவே இந்தத் தோல்விகளையும் இத்தகைய ஒழுக்கக் கேடுகளையும் ஒருபோதும் பொருட்படுத்தாதே. ஓராயிரம் முறை நீ உனது இலட்சியத்தைக் கைக்கொள். ஆயிரம் முறை நீ தோல்வியுற்றாலும் மீண்டும் ஒரு முறை கைக்கொள்ள முயற்சி செய்.

*- விவேகானந்தர்*

வாழ்வியல் வழிகாட்டி

3

# திட்டமிடுவோம்! வெற்றி பெறுவோம்!!

சோம. வள்ளியப்பன், மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர்

## உந்து சக்தி எங்கிருந்து வரும்?

**உ**ந்து சக்தி எனப்படும் 'மோட்டிவேஷன்' நம்மிடம் ஒருவித 'எனர்ஜியை' உருவாக்கும். அதற்குப் பலமான காரணங்கள் வேண்டும். நாம் முன் பார்த்த குடும்பத் தலைவியிடம் 'நம் கணவரும் இல்லை. இனி நாம்தான் நம் பெண்களை எப்படியும் நல்லவிதமாகக் கரையேற்ற வேண்டும்' என்ற வேகம், பொறுப்பு. அதனால் கிடைத்த உந்துதல். ஆப்பிரகாம் லிங்கனிடம், எப்படியாகிலும் வெற்றி பெற்றே ஆகவேண்டும் என்ற விடாமுயற்சி உந்துசக்தியாக இருந்தது. இன்னும் சிலரிடம் அதுபோலப் பல்வேறு காரணங்கள் உந்துதலாக இருக்கும்.

நாங்கள் முன்பு ஒரு வாடகை வீட்டில் குடியிருந்தோம். நான் ஒன்பதாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தேன். தமிழ் மீடியம் பள்ளி. (இராமகிருஷ்ணா மிஷன்) எங்கள் வீட்டிற்குக் கீழ் குடியிருந்த மற்றொருவரின் மகன் ஆங்கில மீடியம் பள்ளியில் படித்தான். எங்களுக்குள் விளையாட்டில் சண்டை வரும்பொழுதெல்லாம் அவன் என்னைக் கேலி செய்யும் வார்த்தைகள் வெகு நாள்கள் என் மனத்தினை விட்டு அகலவேயில்லை. அந்த நாள்களில் அந்த வார்த்தைகள் எனக்குப் பெரிய அவமானமாகப்படும். அந்த வார்த்தைகள், என்ன தெரியுமா? ''அய்யய... உனக்கு ஒரு வார்த்தைகூட இங்கிலீஷ்ல பேச வராது.''

பலர் முன்னிலையில், அடிக்கடி அவன் இந்த வார்த்தைகளைச் சொல்லிவிட்டு ஓடிவிடுவான். அந்த வார்த்தைகள் என்னிடம் சொல்ல முடியாத அளவு ரணத்தையும், அதன்மூலம் அதை வெற்றிகொள்ளும் உந்து சக்தியையும் ஏற்படுத்தின.

அதன் பின்பு திருச்சியில் எம்.ஏ. பர்சனல் மேனேஜ்மெண்ட் மாணவர்களுக்கு ஐந்தாண்டுகள் மாலை நேர வகுப்புகளில் ஆங்கிலத்தில் விரிவுரையாற்றும் பொழுதும், பாரத மிகுமின் நிறுவனத்தில் தொடர்ந்து மூன்றாண்டுகள் ஆங்கிலப் பேச்சுப் போட்டியிலும் கட்டுரைப் போட்டிகளிலும் முதல், இரண்டாம் இடங்களைப் பெற்ற பொழுதும், அந்தச் சிறுவயது நண்பனைத்தான் நினைத்துக் கொள்வேன். பின்பு பாரதிதாசன் மேலாண்மை நிறுவனத்தில் எம்.பி.ஏ. வகுப்புகள் எடுக்கும் பொழுதும் அவனை மனத்திற்குள் நினைத்து நன்றி சொல்லுவேன். என்னுடைய சரளமான ஆங்கிலப் பேச்சுக்கு அதனை முயற்சித்துப் பழகிக் கொள்ள உந்து சக்தியாக இருந்தவன் அவன்தானே! எனக்கு ஆங்கிலம் சரியாகப் பேசவராது என்பதைக் குத்திக் காட்டியதன் மூலம் என்னுள் 'கோபத்தை' உருவாக்கி ஆங்கிலத்தில் மணிக்கணக்கில் சரளமாகப் பேச உதவியவன்.அவனே!

இதே போல உந்துதல் என் இளைய சகோதரர் இயக்குநர் வஸந்துக்கும் நேர்ந்ததாக அவர் சொல்லக் கேட்டிருக்கிறேன். வஸந்தின் ஆரம்பகால சகபயிற்சியாளர்களில் ஒருவர், ''நீ மட்டும் முழுசா ஒரு சினிமா எடுத்திடு, உன் கால் செருப்பைக் கடித்தே தின்கிறேன்'' என்று சொல்ல, வஸந்துக்குள் ஒரு வைராக்கியம் உருவானது. சுயமரியாதை இருக்கிற எவருக்கும் இத்தகைய வார்த்தைகளைக் கேட்டால், சுண்டிவிட்டது போல எழும்பாதா ஆத்திரமும், வேகமும்! அது கொடுக்கும் உந்து சக்தியை! அது... அந்தக் கோபமும்... சாதிக்கிற வெறியும் தேவை, வெற்றி பெறுவதற்கு.

'எமோஷனல் ஆகாதே' எனச் சொல்லக் கேள்விப்பட்டிருப்போம். 'உணர்ச்சி வசப்படுதல்' எனப்படும் எமோஷன் வெறும் தள்ள வேண்டிய விஷயமா? அதில் நன்மைகளே இல்லையா? இருக்கின்றன, நிறையவே இருக்கின்றன.

அதுவே 'எனர்ஜி' எனப்படும் 'சக்தி' ஆகும். அந்தச் சக்தி அணுசக்தியைப் போல. அதை வைத்து மின்சாரமும் தயாரிக்கலாம். மற்றவற்றை அழிக்கவும் செய்யலாம். உணர்ச்சி அற்றவர்களால் சாதிக்க இயலாது.

வெறுமே கத்துவதும் சண்டை போடுவதும் உணர்ச்சி அல்ல. ஒரு விஷயத்தை மனத்தில் நிறுத்தி அதற்காக ஓய்வு ஒழிச்சல் இன்றி, உணவு மற்றத் தேவைகளை மறந்து அதை நோக்கி ஓடுகிறோமே அதுதான் நாம் சொல்லும் 'சக்தி' கொடுக்கும் உணர்ச்சி. எது எப்படியானால் என்ன? என்னாலும் முடியாது, எவராலும் இயலாது எனும் நிலைதான் உணர்ச்சிகளற்ற நிலை.

எவரஸ்ட் சிகரத்தில் முதலில் ஏறிய டென்சிங்கைக் கேட்டார்கள். ''இவ்வளவு சிரமப்பட்டு, வாழ்க்கை எல்லாம் செலவழித்து ஏன் ஏறினீர்கள்?'' அவர் சொன்னார் ''அது எங்கே இருக்கிறது?'' அதனால்தான் ஏறினேன். அது எவ்வளவு உயரமாக இருக்கிறது. அது ஒரு சவால். அதனால் அதில் ஏற வேண்டும், ஏறி வெற்றிகொள்ள வேண்டும். ஏறிய முதல் மனிதனாக வேண்டும் என்ற லட்சியம் கொண்டிருந்தேன்.'' இந்த இலட்சிய வெறி கொடுத்த உந்துதல்தானே டென்சிங்கைத் தூண்டியது? பீறிடத் துடிக்கும் நீராவிதான் புகைவண்டியை உந்தித் தள்ளும். அழுத்த அழுத்த அதன் கோபம் அதிகமாகி உலோகத்தைக் கூடக் கிழித்துக் கிளம்பும்.

ஆக... வெற்றிக்கு மனத்திட்பம்... உணர்ச்சி, வெற்றி கொள்ள வேண்டும் என்ற தீர்மானம்... ஏன் ஒரு வித வெறியே கூடத் தேவை என்பேன்.

மீண்டும் சொல்லுகிறேன். விழுவதைப் பற்றிக் கவலைப்படாமல், மீண்டும் மீண்டும் ஒரே நோக்கோடு முயற்சித்தால் எதையும் வெற்றி கொள்ளலாம்.

தாமஸ் ஆல்வா எடிசன் என்ன செய்தார்?

இவரைத் தெரியாதவர்களும் இருக்கக் கூடும். இவர்தான் எலெக்டிரிக் பல்ப் உட்பட பல்வேறு அரிய கண்டுபிடிப்புகளைச் செய்த மிகப் பெரிய விஞ்ஞானி. அவருக்குச் சொந்தமான தொழிற்கூடம் மிகப் பெரியது. அவருடைய அத்துணைக் கண்டுபிடிப்புகளின் மூலம் கிடைத்த வருமானம் முழுமையும் அதில் முதலீடு செய்யப்பட்டு, நன்கு இயங்கி வந்தது.

1914ஆம் ஆண்டு திசம்பர் மாதம் ஒரு தீ விபத்தில் அந்தத் தொழிற்கூடம் மொத்தமும் எரிந்தது. அது தீப்பிடித்து எரியும் பொழுது எடிசனின் 24 வயது மகன் எரியும் தொழிற்கூடத்திற்குள் ஓடி ஓடித் தந்தையைத் தேடினான். பின், எதிர்பாராதவிதமாக அவரைத் தொழிற்கூடத்துக்கு வெளியில் கண்டான். ஆச்சரியப்பட்டான். அவனுடைய தந்தை தாமஸ் எடிசன் தன் உழைப்பால் உருவான தொழிற்கூடம் எரிவதை அமைதியாக நின்று பார்த்துக் கொண்டிருந்தார். பின்பு அவர் சொன்னார், ''இந்தப் பேரழிவிலும் மிகப் பெரிய உதவி இருக்கிறது மகனே! நம்முடைய குறைபாடுகள் எல்லாம் இதோடு எரிந்துவிட்டன. இறைவனுக்கு நன்றி கூறலாம். இனி புதிதாய்த் தொடங்க இது ஒரு வாய்ப்பு.''

அப்பொழுது அவருக்கு வயது 67. அவருக்குத்தான் என்ன ஒரு மனத்திட்பம், மனோபாவம்! வெறுமே சொன்னவரல்ல அவர், செய்து காட்டியவரும் கூட. அடுத்த மூன்றே வாரங்களில் தன்னுடைய அடுத்த புதிய கண்டுபிடிப்பான ''ஃபோனாகிராபை''க் கொண்டுவந்தார்.

தோல்வி, அழிவு கண்டு துவளாததற்கு எப்படிப்பட்ட எடுத்துக்காட்டு எடிசன்!

அதற்குத்தான் சொல்வார்கள். It does not matter that you fall; but what matters is that how much you bounce back.

நீங்கள் கீழே விழுவது ஒரு பொருட்டல்ல; ஆனால், எவ்வளவு தூரம், எவ்வளவு விரைவாகக் குதித்து எழுகிறீர்கள் என்பது மிக முக்கியம்.

ஒரு கவிதை சொல்கிறது...

பதினோராவது முறை கீழே விழுந்தவனைப் பார்த்துப் பூமித்தாய் கேட்டாள்.

பத்துமுறை நீ எழுந்தவன் தானே என்று.

வெற்றி பெற இந்த மனோபாவம் மிக மிக அவசியம்.

## தனக்கு என்ன வேண்டும் என்று தெரியுமா?

தனக்கு என்ன வேண்டும் என்பது பற்றித் தெளிவாக இருந்தால் அதை அடைய முடியும். சிலரிடம் உள்ள பிரச்சினையே அது அவர்களுக்கே தெரியாதது தான். தனக்கு என்ன வேண்டும் என்பதே சரியாகத் தெரியாது!

நல்ல நிலைக்கு வரவேண்டும்...

நல்ல படிப்புப் படிக்க வேண்டும்.

நல்ல இடத்தில் கட்டிக் கொடுக்க வேண்டும்.

நிறைய சம்பாதிக்க வேண்டும்.

வாழ்க்கையில் முன்னேற வேண்டும்.

இந்த வாக்கியங்களில் எல்லாம் என்ன குறை? இவையெல்லாம் பாஸிடிவ் ஆன வாக்கியங்கள். ஆனால் 'எவ்வளவு' அல்லது 'எது' அல்லது 'எந்த அளவு' என குறிப்பிடப்படாததுதான் இந்த 'ஆசை வாக்கியங்களில்' உள்ள பெரிய குறைபாடு.

இன்றைக்கு நடக்க இருக்கும் கிரிக்கெட் பந்தயத்தில் நான் 50 ரன் அடிக்க வேண்டும். அல்லது 5 விக்கெட் எடுக்க வேண்டும் என்பவை குறிப்பான இலட்சியங்களாகும். இவை இலக்கை அடைவதற்குத் திட்டமிட உதவும் அளவீடுகள். 'நிறைய' ரன் அடிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டால் போதாது. 'எவ்வளவு' என்ற கனவு, ஆசை, இலட்சியம் வேண்டும்.

கணிதத்தில் நூறு சதவிகிதம், ஏப்பிரல் முதல் தேதியே கடந்த ஆண்டிற்கான வரவு செலவுக் கணக்கினை முடித்தல்; குறைந்த பட்சம் மாதம் ரூ. 1000 சேமித்தல் போன்றவை குறிப்பான இலக்குகளுக்கு உதாரணமாக அமையும்.

ஒருவர் ஒரு பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருக்கிறார். அவரிடம் நீங்கள் ''எந்த ஊருக்குப் போகிறீர்கள்?'' என்று கேட்டால், என்ன பதில் சொல்வார்? ''ஏதாவது ஒரு நல்ல ஊருக்கு'' என்று பதில் சொல்வாரா? ''எப்பொழுது போய்ச் சேருவீர்கள் என்று கேட்டால் ''இயன்ற அளவு சீக்கிரமாக'' என்றால் நாம் சிரிக்க மாட்டோமா? நிச்சயம் சிரிப்போம். எந்த ஊருக்குப் போகிறோம் என்று தெரியாமலேயே ஒருவர் பயணப்பட முடியாது.

அதுபோலத்தான் வாழ்க்கையும். சிலரிடம், நீங்கள் வாழ்க்கையில் என்ன ஆக விரும்புகிறீர்கள் எனக் கேட்டால், தெளிவான குறிப்பான பதில் வராது. ஏனென்றால் அவர்கள் அதைப்பற்றி ஆழமாக யோசித்திருக்கவே மாட்டார்கள்.

ஒரு வீரர் கிரிக்கட் பந்தயத்தில் 100 ரன் எடுக்க விரும்புகிறார். 90ஆவது ரன் அடைந்தவுடன் அவர் செயல்படுகிற / விளையாடுகிற கவனத்தைப் பாருங்கள்! அவருக்கு ஏன் அவ்வளவு கவனம்? 100 ரன் எடுக்க வேண்டும் என்ற சிரத்தை. இன்னும் எவ்வளவு வேண்டும், எத்தனை பந்து வீச்சிற்குள் எடுக்க வேண்டும் அடுத்துப் பந்து வீசப்போவது யார்? தன்னுடன் இணைந்து ஆடுபவரின் திறமை என்ன? ஓட்டமெடுப்பதில் சிறந்தவரா? அந்த 'வெற்றிக்கோடு' 'இலக்கு' தெளிவாக இருக்கும்பொழுது அவை அலசப்பட்டு, அதனால் அதற்கான முயற்சி, கவனம், கட்டுப்பாடுகள் வந்து இலக்கை அடையமுடிகிறது.

ஆக... தனக்கு என்ன தேவை என்று தெரியாதவர் அதை அடைவது சாத்தியமேயில்லை. *

*(தொடரும்)*

# IOM International Organisation for Migration

## ENHANCED REINTEGRATION PACKAGE - EXTENSION

## FREQUENTLY ASKED QUESTIONS

1. *You say £3000 per family member – is there any limit to the age of the recipient or to the number of beneficiaries in a family?*

No limit – all family members returning will be eligible. A family of five would therefore receive a total of £15,000 worth of reintegration assistance if they comply with all the conditions stipulated.

2. *Can I choose to take the extra £2000 in cash?*

Just to clarify the matter in more detail... as stated in the briefing above, £500 per family member will be available in cash at the UK airport of departure – as a relocation grant. Following consultation with the IOM field officer the remainder of the enhanced package (£1500) may be given either as reintegration assistance in kind – in addition to the existing £1000 of reintegration assistance – or as a cash payment phased over a period of six months. There will be no cash lump sum.

3. *What if I am concerned that a large sum of cash in my pocket could make me vulnerable to theft or harassment?*

We will listen carefully to returnees' concerns and ensure that the cash relocation grant is only given if they wish to receive it. IOM is used to giving the entire reintegration package in kind, not cash, so this issue poses no additional administrative problems.

4. *What happens if I apply to return by 31st October 2006 but for administrative reasons beyond my control (like hold-ups with documents by the relevant embassy) I do not travel before 31st December 2006?*


The Government has stated that to receive the enhanced package returnees must travel before 31st December 2006. (Anyone traveling after that date would of course receive the standard reintegration assistance). That is why it is very important that those who want to be sure to benefit from the enhanced package should apply as early as possible – before 31st October – to give themselves the best chance of benefiting from the enhancement.

5. *How will people know about the scheme – how are you communicating it?*

The new application date of 31st October represents an extension to an already well-published pilot enhancement scheme. However, as it did in January, the Government will again be sending letters to asylum seekers. As a result of these letters and word of mouth, diaspora communities in the UK will hear very quickly about this extension. IOM is of course communicating with its partner agencies and will be placing advertisements in relevant diaspora community media. We have no concerns about how quickly knowledge of the extended pilot scheme will reach those to whom it is likely to be of interest.


This programme is co-financed by the European Refugee fund ✱

அருள்மிகு கற்பக விநாயகர்
தேர்த் திருவிழாவில் பக்தர்கள்





அருள்மிகு கற்பக விநாயகர் சிறப்பு மலரைக் கலாநிதி சிவயோகநாதன் அவர்கள் வெளியிடுகின்றார். சைவப் புலவர் சிவஸ்ரீ வசந்த குருக்கள், ஐ.தி. சம்பந்தன் உடன் உள்ளனர்.



# VANEE AGENCY

***Global online Banking & Money Transfer Service***

## 25 Years of Experience & Trust
## Fast, Safe, Legal & Economical

**Send cash now and receive it with in minutes to our various Agent Locations all over India, Sri Lanka, Pakistan, Bangladesh, Nepal, East Asian Countries Middle East, Europe, Africa, America & Australia**

**BEST EXCHANGE RATE AND LOW CHARGES ARE GUARANTEED**

Remit / Credit money to your Bank Accounts with in Hours, Demand Draft & Cash door to door delivery with in 48 Hours to our selected Asian Countries (India, Sri Lanka, Pakistan Bangaladesh & Nepal)

## FOREIGN CURRENCY EXCHANGE

Buy & Sell currency with our New expert Foreign Exchange staff

**USD, EURO & Other Major Currencies**

**No Commission on changing currency**

***For More details Pls Visit or Contact***

**VANEE AGENCY**

317 High Street North, Manor Park,
London E12 6SL
Tel : 0208 471 8366,
Fax : 0208 552 0930
E-mail : anpan4@hotmail.com

**Mr. R. ANPANANTHAR (ANPAN)**
*Managing Director,*
*Mobile : 07932 062 843*

**MR. JOSH DANIEL**
*(Manager, Business Promotions)*
Mobile : 07891 631 891,
Valukka@hotmail.com

மணிவிழா காணும் சமய, சமூகத் தொண்டன்

# திரு. இராமநாதன்

1969இல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை நடத்திய நாவலர் தேசிய விழா, நாவலர் சிலை தேசிய பவனி ஆகிய நிகழ்வுகளில் கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கப் பிரதி நிதியாகத் திரு. இராமநாதன் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். அன்று அவரை ஓர் இளைஞனாகக் கண்டேன். இன்று, மணி விழா காணும் நாயக னாகக் காண்கிறோம். நான் அவரைச் சந்தித்த 35 ஆண்டு காலமாக அவர் ஆற்றிவரும் பணிகளால் சமய, சமூகத் தொண்டனாக மக்களால் பெரிதும் பாராட்டப்படுகிறார். மக்களின் அத்தகைய அங்கீகாரத்துக்கு அவர் ஆற்றிவரும் பின்வரும் பணிகளே ஆதாரம்.

பிரித்தானிய நாட்டில் மூன்று தசாப்தமாக வாழ்ந்துவரும் திரு. இராம நாதன் அவர்கள் அயல் நாட்டுக் கலாச் சாரத்தில் மூழ்கிவிடாது, எமது சமய, கலாச்சாரப்படி தமிழ்ப் பண்பாடுகளைப் பேணிக் காத்து வருவதோடு, எமது சமூகம் சமயநெறி தவறாது வாழ்ந்திட பிரித்தானியாவில் சைவ முன்னேற்றச் சங்கத்தை நிறுவிக் கடந்த 28 ஆண்டு களாக வளர்ந்து வரும் பெருமைக்குரியவர்.


உலக சமாதான மன்றத்தைப் பிரித்தானியாவில் உருவாக்க உதவியவர். ஈழத் தமிழர்களின் மனித வளத்தைத் திரட்டி 'உலகத் தமிழர் யார்? எவர்?' என்னும் மனிதவளக் களஞ்சியத்தை வெளிக்கொணர எடுத்த முயற்சிக்கு முன்னின்று உதவியவர்.

நாவலர் பெருமானுக்குப் பிரித் தானியாவில் சிலை நாட்ட ஆர்வத்து டன் உழைத்து வருபவர். அவருடைய மணிவிழா காலத்தில் நாவலர் சிலை நாட்டு விழா நடைபெறவிருப்பது நற் செய்தியாகும். உலகளாவிய நிலையில் நடைபெறும் சைவ மாநாடுகளில் பங்கேற்று இலங்கைத் தமிழர்களுக்குப் பெருமை சேர்ப்பவர். மேலும் பல நற் பணிகளில் ஈடுபட்டு வருபவர்.

31-8-2006 அன்று அகவை அறுபதை எய்தும் திரு. இராமநாதன் அவர்கள் நல்ல ஆரோக்கியத்துடனும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழுக்கும் சைவத்துக்கும் நற்பணியாற்றச் சுடரொளி வெளியீட்டுக் கழகம் வாழ்த்துகிறது.

அன்புடன்

ஐ.தி. சம்பந்தன்



## பெண் குஞ்சுகளே!


வெள்ளைக் கடதாசிகள்
வேடிக்கை பார்க்கையில்
கோழைகள்
குண்டை வெடித்து - எம்
குருவிக் குஞ்சுகளைச்
சிதைத்துக் கொண்டார்களா?...

அராஜகம் கொடிய அராஜகம்...

கோடி
இன்பக் கனவுகள் கண்ட
வண்ணத் தாரகைகளே!...
பெண் குஞ்சுகளே...!
வானைக் கிழிக்கின்ற
மின்னல் வெடிகளால்
உதிர்ந்துவிட்ட வர்ணங்களே!...
உங்கள் தொலை உருவங்கள்
என் உள்ளத்து உணர்வுகளை
உருக்கி உலுக்குகிறதே!...
மீண்டும்
அன்னை அங்கே
இத்தனை கருவறையை
எப்படித்தான் ஈன்றெடுப்பாள்?...
அங்கே கருகிவிட்ட
அத்தனை கருவறையும்
எத்தனை புத்திரரை
இனிமேலும் ஈன்றெடுப்பர்...?
ஐயகோ நெஞ்சம் பதறுதே...!
மூச்சு விடக் காற்றின்றி
மூச்சையாகி வருகிறதே...!
கோடை வெயிலில்
கோலம் போடும் சூரியனும்
நீந்தி அலைந்து
புன்னகைத்த நிலாவொளியும்
இங்கே இருட்டில்
கேவிக் கேவி அழுகிறதே!

நவஜோதி ஜோகரட்னம், இலண்டன்.


**COLOMBO RESIDENCY**
30, Sea Avenue Colombo-03
Tel : 0112 564 200, 011 4 71 71 71
E-mail : colomboresidency@yahoo.com



*Rooms* From Rs. 1250/-
❖ A/c ❖ Telephone
❖ TV ❖ Hot Water

கதை நேரம் - 3

# கசப்பில் கலந்த இனிப்பு



**தி.க. சந்திரசேகரன்,** மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர்

**சா**மியார் ஒருவர் ஒரு கிராமத்திற்குச் சென்றார். அங்கே அவர் இரண்டு மாதம் தங்க நேரிட்டது. அந்தக் கிராமத்தில் இருந்த ஒவ்வொரு வீட்டினரும் அவரை உணவு உட்கொள்ளத் தங்கள் வீட்டிற்கு அழைத்தனர். முதல் நாள் மதியம், அழைப்பை ஏற்று ஒரு வீட்டிற்குச் சென்றார். அவர் விருந்துக்கு உட்கார்ந்தார். ஒரு வாழை இலையில் அவருக்காக உணவு பரிமாறப்பட்டிருந்தது. இலையின் ஒரு மூலையில் சமைக்கப்பட்ட, சில பாகற் காய்த் துண்டுகள் வைக்கப்பட்டிருந்தன. சிறுவயதி லிருந்தே அவருக்குப் பாகற்காய் என்றால் பிடிக்காது. பார்த்தாலே வெறுப்புத் தோன்றும். ஆனால், ஒரு துறவிக்கான சில தருமங்கள் உள்ளன. அவர் 'தனக்கு இது வேண்டும்' 'இது வேண்டாம்' என்று சொல்லக் கூடாது. விருப்பு - வெறுப்பற்ற, வேண்டுதல் - வேண் டாமை இல்லாத, எதையும் சார்ந்து நிற்காத ஒரு வாழ்க் கையைத் துறவிகள் வாழ வேண்டும். அது மட்டுமல்ல. அவருக்காகத் தயாரிக்கப்பட்ட உணவை அவர் உட் கொள்ளாவிட்டால், விருந்தளித்த குடும்பத்தை அவர் அவமானப்படுத்தியதாகவும் பொருளாகிவிடும். ஆகவே, இந்தச் சூழ்நிலையில் பாகற் காயை விழுங்குவதை விட அவருக்கு வேறு வழியில்லை. அதற்கும் அவர் ஒரு திட்டம் தீட்டினார். முதலிலே கசப்பான பாகற்காயை விழுங்கிவிட்டு, அந்தக் கசப்புச் சுவை மறைவதற்குள் மற்றச் சுவையான உணவைப் பின்னர்ச் சாப்பிட்டால் கசப்பு அவ்வளவாகத் தெரியாது என எண்ணினார்.

இந்த எண்ணம் உருவானதும், அவர் முதலில் பாகற்காய்த் துண்டுகளை எடுத்து உண்ண ஆரம்பித்தார். இதைக் கவனித்த இல்லத்தரசியோ, 'அடடா! இவருக்குப் பாகற்காய் என்றால் மிகவும் விருப்பம் போல இருக் கின்றதே!' என்று எண்ணி மேலும் மேலும் சில துண்டு களை வைத்தார். ஒரு வழியாகச் சாப்பிட்டு முடிந்ததும், அடுத்த நாள் சாப்பாட்டிற்கு வேறு ஒரு வீட்டிற்கு அழைப்பு வந்தது. 'எப்படியோ, இந்த வீட்டிலிருந்து தப்பித்தோம்!' என்று எண்ணியபடி, மகிழ்ச்சியோடு அந்த அழைப்பைச் சாமியார் ஏற்றுக்கொண்டார்.

அடுத்த நாள் விருந்துக்குச் சென்ற போது, இலை யில் அதிகமாகப் பாகற்காய்கள் இருந்தன. 'சாமி யாருக்குப் பாகற்காய்தான் பிடிக்கும்' என்ற தகவலை முதல் நாள் விருந்தளித்த இல்லத்தரசி, இரண்டாம் நாள் விருந்தளிக்கவிருந்த பெண்மணிக்குத் தெரிவித்துவிட்டார். அதற்குப் பிறகு கிராமம் முழுக்க சாமியார் 'பாகற்காய் பிரியர்' என்ற செய்தி பரவ அவருக்குப் 'பாவக்காய் சாமியார்' என்ற பெயரும் அமைந்துவிட்டது. தினம் அவருக்குப் பாகற்காய் ஜூஸ் கிடைத்தது. பாகற் காயிலிருந்து வறுவல், பொரியல், அவியல், ஊறுகாய், வத்தல் என்று பலவகை உணவுகள் தயார் செய்யப் பட்டன. ஒரு மாதம் ஓடி விட்டது! சாமியார் கிட்டத்தட்ட பாகற்காயிலே அமிழ்ந்து விட்டார் என்று தோன்றியது!

ஆனால், அதன்பின் ஒரு விந்தை நடந்தது. திடீரென்று சாமியாருக்குப் பாகற்காயின் மீது ஓர் அலாதி யான அன்பு பிறந்தது. 'ஆஹா, பாகற்காய் எவ்வளவு இனிமையாக இருக்கிறது!' என்று எண்ண ஆரம்பித்தார். பாகற்காய் இல்லாத சாப்பாட்டை அவரால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. அதுமட்டுமல்ல, பல மாதங்களாக அவர் சர்க்கரை வியாதியால் அல்லல் பட்டு வந்தார். ஆனால் ஒரு மாதத்திற்குப் பிறகு அவரு டைய வியாதி பெருமளவுக்குக் கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டிருந்தது. உடலில் ஒரு புது மெருகும், வலுவும் கூடி யிருப்பதை உணர ஆரம்பித்தார்.

கடவுள் எதையும் வீணாகப் படைக்கவில்லை. எல்லாக் காய்கறிகளையும் போல, பாகற்காயும் ஒரு காய் கறிதான் என்பதையும், கசப்பாக இருந்தாலும் அதுவும் ஒரு சிறந்த காரணத்திற்காகத்தான் படைக்கப்பட்டது என்பதையும் அவர் புரிந்து கொண்டார். அந்தக் கசப்பிலும் நீரிழிவு நோயாளியைக் காப்பாற்றக் கூடிய சக்தி மறைந்திருப்பதையும் அவர் அறிந்து கொண்டார். கசப்பில் கலந்திருந்த இனிப்பை அவர் உணர்ந்து கொண்டார்.

**கசப்பும் இனிப்பே** நம் வாழ்க்கையில் நாம் கசப்பான, வலியூட்டக் கூடிய, வேதனையான பல அனு பவங்களைச் சந்திக்கின்றோம். ஆனால், அவை அப்படிப் பட்டவைதாம் என்பது நம்முடைய மேம்போக்கான எண்ணமே!

பெரும்பாலான நேரங்களில் கசப்பான, கடுமை யான, வேதனையான இந்த அனுபவங்களே நம்முடைய வாழ்க்கையை மாற்றக்கூடியவைகளாக அமைகின்றன. மிகச் சிறந்த வாழ்க்கை உருவாவதற்குக் காரணிகளாக வும் அமைந்துவிடுகின்றன.

ஒரு மாணவனுடைய வாழ்க்கையில் விடியற் காலையில் எழுவதும், இரவு நெடுநேரம் கண் விழித்துப் படிப்பதும், பாடப் புத்தகங்களில் நேரத்தைச் செலவிடு தலும், தேர்வுக்காகத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள் வதும் கடுமையான, வேதனையான அனுபவங்கள். ஆனால் இத்தனைக்கும் பிறகு அவன் தேர்வில் வெற்றி பெற்று, ஒரு நல்ல வேலையில் அமரும்போது அவன் அடைவது மகிழ்ச்சிதானே!

புகை பிடிக்கும்போது ஓர் இன்பம்! மது அருந்தும்போது மட்டற்ற மகிழ்ச்சி தரும் போதை! கொழுப்புச் சத்துமிக்க உணவை உட்கொள்ளும் போது, எல்லையில்லா உவகை! ஆனால் இவையெல்லாம் தொடர்ந்தால் ஒரு நாள் உடலுக்கு வருவது... ஓயாத தொல்லை!

'துன்பமும் - இன்பமும்' பற்றிய ஒரு கொள்கை உண்டு. எது தொடக்க காலத்தில் துன்பத்தை அளிக் கின்றதோ, அது பிற்காலத்தில் இன்பத்தைக் கொடுக்கும். எது தொடக்க காலத்தில் இன்பத்தை அளிக்கின்றதோ, அது பின்வரும் நாள்களில் துன்பத்தைக் கொடுக்கும்.

ஆகவே, துன்பங்களைச் சுமக்கக்கூடிய பக்குவம் நமக்குத் தொடக்கத்திலேயே வந்து விட்டால், நிச்சயம் விரைவிலேயே இன்பமான சூழ்நிலைகளை அடைவோம் என்பது உறுதி. இவை எல்லாவற்றுக்கும் மேலாக இன்னும் ஒரு செய்தி! ஏன் நாம் துன்பங்களைத் துன்பங் கள் என்று எண்ணி, அவை இன்பங்களாக மாறும் வரை காத்திருக்க வேண்டும்? பாகற்காயை ஏன் கசப்பாகவே எண்ண வேண்டும்? அதுவும் ஓர் இனிய சுவை என்று ஏற்றுக்கொண்டால் சிக்கல் எங்கே வருகிறது? இப்படி எடுத்துக் கொண்டால் எல்லாம் இன்பமயமே!

அன்று நீங்கள் சந்தித்த எந்த வேதனையான அனுபவங்கள் இன்று உங்களுக்கு மகிழ்வான வாழ்க் கையைக் கொடுத்துள்ளன? புதிய துன்பங்களை ஏற்றுக் கொள்ள இன்று நீங்கள் தயாரா? ✱

(தொடரும்)

# அருள்மிகு கற்பக விநாயகர் ஆலயம்

# SHRI KARPAHA VINAYAGAR TEMPLE

**2-4, Bedford Road, Walthamstow, London E17 4PX**
**Tel: 020 8527 3819** Charity No: 1092252

## ஐந்தாம் ஆண்டு
## வருடாந்த மகோற்சவ
## விஞ்ஞாபனம் - 2006

## 25.08.06 முதல்
## 06.09.06 வரை

திருவாக்கும் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் கை

| | |
|---|---|
| கொடியேற்றம் | : 25.08.06 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணி |
| இரதோற்சவம் | : 03.09.06 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி |
| தீர்த்தோற்சவம் | : 04.09.06 திங்கட்கிழமை காலை 10.45 மணி |

25.08.06 முதல் 06.09.06 வரை நாளாந்தம் இரவு 7.30 மணி முதல் 8.30 மணி வரை பள்ளத்தூர் செம்மனச்செல்வி பேராசிரியர் டாக்டர் சரஸ்வதி இராமநாதன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

தினமும் காலையும் மாலையும் உலகப்புகழ் தவில் மேதை காலஞ்சென்ற தவில் வித்துவான் தட்சணாமூர்த்தியின் மைந்தன், ஈழத்தின் பிரபல தவில் வித்துவான் உதயசங்கர் கேதீஸ் குழுவினரின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறும்.

உற்சவ காலங்களில் பக்தர்கள் செலுத்தும் காணிக்கைப் பணம் அனைத்தும் அண்மையில் திருகோணமலையில் யுத்தத்தினால் பாதிப்புற்ற தமிழ் மக்கள் துயர் தீர்க்க தமிழகர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக அனுப்பி வைக்கப்படும்.

IOM International Organization for Migration

# IOM Can help you return to Sri Lanka

**if**

- You are or have been an asylum seeker,
- You have overstayed your visa
- You have no legal status in the UK





**If you are an asylum seeker,
IOM Can assist you Further
When You are back in Sri Lanka
with any of the Following :**

- Small business Start up
- Vocational training & apprenticeship
- Education courses for your and /or our Children

**For more information, Call IOM free on 0800 783 2332 or visit IOM's website.**

www.iomlondon.org

**This programme is co-financed by the European Refugee fund**